உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவ சமய தீபிகை

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1



பதிப்பாசிரியர் :

**தி. விநாயக முதலியார்**
குமரப்ப முதலி தெரு, நுங்கம்பாக்கம்
மதராஸ்

மை] 1935 [விலை 4 அணா.

# பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| | முகவுரை : | ... | iv |
| 1. | திருஞான சம்பந்த சுவாமிகள் சரித்திரம் | ... | 1 |
| 2. | ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம் | ... | 23 |
| 3. | திருநாவுக்கரசு நாயனார் சரித்திரம் | ... | 57 |
| 4. | ஸ்ரீ மாணிக்கவாசகர் சரித்திரம் | ... | 65 |
| 5. | ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் சரித்திரம் | ... | 116 |
| 6. | சைவசமய விளக்க வினாவிடை | | |
| | ,, ,, *முதற் பிரிவு* | ... | 147 |
| | ,, ,, *இரண்டாம் பிரிவு* | ... | 160 |
| | ,, ,, *மூன்றாம் பிரிவு* | ... | 170 |
| | ,, சுப்பிரமணியர் சரித்திரம் | ... | 184 |
| | ,, சிவதரிசன விதி | ... | 191 |

# சைவ சமய தீபிகை

'சைவ சமயமே சமயம்' என்பது பெரியோரின் திருவாக்கு. அச் சமயத்தினை நந் தமிழகமெங்கும் தழைக்கச் செய்தோர் பலராவர். அன்னவரில் தலை சிறந்தோர் நால்வராம். அந்நால்வரும் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் எனப்படுவர். நால்வரில் முதல் மூவர் தொடுத்துள்ள பாமாலையே தேவாரம். தெய்வ அன்பு ததும்பும் அப்பாமாலை தமிழ் மறை எனப்படும். தேவாலயமெல்லாம் தமிழ் மறை முழங்கும். நால்வரில் மூவர்போக, மற்றையவர் பாடியது திருவாசகமாம். திருவாசகத்தினுக்கு உருகாதார் ஒருவரு மிரார்.

இனி, சைவ சமயத்தின் சிறப்பினுக்கு முதல் காரணம் சமரஸமே. அத்தகைய சமரஸ நிலையில் நின்று, சகலரையும் மெச்சும் வண்ணம் பாமாலை தொடுத்த பெரியார் தாயுமானவர். சுவாமிகள் எனவும் இவரை அழைப்பர். இவரது பாக்களின் சொன்னயமும் பொருள்நயமும் மக்களின் மனத்தை உருக்கும். வேதாந்த சித்தாந்த உண்மைகளும் இவர் பாக்

களில் ததும்பிநிற்கும்; தமிழ்ச்சுவையும் திரண்டொழுகும். தெருவீதியில் திரிந்து பிச்சை புகுவோரும் இவரது பாக்களைப் பாடி மகிழ்ந்து மகிழ்விப்பர்.

அப்பெரியார்களின் திருநட்சத்திரங்களை அன்பர் அனைவரும் கொண்டாடுகின்றனர்; அன்னவரின் சிலைகளுக்கும் படங்களுக்கும் அபிஷேக ஆராதனை செய்து, திருவீதிப் புறபபாடும் பண்ணுகின்றனர். அவர்களின் சரிதங்களோ பற்பல நூல்களில் பரந்து கிடக்கின்றன. அச்சரிதங்களை வரன்முறையாக அறிவார் வெகு சிலரே. சரகரிக்க நேரமிருப்பினும் குளிர்காய நேரமில்லாத காலம் இது. ஆதலின் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் நோக்குடன இந்நூல் எழுந்துளது.

ஐந்து பெரியார்களின் அருஞ்சரிதத்துடன் "சைவ சமய விளக்க வினவிடை" யும் இந்நூலில் அடங்கியுளது. சைவம் சைவம் என்று பலரும் பேசுகின்றனர்; சைவர் சைவர் என்றும் தம்மை அழைத்துக் கொள்ளுகின்றனர். அன்னவரிலே, சைவ சமயத்தின் சிறப்பினையும் இயல்பினையும் உணர்வார் எத்துணையவர்! சைவத்தின் இயல்புகளும் சிறப்புக்களும் எண்ணிறந்த நூல்களில் கடல்போல் பரந்து மலிந்து கிடக்கின்றன. அந்நூல்கள் அனைத்தும் ஒரு

வருக்குக் கிடைத்தலும், கிடைப்பினும் அவற்றைப் படித்துணருதலும் அருமை.

ஆதலின் சைவ சமயக் குரவரும் துரந்தரருமான பெரியார் பலர் புகன்றிருக்கும் அரிய பெரிய கருத்துக்களை எல்லாம் திரட்டி உருட்டிக் கைதனில் அளிக்கும் திரட்டுப்பால்போல் உளது சைவ சமய விளக்க வினு விடை எனும் பாகம். அரும் பெரும் விஷயங்களை அனைவரும் நன்கு உணர்ந்து கொள்வதற்கு ஏற்ப, இனிய நடையில் அமைந்திருத்தல் போற்றத்தக்கதாம். சர்க்கரை, சர்க்கரை என்று வாயினுல் சொன்னுல் தித்திக்குமா? சர்க்கரையையே நாவில் போட்டு உருசி பார்க்கச் சொல்வதுபோல், நமது அன்பர் திருவாளர் விநாயக முதலியார் இந்நூலை, சைவப் பெருமக்கள் பால் சமர்ப்பிக்கின்ருர்.

இந்நூல் உருவில் சிறியதாயினும், உள்ளுறைப் பொருளிலோ மிகவும் பெரியதாம். யாவரும் எளிதில் வாங்கி வாசிக்கும் வண்ணம் அடக்கமான விலை போட்டிருத்தல் மெச்சத்தக்கது. இதுபோன்ற பல நூல்களை அடக்க விலையில், அழகிய அச்சில், உயர்ந்த கடிதத்தில், நம் பதிப்பாசிரியர் பிரசுரிக்கவேண்டும் என்பது நமது பிரார்த்தனை. பரோபகாரமான இம்முயற்சியில்

சைவப் பெருமக்களும் தமிழபிமானிகளும் நமது முதலியாருக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து, இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கே எய்துவார்களாக! சுபம்.

மதராஸ்,
15–5–1935.

இங்ஙனம்,
M. S. சுப்பிரமணிய ஐயர்.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:

தி. விநாயக முதலியார்,
11, குமரப்ப முதலி தெரு,
நுங்கம்பாக்கம், மதராஸ்.

---

இன்டர்நேஷனல் பிரின்டிங் ஒர்க்ஸ்,
9, ஸ்டிரிங்கர்ஸ் தெரு,
ஜ்யார்ஜ்டவுன், மதராஸ்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தசுவாமிகள் சரித்திரம்

சோழமண்டலத்திலே சீர்காழி என ஒரு திவ்விய ஸ்தலம் உண்டு. அந் நகரிலே பிராமண குலோத்துங்கரான சிவபாதவிருதயருக்கு அவர் மனைவி பகவதியார் வயிற்றில் ஒரு பிள்ளை பிறந்தது. அது ஆளுடைய பிள்ளையாரென்ற திருநாமத்தோடு வளர்ந்து மூன்றும் வயது ஆகையால் தந்தையார் தூக்கிப்போய்த் தீர்த்தக் கரையில் உட்காரவைத்துவிட்டு ஸ்நானஞ் செய்யப் போனார். அப்போது பிள்ளையாருக்குப் பண்டையவுணர்ச்சி உண்டாயிற்று; உண்டாகவே சுவாமியினுடைய திருவடியைப் பிரிந்திருக்கும் மனவருத்தத்தையுட்கொண்டு ஆலய சிகரத்தை நோக்கி, "அம்மே யப்பா" என்று அப்பிள்ளை அழுதது; அதனைக்கண்ட தோணியப்பர் திருவுளமிரங்கித் தேவியாருடன் பிள்ளையாரை யணுகினார். தேவி திருமுலைப்பாலுடன் ஞானமுதமும் கலந்து பொற்கிண்ணத்தில் தந்தருளினாள். பிள்ளையார் அதனையுண்டு அழுகை தீர்ந்திருக்கையில், பிதாவந்து பார்த்துப் பால் கொடுத்தோர் யாரென்று

பயமுறுத்தினர்; பிள்ளேயோ இவர் கொடுத்தாரென்று கைவிரலாற் சுட்டி "தோடுடையசெவிய" னென்னும் பதிகமோதிச் சுவாமியைக் காட்டப் பிதா ஆனந்த மடைந்தார்.

அன்று முதல் அப்பிள்ளை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் என்னுந் திருநாமங்கொண்டு, பிதாதோளிற் பொருத்துச்செல்ல ஆலயஞ் செல்வதும் தோணியப்ப ரைத் தரிசிப்பதும் திருப்பதிகமோதுவதுமாய் இருந் தனர். பின்பு, திருக்கோலக்காவென்னுந் தலத்திற்கு எழுந்தருளிச் சுவாமி பொற்றாள மருளப்பெற்றுப் பதிகமோதித் துதித்துத் தமதூருக்கு வந்து சில நாளிருந்து, மீண்டும் திருநனிப்பள்ளியில் எழுந்தருளி யிருந்தார். திருத்தலைச்சங்காட்டிலுள்ள பிராமணர் வந்து வணங்கித் தம்முடைய தலத்திற்கு எழுந்தருள வேண்டுமென, அங்குச் சென்று சிவதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடியருளி, அங்கிருந்து புறப் பட்டுத் திருவலம்புரமுதலிய சிவஸ்தலங்களை வணங் கிக்கொண்டு, பின்பு சீர்காழிக்குச் சென்று, அங் கிருந்து புறப்பட்டுத் தருமபுரத்திருப்பள்ளி முதலிய ஸ்தலங்களிற் சென்று சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம்பாடித் துதித்து, மீளவுஞ் சீர்காழிக்கெழுந் தருளித் தோணியப்பரைத் தரிசனஞ்செய்து வாழும் போது, திருநீலகண்டப்பெரும்பாணர் பத்தினியாரு

டன் வருகையை கேட்டுச்சென் றழைத்துவந்து தோணி யப்பர் ஆலயத்துக் கோபுரவாயிலுக்குச் சமீபத்தில் நிறுத்தித் தரிசனஞ்செய்வித்து, அவர்க்கோர் இடங் கொடுத்து விருந்திட்டு உபசரிக்கத் திருநீலகண்டப் பெரும்பாணர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரை நோக்கித் தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங் களை அடியேன் யாழிலிசைத்து வாசிக்கக் கட்டளையிட் டருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார் திருவுளமகிழ்ச்சியோடுடன்பட்ட அந்நாள் முதல் திரு நீலகண்டப் பெரும்பாணர் அவ்வாறே திருப்பதிகங்களை யாழி லிசைத்துப்பாடித் தம்மைவிட்டுப் பிரியாதிருந்த னர்.

ஆளுடையபிள்ளையார், நடேசரைத் தரிசிக்கவேண்டு மென்னும் அன்பு மேன்மேலும் பெருகச் சிதம் பரத்துக்கு எழுந்தருளி, எழுநிலைக் கோபுரத்தைக் கண்ட அளவில் பூமியில் விழுந்து பலமுறை பணிந் தெழுந்து சந்நிதியிற்சென்று பிரதட்சிணஞ் செய்து பொன்னம்பலத்தின்கண் ஆநந்த தாண்டவஞ் செய்தரு ளும் சபாநாதரைத் தரிசித்துத் திருப்பதிகம்பாடித் துதித்துக் கண்களில் ஆநந்தபாஷ்பம் பெருகப் பரவச மடைந்து சற்றுத்தெளிந்து விடைபெற்றுச் சந்நிதியை விட்டு அரிதிற்புறம்போந்து, அங்கிருந்தகற் கஞ்சித் திரு வேட்களத்துக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ் செய்து

திருப்பதிகமோதித் துதித்து அத்தலத்திலேயே வீற்றிருந்து நடேசரைத் தரிசனஞ் செய்துகொண்டிருந்தனர்.

அங்கு வாழுநாளில் ஓர்நாள் தில்லைவாழந்தணர், நடேசரை அருச்சிக்கத் தக்கபேறு பெற்றார்களேயென்னுங் கருத்தோடு சிதம்பரத்துக் கெழுந்தருளினபோழ்து, அவ்வந்தணர்கள் சிவகணங்களாக இருக்கக் கண்டு வணங்கி அவ்வற்புதத்தைத் திருநீலகண்டப் பெரும்பாணருக்குக் காட்டியருளிச் சிற்சபையிற் சென்று சபாநாதரைத் தரிசித்துத் திருப்பதிகம்பாடித் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறம்போந்து, பாணர் வேண்டுகோளால் திருவெருக்கத்தம்புலியூர் முதலிய சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு ஆங்காங்குத் திருப்பதிகமோதித் துதித்துப் பின்னர் விருத்தாசலத்திற் கெழுந்தருளி, சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடிச் சாத்தி அங்குச் சில நாள் வீற்றிருந்தார்.

பின்பு அவர் புறப்பட்டுத் திருப்பெண்ணாடகமென்னுந் தலத்திலே தூங்கானைமாடமென்னும் ஆலயத்துட் சென்று, சிவபெருமானை வணங்கித் திருப்பதிகம்பாடித் துதித்து அங்கிருந்து புறப்பட்டுத் திருவடிவருந்த மெல்லமெல்லச்சென்று, திருமாறன்பாடி யென்னுஞ் சிவஸ்தலம் சேர்ந்ததும் பொழுதுபட்டதனால், அங்குத் திருக்கூட்டத்துடன் வீற்றிருக்கையில், திருவாத்துறை

யில் எழுந்தருளிய தம்பிரானார் திருஞ்ஞானசம்பந்த மூர்த்திநாயனார் சீறடிவருந்த நடந்துவந்த வருத்தம் பொறாது முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னம் முதலியன கொடுத்தருளவேண்டுமென்று திருவுளங்கொண்டு, அப்பதியின்கணுள்ள அந்தணர் முதலிய சிவனடியார்களுக்குச் சொப்பனத்தி லெழுந்தருளிக் கட்டளையிட்டருள, அவர்களனைவரும் ஒருங்குகூடி ஆலயத்துட்சென்று பார்த்தபொழுது, எம்பிரானார் அருளியபடி இருக்கக்கண்டு மகிழ்ந்து, அவற்றை எடுப்பித்துத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருமுன்பு கொண்டுபோய் வைத்துச் சுவாமி திருவாய்மலர்ந்தருளியதையும் விண்ணப்பஞ்செய்யக் கேட்டுத் தம்பிரானார் கட்டளையை மறுக்க அஞ்சித்தொழுது முத்துச் சிவிகையி லெழுந்தருளித் திருவரத்துறைக்குச் சமீபத்திற் சென்று சிவிகையை விட்டிறங்கிச் சந்நிதியிற்போய்ச் சுவாமியை வணங்கித் திருப்பதிகமோதித் துதித்துச் சிலநா ளங்கிருந்தார்.

மீண்டும் சீர்காழிக் கெழுந்தருளும்போது, திருப்பழுவூர் முதலிய சிவஸ்தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடியருளிச் சீர்காழியிற் சென்று தோணியப்பரைத் தரிசித்து வணங்கித் திருப்பதிகமோதிச் சாத்தி அங்குப் பிதாவானவர் தமக்கு உபநயனஞ் செய்விக்கப் பெற்று, வேதாகமம் முதலியவைகளனைத்தும்

ஓதாதுணர்ந்து பஞ்சாட்சரப் பதிகந் திருவாய் மலர்ந்தருளி வாழுநாளில், திருநாவுக்கரசுநாயனுர் எழுந்தருளுவது கேட்டு எதிற்கொண்டு சென்றபோது, அவர் பூமியில் விழுந்து வணங்க, அப்போது எழுந்திருமென்று தமதிரண்டு திருக்கரங்களாலும் எடுத்துபகாரத்தோடு அழைத்துக்கொண்டு சந்நிதியிற்சென்று தோணியப்பரை இருவரும் தொழுது துதித்து அங்கெழுந்தருளியிருந்தனர்.

திருநாவுக்கரசுநாயனுர் தம்மோடு சிலநாளிருந்து நீங்கிய பின்னர்த் திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் காலந்தோறும் தவருது தோணியப்பரைத் தரிசனஞ்செய்து திருமொழிமாற்று முதலிய சித்திரக்கவிப் பதிகங்கள் ஓதித் துதித்து வாழுநாளில், இன்னுமுள்ள மற்றைச் சிவஸ்தலங்கட்குச் சென்று சிவ பெருமானைத் தரிசிக்க வேண்டுமென்று திருவுளங்கொண்டு தந்தையார்க்கு அறிவிக்க, தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி, வேள்வி செய்யப் பொருள்வேண்டும், ஆகையால் நானுங்கூட வருகிறேனெனச் சம்மதித்துப் புறப்பட்டுத் திருக்கண்ணார்கோயில் முதலிய பற்பல சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ்செய்து திருப்பதிக மோதித் துதித்துத் திருப்பாச்சிலாச்சிராமத்திற்கு எழுந்தருளும்போழ்து, அங்குக் கொல்லி மழவனென்னு மோரரசன் தன் புதல்விக்குற்ற முயலகநோய்

எவ்வகையானுந் தீராமையால் மனவருத்தமுற்று, சைவ சமயப் பற்றுள்ள சந்ததி யாகுகையால் அக்கன்னிகையைச் சிவசந்நிதானத்திற் கொண்டுவந்து கிடத்தி வைத் தங்கிருந்தபோது, தன்னுட்டுக்குள் திருஞான சம்பந்தமூர்த்திநாயனுர் எழுந்தருளுவதைத் திருச் சின்னவோசையா லுணர்ந்து நகரத்தை அலங்கரிக்க உத்திரவு செய்து, தான் எதிற்கொண்டு சென்று வணங்கினன்.

ஆளுடையபிள்ளையார் அவனை அழைத்துக் கொண்டு அவன் நகருக்கு எழுந்தருளிக் கோபுர வாயிலின் புறத்து முத்துச் சிவிகையை விட்டிழிந்து பணிந்து, ஆலயத்துட்சென்று பிரதக்ஷிணஞ் செய்து சந்நிதானத்துட் செல்லுகையில், அக்கன்னிகை பிரேதம்போற் கிடத்தலைநோக்கி, இஃதியாதென்று வினவ, அவ்வரசன் ஆளுடையபிள்ளையாரைத் தொழுது அடியேனுடைய புத்திரி, இவளுக்குண்டாய முயலகநோய் தீராமையால் சிவபெருமான் திருவுளமெப்படியோ, அப்படியாகட்டுமென்று இங்குக் கிடத்தினேனென்றான். அங்ஙனம் கூறியது கேட்டுத் திருவுளமகிழ்ந்து கிருபை கூர்ந்து "துணிவளர் திங்கள் துலங்கிவிளங்க" என்னும் திருப்பதிகமோதித் துதித்த வளவில், அக்கன்னிகை அந்நோய் நீங்கி யெழுந்து தன் பிதாவினருகிற்சென்று நின்றனள். அவ்வரசன் கண்டு பரமாநந்த மடைந்து

தன் புதல்வியோடு தானும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் திருவடிகளை வணங்கி நிற்கக்கண்டு திருவருள்புரிந்து பின்னர்ச் சந்நிதியிற்சென்று பணிந்து பதிகமோதித் துதித்துச் சிலநா ளங்கிருந்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய்மலை, திருக்கொடிமாடச் செங்குன்றூர், திருநசை முதலாகிய சில சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனம்பண்ணித் திருப்பதிகமோதித் துதித்து மீண்டும் திருக்கொடிமாடச் செங்குன்றூர்க் கெழுந்தருளியிருந்தார்.

குளிர்காலம் வர அக்காலத் தங்கிருப்போர்க்கு ஆண்டுதோறும் உண்டாகும் நளிர்சுரந் தமது திருக்கூட்டத்தார்க்கும் எய்தியதுநோக்கி "அவ்வினைக் கிவ்வினை" என்னும் திரு நீலகண்டப் பதிகம்பாடிய மாத்திரத்தில், அச்சுரநோய் தம் திருக்கூட்டத்தாரை விட்டோடியதன்றி அந்நாட்டி லுள்ளாரையும் விட்டொழிந்தது. நாயனார் சிலநா ளங்கிருந்து பின்பு புறப்பட்டுத் திருப்பாண்டிக்கொடிமுடி, திருக்கருக்காவூர் முதலிய தலங்கள் பலவற்றினுஞ்சென்று, சுவாமி தரிசனம்பண்ணிப் பதிகமோதித் துதித்து விடைபெற்றுக்கொண்டு திருவலஞ்சுழிக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ்செய்து பதிகமோதித் துதித்து அங்கு வீற்றிருக்குநாளில், முதிர்வேனிற்காலம் வந்தது. அங்ஙனமா

கத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர் திருச்சத்திமுற் றத்து எழுந்தருளிய சிவபெருமானைத் தரிசிக்கவேண்டு மென்னும் அன்பு மிகுதியால் அங்குச்சென்று கைலாச பதியைத் தொழுது பதிகமோதித் துதித்து விடைபெற் றுக்கொண்டு திருப்பட்டீசுரத்துக் கெழுந்தருளினூர்.

அப்போது, அத்தலத்தி லெழுந்தருளிய தம்பி ரானூர் ஆஞ்ஞையினுல் திருஞானசம்பந்தமூர்த்தி நாய னூர்க்குத் தோன்றுதபடி பூதகணங்கள் முத்துப்பந்தர் கொண்டெய்தி, இஃது வெயில்வெப்பம் தணிப்பதற்குச் சிவபெருமானுல் கொடுக்கப்பட்ட தென்று சொல்லு மொலியும் பந்தரும் ஆகாயத்தில் தோன்றக் கண்டு, இஃதும் நம்கடவுள் ஆஞ்ஞையாயின் ஏற்றுக்கொள்ளத் தக்கதேயென்றிசைந்து மகிழ்ந்து, சிவிகையை விட்டி ழிந்து பணிந்த அளவில், அம்முத்துப் பந்தலின் கால் களைப் பரிசனம் தாங்கிவரத் திருப்பட்டீச் சுரத்துக் கெழுந்தருளி ஆலயத்திற்சென்று சிவபெருமானைத் தரிசித்துப் பதிகமோதித் துதித்து அங்குச் சிலநாள் வைகிப் பின்பு திருவாறை, வடதளி முதலாயுள்ள பற்பல சிவஸ்தலங்கட்குச் சென்று சிவபெருமானைத் தொழுது பதிகமோதித் துதித்துத் திருவாவடுதுறைக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ் செய்து பதிகமோதித் துதித்து அங்கு வீற்றிருந்தனர்.

அப்பொழுது சிவபாதவிருதயர், பிள்ளையாரை

நோக்கி வேள்விசெய்தற்கு ஆகுநாள் சமீபித்தது ஆதலால் அதற்குப் பொருள் வேண்டுமென்று கூற, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஆலயத்துட்சென்று சிவபெருமானைத் திருப்பதிகமோதித் துதித்த அளவில், சிவாக்கினையால் ஆயிரம் பொன்னடங்கிய ஒரு கிழியை ஓர் பூதங் கொடுபோந்து கோயில் பலிபீடத்தின்கண் வைத்துத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்க் கெதிரில் நின்று, இப்பொற்கிழி எடுக்குந்தோறும் குறைவுபடாது, இதைச் சிவபெருமானார் தேவரீருக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டதினால் கொண்டுவந்து வைத்தேனென்று சொல்ல, பிள்ளையார் அதைப் பலமுறை பணிந்தெடுத்துச் சிரமேற்றாங்கிப் பிதாவின் கையிற் கொடுத்து, நீர் செய்யும் வேள்விக்கேயன்றிச் சீர்காழியிலுள்ள அந்தணர்செய்யும் வேள்விகளனைத்திற்கு முதவுமென்று கொடுத்துப்போக்கித் தாம் அங்குச் சிலநாளிருந்தார். பின்பு, புறப்பட்டுத் திருக்கோழம்பம் முதலிய சில தலங்கட்குச்சென்று சிவதரிசனஞ்செய்து தருமபுரத்துக் கெழுந்தருளினபோது, திருநீலகண்டப் பெரும்பாணர் தம் முறவினர் எதிர்கொண்டுவந்து வணங்க அவர்களை நோக்கி, பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளுந் திருப்பதிகங்களை யாழிலமைத்து வாசிக்கும் அரியபேறு பெற்றேனென்று கூறக்கேட்டு, நீர் யாழோடு பொருத்தி வாசிப்பதனால் அப்பதிகங்களுலகமெங்கும்

விளக்கமுற்றிருக்கின்றன என்றுரைக்கப் பாணர் அச்சமுற்று, உடனே சுவாமிகள் சந்நிதானத்தில் விண்ணப்பஞ்செய்து, யாழிற் பொருந்தாவண்ணமோர் திருப்பதிகங் கட்டளையிட்டருள வேண்டுமெண, அவ்வாறே ஆளுடையபிள்ளையார் "மாதர்மடப்பிடி" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். அதைப் பாணர் யாழிலமைத்துப்பாட இசையாமையால் மனநடுங்கி இந்த யாழினாலன்றோ சுவாமிகளருளிச்செய்த திருப்பதிகத்தினிசையை யாழிற் பொருத்திப் பாடுவேன் என்று சொல்ல நாவிசைந்ததென்று அதைச்சிதைக்க ஓங்கியபோது, பிள்ளையார் தடுத்தருளி, பெரும்பாணரே நீர் திருப்பதிக இசையை உம்மாலியன்றமட்டும் இதிலமைத்துப் பாடுமென்று யாழியைவாங்கி வாசித்துக காட்டிக் கொடுத்தருளினார். பாணர் பிள்ளையாரைத் தொழுது யாழியைவாங்கிச் சிரமேற் கொண்டனர். பிறகு திருஞானசம்பந்தப் பிள்ளையார் தருமபுரத்தை விட்டுப் புறப்பட்டுச் சில சிவஸ்தலங்கட்குச் சென்று, சிவதரிசனஞ் செய்துகொண்டு திருச்சாத்தமங்கைக்கு எழுந்தருளின பொழுது, அந்தத் திருப்பதியினின்று வந்து தம்மை வணங்கிய திருநீலநக்க நாயனாரோடு அயவந்தி என்னும் ஆலயத்திற்சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு, அந்நாயனாரின் திருமாளிகைக்குப் போய்த் திருவமுதுசெய்து, அங்குச் சிலநாளிருந்து

பயணமாகித் திருநாகைக்காரோணம் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு எழுந்தருளும்போது, திருச்செங்காட்டங் குடியிலிருக்குஞ் சிறுத்தொண்ட நாயனார் எதிர்கொண்டுவந்து வணங்கி, அழைத்துக் கொண்டுபோகப் போய்க் கணபதீச்சரத்திற் சிவதரிசனஞ் செய்துகொண்டு அங்கிருந்தார்.

இருக்கும்பொழுது ஒருவணிகன் வழிச்செல்வோனாய் ஒரு கன்னிகையை உடன்கொண்டு போந்து கோயிலுக்குப் புறத்திலே ஒரு மடத்திலே நித்திரை செய்யும்போது, அவன் பாம்புகடித் திறந்தான். அது கண்டு அக்கன்னிகை பூமியில்விழுந்து புரண்டழுது கொண்டிருந்தாள். அதைச் சிவதரிசனத்துக் கெழுந்தருளிய ஆளுடைய பிள்ளையார் கேட்டுத் திருவுளமிரங்கி அவளுக்கு அருள் செய்யும்பொருட்டு அடியவர்களோ டெழுந்தருளி வந்து நின்று, அவளை நோக்கி, "பயப்படாதே, நிகழ்ந்த சமாசாரத்தைச் சொல்" என்றருளிச்செய்தார். கன்னிகை கண்ணீர் பெருகப் பிள்ளையாரின் திருவடியில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, "வைப்பூரிலிருக்கும் என் பிதாவாகிய தாமனென்பவனுக்குப் புத்திரிகள் எழுவர், அவர்களில் யான் நீங்கலாக மூத்தோர் அறுவரையும் தன் சகோதரியின் புத்திரனாகிய இவனுக்கே விவாகஞ் செய்து கொடுக்கிறேனென்று பலமுறை சொல்லித்

திரவிய அபேட்சையால் பிறருக்கு விவாகஞ்செய்து விட்டான்; அது கண்டு வருத்தமுற்ற இவனுக்கே மனைவியாகவேண்டுமென்று கருதித் தாய் தந்தையர்க்குத் தெரியாது இவனுடன் புறப்பட்டுவந்தேன், இவன் இங்குப் பாம்புகடித்து இறந்தான், அடியேன் ஆதரவற்றிருக்கின்றேன், தேவரீர் எழுந்தருளப்பட்டதனால் அடியேன் சஞ்சலந்தீர்ந்தது" என்றாள். ஆளுடைய பிள்ளையார் கிருபைகூர்ந்து விஷம் நீங்கும்பொருட்டு "சடையாயெனுமால்" என்னுந் திருப்பதிகமோதி அவனைப் பிழைப்பித்து, அவனுக்கு அக்கன்னிகையை மணஞ்செய்வித்துப் போக்கி, அங்கு வீற்றிருந்தார்.

இருக்கும் நாளில் சிறுத்தொண்ட நாயனார் வந்து பிரார்த்திக்க, நம் மீண்டும், பிள்ளையார் திருச்செங்காட்டங் குடிக்கெழுந்தருள விருப்பமுற்றுத் திருமருகற்கோயிலிற் சென்று வணங்கிச் சிவபெருமானார் தாம் திருச்செங்காட்டங்குடியி லிருக்கின்ற திருக்கோலத்தை அவருக்கு அங்கே காட்டியருள மனமகிழ்ந்து, "அங்கமும்வேதமுமோதுநாவர்" என்னுந் திருப்பதிகம்பாடி அங்குச் சிலநாளிருந்து புறப்பட்டுப் பற்பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப்புகலூருக்குச் சமீபித்து, அப்பதியினின்றுவந்து தம்மை எதிர்கொண்டு வணங்கிய முருகநாயனார் முதலிய அடியார்களோடு திருக்கோயிலுட்சென்று சிவதரிசனஞ்

செய்து, முருகநாயனாரின் திருமடத்துக்கெழுந்தருளி அங்கு வீற்றிருக்குநாளில் திருநாவுக்கரசுநாயனார் திருவாரூரை வணங்கித் திருப்புகலூருக் கெழுந்தருளுகின்றார் என்னும் செய்திகேட்டு எதிற்கொண்டு வர, திருநாவுக்கரசுநாயனாரும் எதிற்கொண்டு வந்தனர்; இருவரும் ஒருவரையொருவர் வணங்கி மகிழ்ந்தனர்.

அப்பொழுது ஆளுடைய பிள்ளையார் மருணீக்கியாரைநோக்கி, "அப்பரே, நீர்வருநாளில் திருவாரூரிலே நிகழ்ந்த சிறப்பைச் சொல்லும்" என, வாகீசர் திருவாதிரைச் சிறப்பைத் திருப்பதிகத்தாற் சொல்லியருளினார். பிள்ளையார் அதுகேட்டு, நானங்குச்சென்று சிவதரிசனஞ்செய்து மீண்டுவந்ததும் உம்முடன் இருப்பேனென்று சொல்லிப் புறப்பட்டுத் திருவிற்குடி வீரட்டத்தை வணங்கித் திருவாரூரைச் சேர்ந்து புற்றிடங்கொண்டாரை வணங்கி திருப்பதிகம்பாடி அங்கெழுந்தருளியிருக்கும் நாளில், திருவலிவலம் திருக்கோயில் முதலிய சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு மீண்டும் திருவாரூரில் வந்திருந்து, பிறகு திருப்புகலூர்க் கெழுந்தருளும்போது அத்தலத்தினின்று எதிற்கொண்டுவந்த திருநாவுக்கரசுநாயனார், முருகநாயனார் முதலிய திருத்தொண்டர்களோடு சென்று சிவதரிசனஞ்செய்துகொண்டு அங்கிருந்தார்.

இருக்கு நாளில் திருநீலநக்கநாயனாரும், சிறுத்

தொண்ட நாயனாரும் வந்துடனிருந்தனர். சிலநாள் சென்றபின்பு ஆளுடைய பிள்ளையார் திருநாவுக்கரசு நாயனாரோடு புறப்பட்டுத் திருவம்பர், திருக்கடவூர் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவீழிமிழலையிற்சென்று சிவதரிசனஞ்செய்து அங்கு வீற்றிருக்கும் போது, மழையின்மையால் பஞ்சமுளதாக உயிர்கள் வருந்தின. சிவனடியார்களும் பசியால் மெலிந்துவாடினர். அதுகண்டு பிள்ளையாரும், அப்பரும் திருநீறுதரித்த சிவனடியார்களுக்கும் இடுக்கணுளதாமோவெனத் திருவுளமிரங்கி சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு அன்றிரவு நித்திரை செய்கையில், சிவபெருமான் அவர்களுக்குச் சொப்பனத்தில் எழுந்தருளிக் காலபேதத்தால் நீங்கள் வருந்தினீர்கள், ஆயினும், உங்களை வழிபடும் அடியவர்கள் வருத்தத்தை நீக்கும்பொருட்டு இப்பஞ்ச நீங்குமட்டும் தினந்தோறும் திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும், மேற்குப் பீடத்திலும், ஒவ்வொரு காசு வைத்தருளுகிறோம் என்று கூறி மறைந்தருளினார்.

பிள்ளையார் விழித்தெழுந்து மருணீக்கியாரோடு ஆலயத்திற்சென்று அங்ஙனமே யிருக்கக்கண்டு மகிழ்ந்தெடுத்துச் சிவனடியார்களுக்கு அமுது படைத்து ஆநந்தமடைந் திருக்குங் காலத்தில், மழை பெய்து பஞ்சம் நீங்கியது. உடனே புறப்பட்டு மார்க்க மத்தியி

லுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருமறைக் காட்டிற் சென்று ஆலயத்துட்புகுந்து வலஞ்செய்து வேதங்கள் பூசித்துத் திருக்காப்பிட்ட அந்நாண்முதல் இந்நாள்மட்டும் அடைக்கப்பட்டேயிருக்கும் திருவாயி லுக்கு முன்போய் திருநாவுக்கரசுநாயனாரால் திறப்பித் துச் சிவதரிசனஞ்செய்து பின்னர்த் தாம் திறக்கவும் மூடவுமாயிருக்கத் திருப்பதிகம்பாடி அங்கிருந்தனர்.

அப்பொழுது பாண்டிநாட்டிலே பாண்டியராஜன் தான் முற்பிறப்பிற்செய்த தீவினையினால் சமணர்களு டைய துர்ப்போதனைக்குட்பட்டு மெய்ச் சமயமாகிய சைவசமயத்தைக் கைவிட்டுப் பொய்ச்சமயமாகிய ஆரு கத சமயத்தில் ஆழ்ந்து கிடந்தனன். அது கண்டு மனம் பொறாத இராஜபத்தினி மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறைநாயனாரும் சொல்லியனுப்பி வேண்டி யதை ஏற்று சம்பந்தமூர்த்திகள் மதுரைக்குச் சென்று சுவாமியைத் தரிசித்து அங்கொரு மடத்திலிருக்கை யில், அன்றிரவு சமணர்கள் அம்மடத்தில் தீயிடக் கண்டு, இவ்வெப்பம் பாண்டியனைச் சேரக்கடவதென்று பதிகமோதியருளலும், உடனே பாண்டியனுக்குச் சுர நோய் கண்டது. அதனால் அரசன் பெரிதும் வருந்து கையில் சமணர்கள்வந்து மணி மந்திர ஔஷதம் பிரயோகம் செய்தும், நோய் தீராமை கண்டு, அரசன் பத்தினியும் மந்திரியும் வந்து வேண்டப் பிள்ளையார்

அங்கு எழுந்தருளினார். சமணர்கள் தாங்கள் அரசனது இடப்பாகத்தைச் சுகப்படுத்துவதாயும், பிள்ளையார் வலப்பாகத்தைச் சுகப்படுத்தும்படிக்கும் சொல்ல, பிள்ளையார் "மந்திரமாவது நீறு" எனுந் திருநீற்றுப் பதிகமோதி வலப்பாகத்தில் விபூதியைப்பூச, அப்பாகம் சொஸ்தமாகி, இடப்பாகமோ சமணர்களால் சொஸ்தமாகாமல் இருமடங்காய் வருந்த, அதனைச் சகிக்கொணாது பின்னும் அரசன் வேண்ட, இடப்பாகத்திலும் விபூதியைப் பூசினார். உடனே நோய் நீங்கி, அரசன் கூனும் நிமிர்ந்தது. பின்பு சமணர்கள் தங்கள் உண்மைப் பொருளை ஓர் ஏட்டிலெழுதித் தீயிலிட்டார்கள். பிள்ளையாரும் "போகமார்த்த பூண் முலையா" ளென்னும் திருநள்ளாற்றுப் பதிக மெழுதியிருக்கும் ஏட்டினைத் தீயிலிட்டனர். பிள்ளையாரிட்ட ஏடு வேகாமலிருக்க, மூன்றாந்தடவையும் தோற்றூர் கழுவில் ஏறுகிறோ மென்று சமணர்கள் சொல்லித் தாங்கள் உண்மையாகக் கொண்டிருக்கும் ஏட்டினையும், "வாழ்க அந்தணர்" எனும் பாசுரம் பத்தும் எழுதிய ஏட்டினையும் வைகையிலிட, சமணர்களேடு வெள்ளத்தின் வழியே சென்றது. நாயனாரேடோ எதிரிட்டுச் சென்று, திருவேடகம் எனும் தலத்திற் கருகே நின்றது. உடனே சமணர்கள் தாங்கள் கூறியபடி கழுவேறினர். அரசன் முதலிய அடியவர்க ளனைவரும் திருஞானசம்பந்த

மூர்த்திநாயனாரின் திருவடியில்விழுந்து வணங்கித் துதி செய்து மகிழ்ந்தனர். கழுவேறினோர் ஒழிய நின்ற மற்றையோர் விபூதிசாதனந் தரித்துச் சைவராயினர்.

அதன்பின் பிள்ளையார் பாண்டியன் முதலாயினாரோடு சென்று சொக்கநாதரைத் தரிசித்து வணங்கி இன்னும் பாண்டியநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் பலவற்றையும் வணங்கி அவ்விடம்விட்டுச் சோழநாட்டின் கணுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருத்தெளிச்சேரியை யடைந்து சிவதரிசனஞ் செய்துவந்தார். வருகையில், பரசமயகோளரிவந்தார் என்றாதும் திருச்சின்ன வோசையைப் போதி மங்கையிலிருக்கும் பௌத்தரில் புத்தநந்தி என்பவன் கேட்டு மனம்பொறாமல் அவனது பௌத்தர் கூட்டம் சூழச்சென்று தடுத்தனர்.

அதைக்கேட்டுத் தேவாரத்திருமுறை எழுதும் சம்பந்த சரணாலயர் பொறாமல் தேவாரத்திலே "புத்தர் சமண் கழுக்கையர் பொய்கொளாச், சித்தத் தவர்கடெளிந்து சேறின, வித்தக நீறணி வார்வினைப் பகைக், கத்திரமாவன வஞ்செழுத் துமே" என்னுந் திருப்பாட்லை யோதி "இப்புத்தனுடைய சிரம் உருண்டு விழும்படி இடியிடித்து விழக்கடவது" என்று சொல்லிய உடனே தலையி லிடிவிழுந் திறந்தனன். மற்றைப் பௌத்தர்கள் எல்லாம் அஞ்சியோடினர். மீண்டுமவர்கள்

ஒருங்குகூடி தம்மில் சாரிபுத்தனைத் தலைவனாகக் கொண்டு நீங்கள் எங்களோடு மந்திரவாதமின்றித் தருக்கஞ்செய்ய வாருங்கள் என்ன, திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருக்கூட்டத்துடன் அங்கோர் மண்டபத்தி லெழுந்தருள, சம்பந்த சரணாலயர், சுவாமிகளுத்தரவுபெற்றுச் சாரிபுத்தனோடு வாதுசெய்து அவனை வென்று அவர்களனைவரையுஞ் சைவர்களாக்கினர். பிள்ளையார் அங்கிருந்து புறப்பட்டு மற்றைச் சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு தொண்டைமண்டலத்துக்கு வந்து, அங்குள்ள காஞ்சிபுரம் முதலிய ஸ்தலங்களை வணங்கி, ஸ்ரீகாளஸ்திரிக்கெழுந்தருளிச் சிவதரிசனஞ் செய்துகொண்டு திருவொற்றியூருக் கெழுந்தருளிச் சுவாமிதரிசனஞ் செய்து அங்கு வீற்றிருந்தார்.

இருக்கையில், திருமயிலையில் வைசிய குலதிலகராகிய சிவநேச செட்டியாருக்குக் கபாலீசர் திருவருளால் ஒரு புத்திரியார் பிறந்து வளரும்நாளில், ஒருநாள் மலர்பறிக்கப் பாங்கிமாரோடு நந்தவனத்திற் சென்று பூப்பறிக்கையில் அரவந்தீண்டி யிறக்க, மணி மந்திர ஔஷதங்களாலுந் தீராமைகண்டு இவளைத் திருஞான சம்பந்தப் பிள்ளையாருக்கென்று வைத்திருந்ததனால் தகனஞ்செய்து என்பையும் சாம்பரையும் அவர் வருமளவுஞ் சேமஞ்செய்து வைப்பே

·னென்று துணிந்து அங்ஙனமே தகனஞ்செய்து என்னையும் சாம்பரையும் ஓர் குடத்திலிட்டு வஸ்திராபரணங்களணிந்து கன்னிமாடத்தில் பஞ்சணைமேல் வைத்து முன்போல வுபசரித்து வந்தனர். இவ்வாறு செய்துகொண்டிருக்கையில், ஆளுடைய பிள்ளையார் திருவொற்றியூரில் எழுந்தருளி யிருப்பதைக் கேள்வியுற்றுப் பரமாநந்தமடைந்து, அங்குச்சென்று சுவாமிகளைக்கண்டு வணங்கித் திருமயிலைக் கெழுந்தருளும்படி விண்ணப்பஞ்செய்ய, அப்படியே பிள்ளையார் திருமயிலைக் கெழுந்தருளிக் கபாலீசரைத் தரிசித்து வணங்கிச் சிவநேசரைநோக்கி என்பும் சாம்பருமிட்ட குடத்தைக் கொண்டுவரக் கட்டளையிட்டு, அவ்வங்கத்தை "மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலை" என்னும் பதிகமோதிப் பெண்ணாக்கிக் கபாலீசர் சந்நிதானத்தில் விடைபெற்றுக்கொண்டு திருவான்மியூர் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு சீர்காழிக் கெழுந்தருளித் தோணியப்பரைத் தரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

இருக்கையில் சிவபாதவிருதயரும் அவர் சுற்றத்தாரும் பிள்ளையாரின் திருமுன்புவந்து தேவரீர் வைதிகநெறியை விளக்கும்பொருட்டு ஓர் கன்னிகையை திருக்கல்யாணஞ்செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க உடன்பட்டுத் திருநல்லூரிலிருக்கும் நம்பியாண்டார் நம்பி என்பவருடைய புத்திரியை

வேதவிதிப்படி திருமணஞ்செய்து ஓமாக்கினியை வலம் வரவெழுந்து, அக்கினி சிவபெருமானே என்று திருவுளங்கொண்டு சிவாலயத்துட்சென்று "நல்லூர்ப் பெருமணம்" என்னுந் திருப்பதிகம் பாடியருள, சிவபெருமான் திருவுளமகிழ்ந்து "நீயும் உன்மனைவியும் என்னுடைய விவாகத்தைக் காணவந்தவர்கள் யாவரும் இச்சோதிக்குள்வந்து நம்மை யடையுங்கள்" என்றருளி அவ்வாலயமுற்றுஞ் சோதியாகி அச்சோதிக்குள் ஓர் வாயிலை வகுத்துக்காட்ட, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் "காதலாகிக் கசிந்து" என்னும் நமச்சிவாயத்திருப்பதிகம் பாடியருளிக் கல்யாணத்துக்கு வந்தவர்களையெல்லாம் "இச்சோதிக்குள் செல்லுங்க" ளென்று திருவாய்மலர்ந்தருளிப் பின்பு திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தம்முடைய பத்தினியார் கையைப் பற்றிக்கொண்டு அச்சோதியை வலம்வந்து அதனுட்சென்று கலந்தனர்; பின்பு அந்தச் சோதி மறைந்து பழையபடி ஆலயமாகக் கண்டு மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் வணங்கித் தோத்திரஞ்செய்தார்கள்.

முற்றிற்று.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம்

திருக்கைலாசமலையில் பார்வதியாரோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய மெய்த்தொண்டர் அறுபத்துமூவரில் ஒருவராகிய ஆலாலசுந்தரரென்பவர் ஒருநாள் அப்பரமபதிக்குப் பூமாலை தொடுத்து அணிதற்பொருட்டு மலர்கொய்தற்குத் திருநந்தனவனத்திற் சென்றார். அப்போது உமாதேவியார்க்கு மலர்மாலைகட்டிச் சாத்துதற்கு அவ்வனத்திற் பூப்பறித்துநின்ற அவருடையசேடியர்களாகிய அனிந்திகை கமலினி என்னும் பெயருடைய பெண்கள் இருவர்மேல் இச்சைகொண்டார். அவர்களும் ஆலாலசுந்தரரைக்கண்டு அவர்மேல் ஆசைகொண்டார்கள். பின்பு ஒருவாறு மனத்தை மீட்டுக்கொண்டு ஆலாலசுந்தரர் சிவ சந்நிதானத்துக்கும், சேடியர்கள் தாயார் சந்நிதிக்கும் சென்றனர். சர்வாந்தரியாமியாகிய கைலாசபதி ஆலாலசுந்தரரை நோக்கி "நீ பெண்கள்மேற் காமவிச்சைகொண்டமையால் தட்சிணபூமியில் மானுட தகமெடுத்து அப்பெண்களோடுகூடி யின்ப மனுபவிப்பாயாக என்று திருவாய் மலர்ந்தருளக்

கேட்டு, ஆலாலசுந்தரர் நடுநடுங்கிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து எழுந்துநின்று அஞ்சலியஸ்தராய் "கருணைக்கடலே! மனிதனாய்ப்பிறந்து சமுசார சாகரத்தில் மூழ்கி, செய்வது இன்னது தவிர்வது இன்னது என்றறியாது மயங்கும்பொழுது, தேவரீர் என்னைத் தடுத்தாட் கொள்ள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமானார் அதற்குத் திருவுளமிசைந்தனர்.

அவ்வாறே ஆலாலசுந்தரர் புண்ணியபூமியாகிய பரதகண்டத்தில் தென்தேசத்தில் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவப் பிராமண குலத்தில் சடையனாருடைய கற்புக்கு இருப்பிடமாகிய இசைஞானியாரின் திருவயிற்றில் அவதரித்து நம்பியாரூரரென்னும் பிள்ளைத்திருநாமம்பெற்று ஒருநாள் வீதியில் சிறு தேருருட்டி விளையாடுகையில், அந்நாட்டரசராகிய நரசிங்கமுனையரையர் கண்டு சடையனார் சம்மதத்தின் மேல் அப்பிள்ளையைத் தம்மாளிகைக்கு எடுத்துக் கொண்டு போய் அபிமான புத்திரராகப் பாவித்து வளர்க்க வளர்ந்தார்.

அங்ஙனம் வளர்ந்தாராயினும், பிராமண குலத்துக்குரிய ஒழுக்க முடையராய்த் தக்கபருவத்தில் உபநயனஞ் செய்யப்பெற்று வேதாகமம் முதலிய சகல சாஸ்திரங்களினும் வல்லவராய்த் திருமணஞ் செய்துகொள்ளுதற்குரிய பருவத்தை யடைந்தனர். அதுகண்டு

தந்தையாராகிய சடையனார் தம்மரப்புக்கேற்ற புத்தூரி லுள்ள சடங்கவி சிவாசாரியரிடத்தில் அவர் புத்திரி யைத் தம் புத்திரருக்கு மணம்பேசச் சில முதியோரை அனுப்பினார்; அவர்கள் சடங்கவி சிவாசாரிய ரிடத்திற் சென்று பேசி, அவர் உடன்பட்ட செய்தியைச் சடைய னார்க்கு அறிவித்தனர். அப்பொழுது சடையனார் மன மகிழ்ந்து விவாக சுபதின முகூர்த்தம் நிச்சயித்துத் தம் ஞாதிகள் முதலிய உறவினரையும், நட்பினர் யாவரை யும் திருமணவோலை போக்கி வரவழைத்தனர்; பின்பு நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்திநாயனார் திருமணக்கோ லம்பூண்டு குதிரையிலேறிச் சகல சம்பிரமத்தோடு புத் தூரில் சடங்கவியார் வீட்டில் திருக்கல்யாணப் பந்தர்க் குமுன்சென்று குதிரையினின்றிழிந்து உள்ளேபோய் ஆசனத்திருந்தனர்.

அப்பொழுது, சிவபெருமான் தாம் ஆலால சுந்த ரர்க்குத் திருவாக்கு அளித்தபடி ஓர் வயோதிகப் பிராமண வடிவங்கொண்டு அந்தக் கல்யாணப்பந்தலில் எழுந்தருளிநின்று, அங்குள்ளார்க்கெதிரில் நம்பியாரூ ரரை நோக்கி, உனக்கும் எனக்குமொரு வழக்கிருக்கி றது, அது தீர்ந்தபிறகுதான் நீ விவாகஞ்செய்து கொள்ளவேண்டும், என்றனர். நம்பியாரூரர் உமக்கும் எனக்கும் உள்ள வழக்கு யாது என்ன, அவ்வையர் அங்குள்ள பிராமணர்களைநோக்கி, இந்த நம்பியாரூரன்

எனக் கடிமை என்றார். அதுகேட்ட நம்பியாரூரர் இவ்வையர் சொல்லியது நன்றாயிருக்கிறதென்று பழித் துச் சிரிக்க, பிராமணவேடம் பூண்டுவந்த கடவுள் உன் பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலை இதோ இருக் கிறது, அப்படியிருக்க நீ பரிகாசஞ்செய்தது என்ன என்றார் !

நம்பியாரூரர் ஐயரை நோக்கி பிராமணருக்குப் பிராமணர் அடிமைப்படுதல் இன்று நீர் சொல்லக்கேட் டோம், நீ பித்தனோ என்ன, ஐயர் நான் பித்தனானலு மாகட்டும், பேயனானலுமாகட்டும், நானதற்குச் சிறி தும் வெட்கமடையேன், நீ விநோதவார்த்தைகள் பேச வேண்டாம், அடிமைத்தொழில் செய்யவா, என்றார். நம்பியாரூரர், ஐயரே அவ்வோலையைக் காட்டுமென்ன, ஐயர், நீ யிந்தவோலையைப்பார்த்து நிச்சயிக்கத்தக்க வனோ, நானிந்தச் சபையாருக்குக் காட்டி மெய்யென்று ஒப்புக்கொள்ளச் செய்வித்தபின் எனக் கடிமைத் தொழில் செய்யமாத்திரம் தக்கவனென்றார். அது கேட்டு நம்பியாரூரர் கோபங்கொண்டு அவர் கையி லுள்ள ஓலையைப் பறிக்க அவருக்கெதிரிற் சென்ற அளவில் அவரோடத் தாம் பின்தொடர்ந்தோடிப் பிடித்து ஓலையைப் பறித்துக் கிழித்தனர்.

சுந்தரமூர்த்தியைப் பிடித்து ஒரு தாம் இது முறையோ என்று கூச்சலிட சமீபத்தினின்றவர்கள்

இருவரையும் விலக்கி உலகத்தில் எந்நாளும் நடந்திராத செய்தியைக்கொண்டு வழக்காடுகிற பிராமணரே! நீர் எங்கேயிருக்கிறவர் சொல்லுமென, நான் இந்தத் திருவெண்ணெய்நல்லூரில் இருக்கிறவன், அதிருக்கட்டும், இந்த நம்பியாரூரன் அறநெறிக்கு விரோதமாக என் கையில் இருந்த ஓலையைப் பலாத்காரமாய்ப் பிடுங்கிக் கிழித்ததனால் தான் எனக்கடிமை என்பதை ஸ்திரப்படுத்தினன், என்றார். அப்பொழுது நம்பியாரூரர், நீர் திருவெண்ணெய் நல்லூரில் இருப்பவராயின், உம்முடை தப்புவழக்கை அங்கேதானே பேசித் தீர்ப்புச்செய்யவாரும் என்ன, ஐயர் அதுகேட்டுத் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பிராமணர்களுக்கு முன் ஆதியில் எழுதிய மூல ஓலையைக்காட்டி, நீ எனக்கு முறி என்பதைச் சாதிப்பேனென்று தண்டூன்றிக் கொண்டு முன்னே சென்றார். நம்பியாரூரரும் மற்றைப் பிராமணர்களும் பின்னே போயினர்.

ஐயர் தமக்குப் பின்வந்த நம்பியாரூரரோடும் மற்ற பிராமணரோடும் திருவெண்ணெய் நல்லூரைச்சேர்ந்து அங்குக்கூடிய பிராமணர்களுக்கு எதிரில் அவர்களை நோக்கி, அறிவிற்சிறந்த பெரியோர்களே! இந்த நம்பியாரூரன் நீ எனக்கடிமைஎன்று காட்டிய ஓலையைப் பறித்துக் கிழித்துவிட்டு உங்களிடத்திற்கு வந்திருக்கிறான், என்று முறையிட்டார். அதைக்கேட்ட பிராமணர்கள்

அவரைப்பார்த்து, பிராமணர்கள் அடிமைப்படுதல் இவ்வுலகத்தில் எக்காலத்துமில்லையே, ஐயரே நீர் என்ன தப்புவார்த்தை சொல்லுகின்றீர் என்ன, ஐயர் நான் சொல்லியது பொய்யன்று, மெய்யே, இவன் பறித்துக் கிழித்தவோலை இவனுடைய பாட்டன் தானும் தன் உறவினரும் எனக்கு அடிமை என் றெழுதிக்கொடுத்த வோலை என்றார்.

உடனே பிராமணர்கள் நம்பியாரூரரை நோக்கி, இவர் உம்முடைய பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலையைக் காட்டினால் நீர் அதைப்பறித்துக் கிழிக்கலாமா? அதனால் உம்முடைய பக்ஷம் செயித்ததோ? இவர் தம்வழக்கை யாவரும் ஒத்துக்கொள்ளும்படி கூறினர், இனி உம்முடைய கருத்து யாது என்ன, அதற்குச் சுந்தரர் "வேதாகமம் முதலிய யாவுங் கற்றுணர்ந்த மகான்களே, நான் ஆதிசைவனென்பதை நீங்களெல்லாமறிவீர்களே, அப்படியிருக்க இந்தப்பிராமணர் என்னைத் தமக்கடிமையென்று சாதிக்கிறாரே, இது மனத்தால் நிச்சயிக்கத்தகாத மாயையென்றே நினைத்தல் வேண்டும். நானிதற் கென்னசொல்வேன் என்ன, அதைக்கேட்ட பிராமணர் அவ்வையரை நோக்கி, நீர் இவரை உம்முடைய அடிமை என்று சொல்லுகிறதற்கு அநுபவம், லிகிதம், சாக்ஷி இம்மூன்றி லொன்று உம்மிடத்தில் இருக்கவேண்டுமே அதைக்காட்டும் என்றனர்.

ஐயர் "இவன் கிழித்த ஓலை மூலவோலையைப் பார்த்தெழுதிய படியோலை, மூலவோலையோ என்னி டத்திருக்கின்றது என்றார். பிராமணர்: ஆனலதைக் காட்டு மென்ன, ஐயர் ஆரூரான் அதையும் முன்போலப் பறித்துக் கிழித்துப் போட்டால் என் செய்வேன், ஆதலால், அப்படிச்செய்யாதபடி திட்டஞ் செய்வீர்க ளானல் காட்டுகிறே னென்ன, பிராமணர்: கிழிக்க வொட்டோம், காட்டும் என்ன, ஐயர் மூலவோலையைக் கையிலெடுத்தனர்.

அப்பொழுது சபையார் கட்டளையின்படி ஓர் கர ணன் அவரைக் கும்பிட்டு ஓலையை வாங்கிச் சபையி லுள்ளார் கேட்கும்படி, "திருநாவலூரிலிருக்கும் ஆதிசைவனுகிய ஆரூரனென்னும் நான் திருவெண் ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு நானும் என் சந்ததியாரும் வழித்தொண்டுசெய்ய உள்ளும் புறமு மொப்ப உடன்பட் டெழுதிக்கொடுத்தேன், இப்ப டிக்கு ஆரூரான்: என்று வாசித்தான். அதிற் சாக்ஷி கையெழுத்திட்டவர்களும் தங்கள் கையெழுத்தென்றே ஒப்புக்கொண்டனர்.

அதன் பின்பு பிராமணர்கள் நம்பியாரூரரை நோக்கி, இது உம்முடைய பாட்டன் கையெழுத்துத் தானே? பாரும் என்ன, ஐயர் அவர்களைப்பார்த்து இச்சிறுவன் தன் னடிமையோலையில் எழுதிய தன்

பாட்டன் கையெழுத்தை அறியச் சக்தியுள்ளவனோ, இவன்பாட்டன் எழுதிய வேறுகைச் சாத்திருந்தால் அதை வருவித்துப்பார்த்து ஒத்திருந்தால் உங்களுக்குத் தோன்றிய தீர்ப்புச்சொல்லுங்கள் என்ற அளவில், அப்படியே அவர் பாட்டனார் கைச்சாத்தொன்று அழைப்பித்துப் பார்த்து ஒத்திருக்கக் கண்டு, இனி நீர் தப்ப வழியில்லை, நீர் இந்தப் பிராமணருக்குத்தோற்றீர், ஆதலால் அவர் கருத்தின்படி அடிமை செய்வதே கடன் என்றார்கள். ஆலாலசுந்தரர் விதிமுறை இதுவாயின் நானுடன்படேனென்று சொல்லக்கூடுமோ என்று நின்றார். அப்பொழுது பிராமணர்கள் அவ்வையரை நோக்கி, நீர் காட்டிய முறியோலையில் எங்களூரே உம்முடைய ஊராக எழுதப்பட்டிருக்கின்றது, ஆகையால், உமக்கிங்கே தலைமுறையாக உள்ளவீடும் ஸ்திதியும் காட்டுமென்ன, காட்டுகிறேன் வாருங்களென்று நம்பியாரூரரும் பிராமணர்களும் பின்தொடர்ந்துவரத் தாம் அவ்வூரிலுள்ள திருவருட்டுறை என்னுஞ் சிவாலயத்துள்ளே போயினர். சபையார் அவரைக்காணாது திகைத்து நின்றார்கள்.

அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனார் என்னை அடிமை கொண்ட பிராமணர் திருக்கோயிலுள்ளே புகுந்தது என்ன ஆச்சரியமென்று கருதி அத்தியந்த வாசையோடும் தனித்து அவரைப் பின்தொடர்ந்து

போய்க் கூப்பிட, சிவபெருமான் அறவடிவாகிய இடப வாகனத்தின்மேல் பார்வதி சமேதராய் எழுந்தருளி, "நீ நமக்கு முன்னே தொண்டனாயிருந்தாய்; பெண்கள்மேல் ஆசைவைத்ததனால் நம்முடைய ஆணையால் பூமியிற் பிறந்தாய்; இப்பொழுது சமுசாரபந்தமானது உன்னைத்தொடராதபடி நாமே வலிய வந்து தடுத்தாட்கொண்டோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். இவ்வாறெழுந்த அருமைத் திருவாக்குச் செவியில்நுழையச் சுந்தரமூர்த்திநாயனார் பரவசப்பட்டு அடியற்ற மரம்போல் பூமியில் விழுந்து. அஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி ஆநந்தக்கண்ணீர் பெருக எழுந்து நின்று, இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்து, பொன்னம்பலத்தில் பஞ்சகிருத்தியத் திருநடநஞ் செய்தருளும் சுவாமீ! தேவரீர் ஒன்றுக்கும் பற்றாத என்னை வலியத் தடுத்தாண்ட அருட் பெருமையை என்னென்று சொல்லுவேன் என்றார். அப்படி நின்ற நம்பியாரூரரை நோக்கி "நீ நம்மோடு வன்சொற் பேசி வன்தொண்டனெனும் பெயர்பெற்றாய், நமக்கு அன்பினாற்செய்யும் அருச்சனையாவது பாடலே யாம். ஆதலால், நம்மேல் தமிழ்ப்பாடல் பாடுக" என்று அருளிச்செய்ய சுந்தரமூர்த்திநாயனார் அஞ்சலியஸ்தராய் "அடியேன் தேவரீருடைய அனந்த கல்யாண குணங்களில் எதை அறிவேன், என்னவென்று பாடுவேன்" என்ன,

அதற்குச் சிவபெருமான் "நீ முன்னே நம்மைப் பித்த னென்றாய், ஆதலால் என் பெயர் பித்தனென்றே பாடுக" என்ன; சுந்தரமூர்த்திநாயனார் தம்மை அடிமை கொண்ட சிவபெருமான்மேல், "பித்தா பிறைசூடி" என்னுஞ் சொற்றொடரை முதலாகவுடைய திருப்பதி கத்தைப் பாடி யருளினார். பின்பு தம்பிரானார் "நீ இன் னும் நம் புகழைக் குறித்துப் பலவகையாகப் பாடுக" என்று மறைந்தருளினார். இது நிற்க, புத்தூரில் சடங் கவி சிவாசாரியர் புத்திரியாரோ விவாகந் தவறினதினால் சுந்தரமூர்த்திநாயனாரையே தியானஞ் செய்துகொண்டி ருந்து சிவபதமடைந்தனர்.

பின்பு சுந்தரமூர்த்திநாயனார் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கின்ற திருவருட்டுறை என்னும் ஆலயத் தில் எழுந்தருளிய பரமகாருண்ணிய மூர்த்தியாகிய சிவ பெருமான் தம்மை யாட்கொண்டபின் திருநாவலூர்க் கும் திருத்துறையூர்க்கும் சென்று திருப்பதிகம்பாடிச் சிதம்பரத்திலே ஆனந்ததாண்டவஞ் செய்தருளும் நடே சரைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராசையோடு புறப்பட்டுத் திருவதிகை என்னுந் தலத்துக்குச் சமீ பத்திற்போய்த் திருநாவுக்கரசுநாயனார் உழவாரத்தால் கைத்தொண்டுசெய்த இத்தலத்திலே நான் மிதிக்க வஞ் சுகிறேனென்று அதற்குட்செல்லாமல் அருகிலிருந்த சித்தவடமடத்தி லெழுந்தருளி, அன்றிராத்திரி திரு

வதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் சிவபிரான் திருவடிகளைத் தியானஞ் செய்துகொண்டு நித்திரை செய்யும்போது வீரட்டானேசுரர் ஒரு விருத்தப் பிராமணராகி அம்மடத்தில் நுழைந்து சுந்தரமூர்த்திநாயனார் சிரசின்மேல் தமது திருவடியை வைத்தருளித் துயில்பவர்போலிருந்தனர். அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனார் விழித்துக்கொண்டு, "ஐயரே ஏன் உம்முடைய பாதத்தை என் சிரசின்மேல் வைத்தீர்" என்ன, ஐயர் "என் வயோதிகத்தால் திசை தெரியாது அப்படிச் செய்தே" னென்ன, சுந்தரமூர்த்திநாயனார் அதற்கு ஒத்துக்கொண்டு தம்முடைய சிரசை வேறொரு திசையில்வைத்து நித்திரை செய்தனர். எம்பிரானார் அங்குஞ் சென்று சுந்தரமூர்த்தி நாயனாருடைய சிரசில் தம்முடைய பாதத்தை நீட்ட, சுந்தரமூர்த்திநாயனார் "என் சிரசில் பலமுறை கால்வைத்த நீர் யார்" என்ன, "நீ என்னை அறியாயா" என்று உரைத்து மறைந்தருளினார்.

அதுகண்டு சுந்தரமூர்த்திநாயனார் தம்முடைய சிரசில் பாதத்தை வைத்தவர் சுவாமி என்றறிந்து "அடியேன் செருக்கினால் சிவபெருமானென்று அறியாமையால் என் செய்தேனென்று வருந்தி, "வீரட்டானேசுரரை "தம்மானையறியாத சாதியாருளரே" என்னுந் திருப்பதிகம்பாடித் துதித்து அங்கிருந்து புறப்பட்டுச்

சிதம்பரத்திற் சென்று கனகசபையில் ஆநந்ததாண்டவஞ் செய்தருளும் சபாநாதரைத் தரிசித்து அன்புமிகுதியால் நெருப்பிலிட்ட நெய்போல் மனமுருகி ஆநந்தக்கண்ணீர் பெருகவிழுந்து நமஸ்கரித்து பேரின்ப சாரத்தில் முழுகி இரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் குவித்துப் பதிகம்பாடித் துதித்து நின்றனர்.

அப்பொழுது நடேசர் திருவருளால் "திருவாரூர்க்கு வா" என்று எழுந்த அசரீரிவாக்கைக்கேட்டு அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு கனகசபையைப் பிரதக்ஷிணஞ் செய்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுக் கொள்ளிட நதியைக் கடக்க, சீர்காழி தோன்றியது. இது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவவதாரஞ்செய்த தலம் ஆகையால் அதை மிதிக்கலாகாதென்று கருதி, அதன் எல்லையை வணங்கி வலம் வரும்போது சிவபெருமான் தரிசனந்தந்தருள, "சாதலும் பிறத்தலுந் தவிர்த்து" என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்து, அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கோலக்கா முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூர்க்கெழுந்தருளி ஆலயத்துட்சென்று வன்மீகநாதரை வணங்கிப் பேரின்பக் கடலுள் மூழ்கித் திருப்பதிகம்பாடித் துதித்து நின்றார். அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனார் கேட்கும்படி தியாகப்பெருமான் திருவருளால் "நாமுனக்குத் தோழரானோம், முன்னே

நாமுன்னை யாட்கொண்ட விவாக காலத்தில் நீ கொண்டிருந்த மணக்கோலத்தை என்றும் பூண்டு விளையாடுவாயாக," என்று ஓரசரீர வாக்கு எழுந்தது. அது கேட்ட சுந்தரமூர்த்தி நாயனார் ஆநந்தபரவசராய்த் தொழுது துதித்துப் புறம்போந்து அன்றுதொட்டு அடியார் யாவரும் தம்பிரான் தோழர் என்று சொல்லிக்கொள்ளத் திருமணக்கோலம் பூண்டு நாள்தோறும் வன்மீக நாதரைத் தரிசனஞ்செய்துகொண் டங்கிருந்தனர்.

இதுநிற்க முன்னே திருக்கைலாசமலையில் இருக்கும் பார்வதியாருடைய பாங்கிய ரிருவரில் ஒருவராகிய கமலினி என்பவர் அத்திருவாரூரில் உருத்திரகணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்னுந் திருப்பெயர் பெற்று மங்கைப்பருவமடைந்து அவரும் தோழிமாரோடு தினமும் ஆலயத்துட்சென்று சிவ தரிசனஞ் செய்து வருவார். ஒருநாள் தரிசனஞ் செய்யப்போம் பொழுது, அங்குப் பரிசனத்தோடு சிவதரிசனத்துக் கெழுந்தருளிய சுந்தரமூர்த்தி நாயனார் கண்டு ஆசை கொண்டு தாம் அவரை விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்று சுவாமி சந்நிதானத்தில் விண்ணப்பஞ் செய்தருளினர்.

சிவபெருமான் அவர் விண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டு பரவையாரைச் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருமணஞ்செய்து கொடுக்கும்படி அடி-

யார்களுக்குக் கட்டளையிட்டருள, அவர்களப்படியே சுந்தரமூர்த்தி நாயனார்க்குப் பரவையாரை விதிப்படி விவாகஞ்செய்துகொடுத்தார்கள். சுந்தரமூர்த்திநாயனார் பரவையாரைக்கூடி வாழ்ந்திருக்கும் நாளில் ஒருநாள் சிவதரிசனத்துக் கெழுந்தருளும்போது தேவாசிரய மண்டபத்தில் சேர்ந்திருந்த சிவனடியார்களைக்கண்டு அவர்கள்மேல் பத்திமிகுந்து நாணிவர்களுக் கடியனாகு நாள் எந்நாளென்று கருதிச் சுவாமிதரிசனத்துக்குத் திருக்கோயிலுக்குட் சென்றனர். அவர் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தியாகப்பெருமான் அவர்க்குக் காட்சி கொடுத்தருளி, நீ நம்மடியார்மேற் பதிகம் பாடுவாயாகவென்று திருவாய்மலர்ந்தருள, சுந்தரமூர்த்திநாயனார் வணங்கி நின்று, "சுவாமி, அடியவர்கள் வரலாறு இன்னதென்றும் அவர்கள் தன்மை இன்னதென்றும் சிறிதும்அறியாத யான் எப்படிப் பாடுவேன், அவர்களைப்பாடுஞ் சக்தியைத் தேவரீரே அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டு" மென்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அதற்கிசைந்து தமது அருமைத் திருவாக்கால் "தில்லைவாழந்தணர்தமடியார்க்கு மடியேன்" என்று அடி எடுத்துக் கொடுத்து மறைந்தருளினர். அதுகண்டு சுந்தரமூர்த்தி நாயனார் தேவாசிரய மண்டபத்தை யடைந்து அவ்வடியவர் யாவர்க்குந் தனித்தனியே அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத்

தொகை என்னுந் திருப்பதிகம்பாடி அவர்களை வணங்கினர்.

பின்பு சுந்தரமூர்த்தி நாயனார் சிலநாளங்கிருந்து அதற்குச் சமீபத்திலுள்ள திருக்கோளிலி என்னும் ஸ்தலத்துக்கு எழுந்தருளி ஆலயத்துட்சென்று சிவபெருமானை வணங்கி, வேளாளராகிய குண்டையூர்க்கிழார் கொடுத்த நெற்குவியலைத் திருவாரூரிற் சேர்ப்பிக்கக் கிருபை செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சிவாக்கினையாற் பூதங்கள் குண்டையூரிலிருந்த நென்மலையை எடுத்துச் சென்று பரவையார் திருமாளிகையிலும் மற்றிடங்களிலும் நிறைத்தன. சுந்தரமூர்த்தி நாயனார் மீண்டுந் திருவாரூர்க்குச்சென்று வன்மீகநாதரைத்தொழுது துதித்துப் பரவையார் திருமாளிகையிற் சேர்ந்து நிகழ்ந்த செய்தியைச்சொல்லிச் சிலநாளங்கிருந்து, கோட்புலி நாயனார் வேண்டுகோளால் திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளிய பொழுது, அந்நாயனார் எதிர்கொண்டு வந்து வணங்கித் தம்முடைய வீட்டுக்கழைத்துப்போய் ஆசனத்திலிருத்தி அருச்சனை செய்து திருவமுது செய்வித்து வணங்கித் தம்முடைய புத்திரிகளாகிய சிங்கடி, வனப்பகை என்னும் இருவரையும் கொண்டுவந்து வணங்குவித்துத் தாமும் வணங்கி அடியேன் பெற்ற இப்பெண்களை அடிமையாகக் கொண்டருளவேண்டும் என்றார்.

சுந்தரமூர்த்தி நாயனார் அப்பெண்களைப் புத்திரிக ளாகப் பாவித்தருளிச் சிவாலயத்துட்சென்று சிவ பெருமானை வணங்கி "பூணுணவவதோரரவம்" என் னும் திருப்பதிகம்பாடி அப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில் கோட்புலிநாயனாரைச் சிறப்பித்துச் சிங்கடி யாருக்குத் தம்மைப் பிதாவாகக் கருதினமையால் தம் மைச் சிங்கடியப்பன் என்று வைத்தருளினர். பின்பு அவ்விடத்தினின்றும் எழுந்தருளித் திருவலிவலத்திற் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு மீண்டும் திரு வாரூர்க்குச் சென்று வன்மீகநாதனை வணங்கிக் கொண்டு பரவையாரின் வீட்டிலிருந்தனர். இருக்கும் நாளில், பங்குனி உத்திரத் திருவிழா சமீபிக்கவும், பர வையார் திருவிழாச் செலவிற்குக் கொடுப்பதற்குப் பொருள் கொண்டுவரும் பொருட்டுத் திருப்புகலூரைச் சேர்ந்து ஆலயத்துட்சென்று சுவாமியை வணங்கிப் பதிகம்பாடிச் செங்கல்லைப் பொன்னாக்கித்தரப் பெற்று அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரை யணைந்து பரவை யாரின் வீட்டி லெழுந்தருளினர்.

அங்கிருந்து புறப்பட்டுத் திருநன்னிலம் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக் கொண்டு திருமுதுகுன்றத் தைச்சேர்ந்து சிவதரிசனஞ்செய்து பதிகம்பாடியபோது, சுவாமி பன்னீராயிரம் பொன் கொடுத்தருள, சுந்தர மூர்த்தி நாயனார் வணங்கி நின்று, தேவரீர் கொடுத்தரு

ளிய பொன்னெல்லாம் திருவாரூரில் உள்ளவர் யாவரும் அதிசயிக்கும்படி அங்கே வரச்செய்யவேண்டும் என்று பிரார்த்திக்க, அப்பொழுது எம்பிரானுடைய திருவருளால், "சுந்தரமூர்த்தி நீர் இந்தப்பொன் எல்லாவற்றையும் மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தி லெடுத்துக்கொள்ளென்று அசரீரி வாக்கெழுந்தது. அதுகேட்டுச் சுந்தரமூர்த்தி நாயனார் மச்சம் வெட்டி எடுத்துக்கொண்டு பொன்னனைத்தையும் மணிமுத்தா நதியிலிட்டு அன்று என்னைத் தடுத்தாட்கொண்ட திருவருளை இதில்அறிவேனென்று சிதம்பரத்துக் கெழுந்தருளக்கருதி வழிக்கொண்டு இடையிலுள்ள திருக்கடம்பூரை வணங்கித் தில்லையைச்சேர்ந்து நடேசரைத்தொழுது பதிகம்பாடித் துதித்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுத் திருக்கருப்பறியலூர் முதலிய பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, மீண்டும் திருவாரூர்க்கு எழுந்தருளி வன்மீகநாதரைப்பணிந்து பரவையாருடன் மனமகிழ்ந்து இருக்குநாளில் ஒருநாள் பரவையாரை நோக்கி எனக்குத் திருமுதுகுன்றர் கொடுத்தருளிய பொன்னை யெல்லாம் மணிமுத்தா நதியிலிட்டு வந்தேன், இப்போது இத்தலத்தில் திருக்கோயிலுக்கு மேற்கிலுள்ள குளத்தில்போய் அவரது திருவருளால் எடுத்துக்கொண்டு வருவோம் வா என்ன, பரவையார் அது என்ன அதிசயமென்று தமக்குள் தாமே எண்ணிக்

கொண்டு கூடவர, அக்குளத்தருகிற்சென்று பரவையா ரைக் கரைமேல் நிறுத்தித் தாம் வன்மீகநாதரை வணங் கித் துதித்துக் குளத்திலிறங்கித் தடவிப் பார்க்கையில் பொன்னகப்படாமையால் மனம் வருந்தித் திருப்பதிகம் பாடிச் சிவபெருமான் திருவருளால் வந்தெழுந்த பொற் றிரளை வாரி எடுத்து ஆட்களிற்சுமத்தி அனுப்பிவிட்டுத் தாம் திருக்கோயிலுட்சென்று வன்மீகநாதரைப் பணி ந்து துதித்து வீட்டுக்குச் சென்று பரவையாரோடு மகிழ் ந்திருந்தார்.

இருக்குநாளில் சிவஸ்தல யாத்திரை பண்ண விருப்பமுற்று திருநள்ளாறு முதலியவற்றை வணங்கிக் கொண்டு திருக்கருகாவூர்க்குச் சமீபத்தில் வரும் பொழுது, வன்றொண்டர் பசி தாக முதலியவற்றால் மெலிந்து வருகிறார் என்று சுவாமி திருவுளமிரங்கித் தண்ணீரும் கட்டமுதும் கொண்டுவந்து வெயில்வெப் பத்தைத் தணிக்கும்பொருட்டு அங்கு ஒருபக்கத்தில் ஓர் தண்ணீர்ப்பந்தரை யுண்டாக்கித் தாம் ஒரு பிராமண வேடம்பூண்டு களைத்துவருகின்ற சுந்தரமூர்த்தி நாயனா ரை நோக்கி, நீர் மிகவும் பசித்திருக்கின்றீர், என்னிடத் தில் பொதிசோறிருக்கின்றது, அதையுண்டு தண்ணீர் குடித்து இளைப்பாறுமென்று சொல்லியருள, சுந்தர மூர்த்தி நாயனார் அதற்கிசைந்து கட்டமுதைவாங்கி அடியாரோடு அமுதுசெய்து தண்ணீர் அருந்தி பரிச

[stamp]

னங்களோடு நித்திரைசெய்ய, ஐயர் தண்ணீர்ப் பந்த ரோடு மறைந்தருளினார். சுந்தரமூர்த்தி நாயனார் துயி லுணர்ந்து ஐயரைக் காணாமையால் ஆச்சரியமடைந்து "இத்தனையா மாற்ற மறிந்திலன்" என்னுந் திருப்பதி கம்பாடித் திருக்கருகாவூரைச் சேர்ந்து சிவதரிசனஞ் செய்து அதை அகன்று வழிக்கிடையிலுள்ள சிவஸ் தலங்களையெல்லாம் வணங்கிக்கொண்டு திருக்கழுக்குன் றிற்போய்ச் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு திருக்கச் சூருக்கெழுந்தருளி ஆலக்கோயிலுள்ளே சென்று சிவ தரிசனஞ்செய்து புறத்தில்வந்து அமுதுசெய்யும் கால மாகியும் அமுதுசெய்துபடைக்கும் பரிசனங்கள் வாரா மையால் மிகுந்த பசியோடு மதிற்புறத்திலிருந்தனர். அப்பொழுது சிவபெருமான் ஒரு பிராமணராகி அரு கிற்சென்று நீர் மிகப்பசியோ டிருக்கின்றீர், நான் உமக் குப் பிராமணர் வீட்டில் அன்னம் யாசித்துக்கொண்டு வருகிறேன், நீர் அப்புறம் போகாமல் இங்கேயிரும் என்று சொல்லிப்போய், அப்படியே யாசித்துக்கொண்டு வந்துகொடுக்க, சுந்தரமூர்த்தி நாயனார் தம்முடன்வந்த தொண்டர்களோடு உண்டு மகிழ்ந்தனர். உடனே அவ் வையர் மறைந்தருளினதைக்கண்டு, அவர் சிவபெரு மானே என்று துணிந்து, "இந்த நடுப்பகலில் திருவடி வருந்த அடியேன்பொருட்டு எழுந்தருளிய பெருங்கரு ணையை என்னென்று புகழ்வேன்" என்று மனமுருகித்

தோத்திரஞ்செய்து, அவ்விடம்விட்டுப் புறப்பட்டுக் காஞ்சிபுரத்திற்சென்று திருவேகாம்பரத்தையடைந்து காமாட்சியம்மையா லருச்சிக்கப்பட்ட ஏகாம்பரநாதனை வணங்கி அங்கிருந்து புறப்பட்டு இடையிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தொழுதுகொண்டு திருக்காளத்தி மலைக்குச்சென்று சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டுத் திருவொற்றியூரிற்போய்ப் பதிகம்பாடிச் சுவாமி தரிசனம் பண்ணிக்கொண் டங்கிருந்தனர்.

முன் திருக்கைலாசகிரியில் சுந்தரமூர்த்தி நாயனார் மேல் ஆசைகொண்ட தோழிமா ரிருவரில் ஒருவராகிய "அனிந்திதையார்" என்பவர் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளரிற் சிறந்த ஞாயிறுகிழார் என்பவருக்குப் புத்திரியாராகத் திருவவதாரஞ்செய்து சங்கிலியாரென்னும் திருநாமம்பெற்றுத் திருக்கோயிலில் திருத்தொண்டு செய்து ஒழுகுநாளில், ஒரு நாள் சுந்தரமூர்த்திநாயனார் சங்கிலியாரைக்கண்டு ஆசைகொண்டு சுவாமி சந்நிதானத்திற் சென்று வணங்கி, சங்கிலியாரைத் தமக்குத் தந்தருளும்படி பிரார்த்தித்துக் கோயிலின் புறத்தில் ஓரிடத்தில் மனக்கவலையோடிருக்க, அப்பொழுது சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு எதிரிற்போய்ச் சங்கிலியாரை உனக்குத் தருகிறோம், நீகொண்ட கவலையை ஒழிப்பாயாக வென்று திருவாய்மலர்ந்தருளி, உடனே

கன்னிமாடத்திற் கண்வளரும் சங்கிலியார் சொப்பனத் திற்றோன்றிச் சங்கிலியே, நம்மிடத்து மிகுந்தபத்தியை யுடைய சுந்தரன் தனக்கு மனைவியாக உன்னைத்தரும் படி என்னைப் பிரார்த்தித்தான், நீ அதற்குடன்படவேண் டும் என்றார்.

அதற்குச் சங்கிலியார் சுவாமீ அடியேன் தேவரீரு டைய திருவாணையைச் சிரமேற்கொண்டேன், அவ் வாறே நாயனாருக்கே மனைவியாதற்கு உரியேன் ஆயின் அவர் திருவாரூரிலே மிகுந்த சந்தோஷத்தோடு வசிக் கின்றவர் என்பதைத் தேவரீர் திருவுளங்கொண்டரு ளும் என்று விண்ணப்பஞ்செய்தார். சுவாமி அது கேட் டுப் பெண்ணே, சுந்தரன் உன்னைப்பிரியேன் என்று சபதஞ்செய்து தருவானென்று சொல்லிச் சுந்தரமூர்த்தி நாயனாரிடத்துவந்து, நான் உன்னைப்பிரியேன் என்று நீ அவளுக்குச் சபதஞ்செய்து கொடுத்தால்தான் அவள் உடன்படுவாளென்ன, ஆயின் அவ்வாறே செய்து கொ டுக்கிறேன், தேவரீர் அப்பொழுது திருக்கோயிலிலிராது மகிழின்கீழ் எழுந்தருளி யிருக்கவேண்டுமென்ன, அதற் குச் சிவபெருமான் இசைந்தருளி மீண்டுஞ் சங்கிலியா ரிடத்திற்சென்று சுந்தரன் உனக்குச் சபதஞ்செய்து கொடுக்க இசைந்திருக்கிறான்; அவன் ஆலயத்திற் சப தஞ்செய்ய வந்தால் மகிழடியிற்செய்யும்படி கேள் என்று மறைந்தருளினார். பின்பு சங்கிலியார் திருப்பள்ளி எழுச்

சிக்குப் பூமாலைதொடுக்கத் தோழியாரோடு திருக்கோயி லுக்குட்செல்ல அவருக்குச் சபதஞ்செய்து கொடுக்க அதற்குமுன் வந்திருந்த சுந்தரமூர்த்திநாயனார் அவர் க்கு எதிரிற்போய்த் தமக்குச் சிவபிரான் திருவாய்மலர்ந் தருளியதைச்சொல்ல, அவர் அதற்கொன்றுஞ் சொல் லாமல் நாணமுற்றுச் சேடியரோடு கோயிலுக்குட்சென் றார். சுந்தரமூர்த்திநாயனார் பின்தொடர்ந்துபோய்ப் பெண்ணே உன்னைப்பிரியேனென்று சபதஞ்செய்யச் சந்நிதானத்திற்கு வாரும் என்ன, சங்கிலியார் கண்ட கனவைக் கேட்டறிந்ததோழிமார் இங்கேவேண்டுவ தில்லை மகிழடியிற் சபதஞ்செய்துகொடுமென்ன, அவ் வாறே மகிழடியிற்போய்ச் சபதஞ்செய்து கொடுத்துச் சங்கிலியாரை விவாகஞ் செய்துகொண்டு அங்கு அவ ரோடு சிலநாள் கூடியிருந்து, அதற்குமேல் திருவாரூர் வீதி விடங்கப்பெருமானைத் தரிசனஞ்செய்யாமல் எத் தனைநாள் நீங்கியிருப்பேன் என்று மனவருத்தமுற்று ஆலயத்திற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து திருவொற் றியூ ரெல்லையை நீங்கிய அளவில் இரண்டு கண்ணும் மறைந்தன; மறையவே சபதந் தவறினமையால் நேரிட் டதென்று வருந்தி "அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தேன்" என்னுந் திருப்பதிகம்பாடியும் அத்துன்பம் நீங்கவில்லை; ஆயினும் திருவாரூர்க்குப் போகவேண்டு மென்னும் ஆசை மேன்மேலும் வளர்தலால் சிலர்

முன்னேவழிகாட்டத் திருமுல்லை வாயிலுக்குச்சென்று சுவாமியையவணங்கி "விண்பணிந்தேத்தும் வேதியா" என்னுந் திருப்பதிகம்பாடித் திருவெண்பாக்கத்தைச் சேர்ந்து சிவ பெருமானைப் பணிந்து "திருக்கோயிலுள் ளீரே" என்று விண்ணப்பஞ்செய்ய, சுவாமி அவருக்கு ஊன்றுகோல் கொடுத்தருளி "உளோம்போகீர்" என்றனர். பிறகு சுந்தரமூர்த்தி நாயனர் "பிழையுளன பொறுத் திடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு காஞ்சீபுரத்துக்கெழுந்தருளி ஏகாம்பரநாதரை வணங்கி அவர் திருவருளால் ஒரு கண்பெற்று வழிக்கிடையிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக்கொண்டு திருவாரூர்க்குச்சென்று வன்மீகநாதரைத்தொழுது மற்றொரு கண்ணும் பெற்றுப் பரவையார்ஊடலை நீக்கும் பொருட்டு வீதிவிடங்கப் பெருமானை இரண்டுதரம் அவர் மனையில் தூது அனுப்பி ஊடல் தணிந்தபின் அங்குச்சென்று அவரோடுகூடி நாள்தோறும் வன்மீக நாதரைத் தரிசனஞ் செய்துகொண்டிருந்தனர். இருக்கும்பொழுது தாம் சிவபெருமானைத் தூது அனுப்பிய செய்தியைத் திருப்பெரு மங்கலத்திலிருக்கும் ஏயர் கோன் கலிக்காம நாயனர் கேள்வியுற்று அது தக்கது அன்றென்று தம்மேற் கோபங்கொண்டு இருத்தலை அறிந்து சுமாமி சந்நிதானத்தில் விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் கலிக்காம நாயனருக்குச் சூலைநோயை

ஏவி அவரிடத்திற்போய்ச் சுந்தரன் வந்தாலன்றித் தீராதெனை, அவர் அதற்கு உடன்படாமையைக் கண்டும், சுந்தரமூர்த்தி நாயனாரிடத்தில் வந்து நீ போய்க் கலிக்காமனுடைய சூலையைத் தீர்ப்பாய் என, சுந்தரமூர்த்திநாயனார் சூலைநோயைத் தீர்க்கும்பொருட்டு வரும் செய்திகேட்டுக் கலிக்காமநாயனார் உடைவாளால் வயிற்றைப் பீறிக்கொண்டிருந்தனர்: சுந்தரமூர்த்திநாயனார் அங்குச்சென்று கலிக்காமநாயனார் இறந்திருத்தலை நோக்கி நானும் மரணமடைவேன் என்று உடைவாளை எடுத்தனர். உடனே சிவபெருமான் திருவருளால் கலிக்காமநாயனார் உயிர்த்தெழுந்து உடைவாளைப் பற்றிக்கொள்ள, அவர் விழுந்து நமஸ்கரித்தனர். கலிக்காமநாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கினார். பின்பு இருவரும் அன்போடு அளவளாயிருந்து மீண்டும் திருவாரூர்க்கெழுந்தருளி வன்மீகநாதரைத் தரிசனஞ்செய்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது சேரமான்பெருமான்நாயனார் சிவபெருமானால் சுந்தரமூர்த்தி நாயனாருடைய மகிமையை அறிந்து அவரைத் தரிசிக்கவிரும்பித் திருவாரூரையடைந்து அவரை வணங்க, சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான்பெருமான் நாயனாரை வணங்கினர். பின்பு சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான்பெருமான் நாயனாரைஉடன்கொண்டு ஆலயத்திற்சென்று வன்மீக

நாதரை வணங்கிப் பரவையார் வீட்டுக்கழைத்துக் கொண்டுபோய் விருந்துசெய்து சிலநாள் அவரோடு அங்கிருந்து, இன்னுமுள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்க விரும்பிச் சேரமான்பெருமான் நாயனாரும் கூடவரப் புறப்பட்டுச் சோழநாட்டிலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் வணங்கிக்கொண்டு, பாண்டிய நாட்டிற்சென்று அங்குள்ள மதுரை முதலிய சிவஸ்தலங்களைத் தரிசனஞ் செய்துகொண்டு, மீண்டும் திருவாரூர்க்குச் சென்று வன்மீகநாதரை வணங்கி அங்கிருந்து புறப்பட்டுச் சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு செல்லுகையில் திருவையாற்றுக்குச் செல்லத் தடையாகக் காவேரி பெருகிவருவதைக்கண்டு, சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருப்பதிகத்தால் அவ்வாறு வழிவிடப் பரிசனங்களோடுசென்று பஞ்சநாதேசுரரைத் தரிசித்து வணங்கி மீளவும் அவ்வழியே வந்த பின்பு வெள்ளம் முன்போலப் பெருகியோடிற்று. அவ்விடம்விட்டு நீங்கிக் கொங்கநாட்டிலுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு மலைநாட்டிற் சென்றபோது சேரமான்பெருமான் நாயனார் நகரமாகிய கொடுங்கோளூரி லிருப்பவர்கள் எதிற்கொண்டு வந்து வணங்க, அவர்களுடன் திருவஞ்சைக்களமென்னுந் தலத்திற் சென்று ஆலயத்தைப் பிரதக்ஷிணம் செய்து, திருப்பதிகம்பாடித் துதித்து, சேரமான்பெருமான் நாயனா

ரோடு அவர் திருமாளிகையிற்சென்று திருவமுது செய்து சிலநாள் அங்கிருந்து புறப்படும்போது சேரமான்பெருமான் நாயனூர் தம்முடைய பொக்கசத்திலுள்ள நிதியையெல்லாம் பல ஆட்களின்மேற் சுமத்தியனுப்ப, திருமுருகன்பூண்டி என்னுந் தலத்துக்குச் சமீபமாக வரும்போது சிவபெருமான் ஆக்ஞையால் பூதங்கள் வேடுருக்கொண்டுவந்து அப்பொருளனைத்தையும் பறித்துக்கொண்டுபோய்ச் சுவாமி சந்நிதானத்திற் சேர்த்தன. அது கண்டு சுந்தரமூர்த்தி நாயனூர் திருமுருகன்பூண்டியின் ஆலயத்துட்சென்று சுவாமியை வணங்கி "கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடியமாத்திரத்தில், கடவுள் திருவருளால் அந்தப்பொருளெல்லாம் கோபுரவாயிலில் குவிந்திருக்கக்கண்டு, சுவாமியைவணங்கி அவற்றை எடுத்துக்கொண்டு முன்னேசெல்ல ஆட்களை ஏவி, அவ்விடத்தை நீங்கிக் கொங்கநாட்டைக் கடந்து திருவாரூரை அடைந்து அங்குச் சிவதரிசனஞ் செய்திருந்தனர்.

சிலநாள் சென்றபின் சேரமான்பெருமான் நாயனூரைக்காண விரும்பி, அங்கிருந்து புரப்பட்டுச் சோழதேசத்தைக் கடந்து கொங்கதேசத்தையடைந்து திருப்புக்கொளியூரிற் சென்று அங்கே ஒரு வீதியிலே இரண்டு வீடுகளில் ஒருவீட்டில் மங்கல ஒலியும்,

மற்றொரு வீட்டில் அழுகை ஒலியுமாயிருக்கக்கண்டு அங்கிருந்த பிராமணர்களை நோக்கி இஃதென்னவென, அவர்கள் வணங்கி, ஐந்து வயதுள்ள இரண்டு புதல்வர்கள் குளத்தில் நீராடுகையில் ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றொருவன் பிழைத்துவந்தான். இந்த வீட்டில் முழங்குமோசை பிழைத்துக்கொண்ட புதல்வனுக்கு உபநயனம் செய்யுமங்கல ஓசை. அந்த வீட்டிலுண்டான ஓசை இறந்த பிள்ளையைக் குறித்தழுகைக் குரலோசை என்றனர். அதுகேட்ட சுந்தரமூர்த்தி நாயனார் திருவுளமிரங்கி, அந்தக்குளத்தருகிற் சென்று: அம்முதலை தான் விழுங்கிய புதல்வனை உமிழும்பொருட்டு "உரைப்பா ருரையுகந்துள்கவல்லார்" என்னுந் திருப்பதிகம் பாடியபோது, அம்முதலை பிள்ளையைக் கரையில் உமிழ்ந்தது. தாய் ஓடி அப்பிள்ளையை எடுத்துக்கொண்டு வந்து, நாயகனோடு தானும் சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிகளில் விழுந்து நமஸ்காரஞ்செய்தனர். சுந்தரமூர்த்தி நாயனார் அப்புதல்வனை அழைத்துக்கொண்டு அவிநாசிக்குப் போய்ச் சிவதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடித் திரும்பி, அப்புதல்வன் வீட்டிற்சென்று அவனுக்கு உபநயனஞ் செய்வித்து அதன்பின்பு மகோதை என்னுந்தலத்திற் சென்றிறங்கி யிருக்கையில், ஒருநாள் சேரமான்பெருமான் நாயனார் ஸ்நாநஞ் செய்யும்போது

சுந்தரமூர்த்தி நாயனார் மீண்டும் திருவஞ்சைக்களத் திற்குச்சென்று, அங்குள்ள ஆலயத்தை வலஞ்செய்து உள்ளே புகுந்து சந்நிதியில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, அழலிற்பட்ட மெழுகுபோல் உள்ள முருக, மயிர்க்குச்செறியக் கண்ணீர்பெருக, இரண்டு கைகளும் சிரசின்மேற்குவியத் துதித்து, அடியேனை மாயாகாரியமாகிய இவ்வுலகவாழ்க்கையினின்று நீங் கித் தேவரீருடைய திருவடியிற் சேர்த்தருளவேண்டு மென்னுங் கருத்தோடு "தலைக்குத் தலைமாலை" என் னுந் திருப்பதிகம் பாடியருள: தயா சமுத்திரமாகிய சிவபெருமான், பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களை நோக்கி, நீங்கள் சென்று நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளையானையின்மேல் ஏற்றிக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டருள, அவர்கள் அவ் வாறே சென்று சந்நிதானத்தினின்றும் எழுந்தருளு கிற சுந்தரமூர்த்தி நாயனாரை எதிர்க்கொண்டு, சிவ பெருமானுடைய திருவாணையைத்தெரிவிக்க, சுவாமி யை வணங்கி, வெள்ளையானையின் மேலேற்றிச் செல்லு கையில், தம்முடைய தோழராகிய சேரமான் பெரு மான் நாயனாரை நினைத்துச்செல்ல, சேரமான்பெரு மான் நாயனார் அஃதறிந்து ஓர் குதிரையின் மேலேறி அதிவிரைவாகத் திருவஞ்சைக்களத்துக்குப் போய், சுந்தரமூர்த்தி நாயனார் வெள்ளையானையின் மேலேறி

அந்தரமார்க்கமாய்ச் செல்வதையுணர்ந்து, தம்முடைய குதிரையின் காதில் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிய அளவில், அக்குதிரை ஆகாயமார்க்கமாய்ப்போய் சுந்தரமூர்த்தி நாயனாரேறிச்செல்லும் வெள்ளையானையை வலம்வந்து அதற்கு முன்சென்றது. சேரமான் பெருமான் நாயனார் படைவீரர்கள் அவரைக் கண்ணுக்குத் தோன்றுமளவும் ஆகாயத்திற்கண்டு பின்காணுமையால் மனவருத்தமுற்றுத் தம்தம் உடைவாளால் உடலைச்சேதித்து வீரயாக்கையைப்பெற்று அந்நாயனாருக்கு முற்பட்டு அவரைத் தரிசித்துக்கொண்டு சென்றனர். சேரமான் பெருமான் நாயனார் முன்செல்லப் பின்சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் "தானெனை முன் படைத்தான்" என்னுந் திருப்பதிகம் பாடிக் கொண்டு திருக்கைலாச மலையின் தெற்குவாயிலுக்கு முன்சென்றனர். அங்கு, இருவரும் வாகனங்களினின்றிறங்கி, சந்நிதானத்திற்சென்று, கைலாசபதியை நமஸ்கரித்தெழுந்து, அவருடைய திருவருளால் பழயபடி ஆலாலசுந்தரராய்த் தான்முன் செய்துகொண்டிருந்த திருத்தொண்டு செய்பவரும், சேரமான் பெருமான் நாயனார் தம்தொழில் செய்பவரும் ஆயினர்.

முன் பூமியின்கண் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முன்போலக் கமலினியும் அனிந்திதையுமாகி, பார்வதியாருக்குத் திருத்தொண்டு செய்

திருந்தனர். சுந்தரமூர்த்தி நாயனார் தாம் வழியிற் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை வருண ராஜனிடம் கொடுத்தருள, அவன் அதை திருவஞ் சைக் களத்திற் கொண்டுபோய் விளக்கினன்.

முற்றிற்று.

---

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருநாவுக்கரசுநாயனார் சரித்திரம்.

திருமுனைப்பாடிநாட்டில் சிறப்புற்றோங்கிய திருவாமூரில் வேளாளர்குலத்தில் குறுக்கையர் குடியில் தோன்றிய புகழனார்செய்த அருந்தவத்தால், அவர் மனைவியாராகிய மாதினியார் திருவயிற்றில் திலகவதியார் அவதரித்தனர். பின்னர் மருநீக்கியாரென்னும் பிள்ளைத் திருநாமமுடைய திருநாவுக்கரசுநாயனார் அவதரித்தனர். இவர்களிருவரில் மருநீக்கியார் சைவாக முதலிய கலைபயின்று வருநாளில் சில முதி

யோர் புகழனாரிடத்து வந்து கலிப்பகையாரென்பவருக்குத் திலகவதியாரைத் திருமணஞ்செய்விக்கத் தரவேண்டுமென, அவர் அதற்கு உடன்பட்டனர். இச்செய்தியை அம்முதியோர் கலிப்பகையார்க் கறிவிக்க, அவரும் மணஞ்செய்துகொள்ள விருப்பமுற்றிருக்கும்போழ்து, சோழமகாராஜன் சேனாதிபதியாகிய கலிப்பகையாரை வடதேசத்துப் பகைமன்னரோடு போர்செய்யும்படி ஏவ, அவர் சேனையுடன் சென்று பகைவரோடு நெடுநாள் யுத்தஞ்செய்துகொண்டிருந்தனர். அவர் அங்ஙனமிருக்க, இங்கு புகழனாரும் மாதினியாரும் மருநீக்கியாரும் தாய் தந்தையர் தேகவியோக மடைந்ததுகண்டு துன்புற்று, உறவினர் தேற்றத்தெளிந்து, மருநீக்கியார் தாய் தந்தைகட்குச் செய்யவேண்டுங் கர்மாதிகளைச்செய்து முடித்திருந்தனர். அங்கு அமர்செய்திருந்த கலிப்பகையார் பகைவரைவென்று புகழ்கொண்டு வீரசுவர்க்கம் எய்தியதைக் கேள்வியுற்ற திலகவதியார் உயிர் துறக்கக் கருதியபோது, மருநீக்கியார் வேண்டுகோளால் விட்டு, சிவபெருமான் திருவடிக்கன்பு பூண்டு அந்நெறிக்கண்ணே யிடையறா தொழுகிநின்றனர். இவர் இவ்வாறிருக்க, மருநீக்கியார் வீட்டு நெறியை யடையக்கருதியும் சிவபெருமான் திருவருளின்மையின் மெய்ச்சமயமாகிய சைவசமயத்தை விட்

டுப் பொய்ச்சமயமாகிய சமணசமயத்தைக் கைக்கொண்டு, அச்சமய நூல்களைக் கற்றுணர்ந்து அவரின் மேம்பட்டுத் தருமசென்ரென்னும் பெயர் பெற்று ஒழுகிவந்தனர். திலகவதியார் இதை அறிந்து திருவதிகையிற் சென்று சிவவேடம் பூண்டு சிவாலயத்தில் திருவலகிடுதல், திருமெழுகிடுதல், திருமாலை தொடுத்தல் முதலிய திருத்தொண்டு செய்து வாழ்ந்திருந்தனர். தம்முடன் பிறந்தவராகிய மருநீக்கியார் பரசமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுவதை வீரட்டானேசுவரர் சந்நிதியில் நாள்தோறும் விண்ணப்பஞ் செய்யாநிற்க, ஒருநாள் வீரட்டானேசுவரர், திலகவதியார் சொப்பனத் தெழுந்தருளி, உன்னுடன் பிறந்தவனுக்குச் சூலை நோயை உண்டாக்கி அவனை நாம் ஆட்கொள்ளுகிறோம், நீ துன்பப்பட வேண்டுவதில்லையென்று கட்டளையிட்டருளினார். அவ்வாறே அவர்க்கு அந்நோயை உண்டாக்கியவளவில், அவர் பொறாது தமக்குத் தெரிந்த மந்திரங்களாலும், சமண முனிவர் மந்திரங்களாலும் தடுக்கவும் அது மேன்மேலு முதிர்வது கண்டு, இனி யிதற்கென் செய்வோமென்று வருந்தி திலகவதியாருக்கறிவிக்க, அவர் நாம் அங்கு வரோமென்றதை ஓர் ஏவலாளனால் உணர்ந்து அவனையே துணைப்பற்றிக்கொண்டு ஒருவர்க்குந் தெரியாது இராவழிக்கொண்டு சென்று திருவதிகையென்

னுஞ் சிவத்தலத்திற் சேர்ந்து திலகவதியாரைக்கண்டு வணங்கி, தாயே! இச்சூலைநோயால் யான்படுந் துயரத் திற்கோர் அளவில்லை. இது தீரும்படி நீர் அநுக்கிர கஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, திலகவதி யார் மனமிரங்கிச் சிவபெருமான் திருவருளைப் பல முறை சிந்தித்துத் தொழுது சகோதரராகிய மரு நீக்கியாரைநோக்கி, நீர் கடைத்தேறும் பொருட்டு, வீரட்டானேசுவரர் திருவருளால் உமக் கின்நோய் நேரிட்டது. ஆதலால், அவரைத்தொழுது துதித்தா லன்றி இந்நோய் தீராதென்று திருநீரளித்து அணிந் துகொள்ளச்சொல்லி, சுவாமி சந்நிதானத்திற் கழைத் துக்கொண்டுபோய் ஆலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிப் பரமபிதாவாகிய சிவபெருமான் கிருபை யால் பதிகம் பாடவேண்டு மென்னும் பேரன்பு தம் முள்ளத்தின்கண் உதிக்க, அவ்வாரே "கூற்றாயின வாறு விலக்ககலீர்" என்னுந் திருப்பதிகம் பாடினர். அங்ஙனம் பாடியமாத்திரத்தில் அந்நோய் நீங்கப் பேரானந்த மடைந்து, சிவபெருமான் றிருவரு ளிருந்த படியைக் கருதிப் பரவசமுற் றிருக்கும் பொழுது, நீ இனிமையாகப் பதிகமோதிய தன்மை யால் உனக்கினி நாவுக்கரசென வோர் பெயர்வழங்கக் கடவதென்று அசரீரிவாக்குண்டாயிற்று. அது கேட்டு மிருதிய மகிழ்ச்சியுற்றுப் பசுபதியைப் பலமுறை

பணிந்து, அன்று தொட்டுச் சிவவேடம் பூண்டு திருத்தொண்டு செய்திருந்தனர்.

சமணர்கள் இஃதறிந்து இனி நம்முடைய சமயம் பொய்த்தது. அரசனிஃதுணர்ந்தால் அவனுஞ் சைவனுவான். ஆதலால், அவனறிவதற்கு முன்னே நாம் போய் வேறுவகையாகத் தெரிவிக்க வேண்டுமென்று தம்முள் ஆலோசித்து, அரசனிடத்துச்சென்று தருமசேனர் சைவசமய விருப்பத்தால் அதிற் சேரக்கருதிக் கபடமாகத் தமக்குச் சூலைநோய் கண்டதென்றும், அது நம்மந்திரங்களால் தீரவில்லையென்றும் கற்பித்து நம்முடைய சமயத்தை இழிவுபடுத்தித் தம்முடைய தமைக்கையினிடத்திற்சென்று சைவராயினரென்று சொல்லினர். அரசன் அதுகேட்டு வெகுண்டு இங்ஙனஞ் சமயத்துரோகஞ் செய்தவனை யாது செய்ய வேண்டுமென, அவர்கள் நீற்றறையி லிடவேண்டுமென்றனர். அரசனுணையால் அவ்வண்ணமே செய்யத் திருநாவுக்கரசு நாயனர் "மாசில்வீணையு மாலைமதியமும்" என்னும் திருப்பதிகம் பாடிச் சிவபெருமானைத் துதித்து அதனுற் சிறிதும் இடையூறின்றி இருக்க, சமணர்கள் ஏழாம்நாள் நீற்றறையைத் திறந்து பார்க்கும்பொழுது அவர் தமது திருமேனியில் யாதொரு துன்பமுமின்றி யிருக்கக்கண்டு அதிசயித்து, மீண்டும் பாலில் விஷங்கலந்துகொடுக்க, அதையும் உண்டு உயிர்

வாழ்ந்திருந்தனர். பின்னர் அவரை மிதிக்கும்படி யானையை ஏவினர். அப்போது "சுண்ணவெண்சந்தனச்சாந்து" என்னும் பதிகம்பாடியருள, அவ்வானைத் திருநாவுக்கரசு நாயனாரை வணங்கித் தன்மேல் ஏறியிருந்த பாகரையுஞ் சமணரையுங்கொன்று சென்றது. பிறகு கற்றூணிற் கட்டிக் கடலிலிட்டனர். அப்பொழுது மருணீக்கியார் பரமசிவத்தை தியானித்து "சொற்றுணை வேதியன்" என்னும் பதிகம் பாடத் தொடங்கக் கட்டுகளெல்லாம் நீங்கி, அக்கற்றூண் தெப்பம்போல் மிதக்க அதன்மேலிருந்து திருப்பதிகம் முற்றும் பாடியருளித் திருப்பாதிரிப்புலியூருக் கடுத்த திருக்கெடிலநதி முகத்துவாரக் கரையிற்சேர்ந்து திருப்பாதிரிப்புலியூருக் கெழுந்தருளி அங்குச் சிவபெருமானை வணங்கித் திருப்பதிகம்பாடித் துதித்து மறுநாள் திருவதிகை வீரட்டானேசுவரரை வணங்கித் திருப்பதிகம்பாடிக் கைத்தொண்டு முதலிய திருத்தொண்டு செய்தொழுகுநாளில், சமணவரசனாகிய பல்லவனென்பவன் திருநாவுக்கரசு நாயனாரது உண்மையை உணர்ந்து, தானுஞ் சைவனாகிச் சமணர் மடம், ஆலயம் முதலியவற்றை இடித்து ஓர் சிவாலய பிரதிட்டை செய்து வாழ்ந்தனன்.

பின்பு திருநாவுக்கரசு நாயனார் திருவதிகை வீரட்டானத்தினின்றும் புறப்பட்டு அருகிலுள்ள சிவால

யங்கள் அனைத்தையுந் தரிசித்து, திருப்பதிகம்பாடித் துதித்து, திருத்தூங்கானை மாடத்திற்சென்று சிவ பெருமானைத் தரிசித்து வணங்கி நின்று, ஐயனே! சமண சமயச் சார்பிலிருந்த இவ்வுடலைப் பொறுத் திருக்க அருவருக்கின்றேன்; ஆதலால், தேவரீருடைய இலச்சினையை அடியேனுடலில் தரித்தருளள்வேண்டு மென பதிகம்பாடித் துதிக்க, அவ்வாறே சிவபெரு மான் திருவருளால் ஒருவருக்குந் தெரியாமல் ஓர் பூதம் வந்து சூலக்குறியோடு இடபக்குறியையும் தமது திருத்தோளில் பொறிக்க மகிழ்ந்து துதித்து அங்கிருந்து புறப்பட்டு மற்றைச் சிவஸ்தலங்களை யும் வணங்கிக்கொண்டு அளவிலா அன்பு மேன்மே லும் பெருக, சிதம்பரத்திற்சென்று சிற்சபையில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் நடேசரைத் தொழுது, திருப்பதிகமோதித் துதித்து, விடைபெற் றுக்கொண்டு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைத் தரிசிக்க வேண்டுமென்னும் பேராசையோடு செல்லும் போது அவர் தமது திருக்கூட்டத்துடன் எதிர்வரக் கண்டு வணங்க, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், அப்பரே! எழுந்திருமென்று தமது திருக்கரத்தா லெடுக்க, எழுந்திருந்து அவருடன் சீர்காழியிற்சென்று சிவபெருமானைத் தரிசித்து, திருப்பதிகம்பாடித் துதித்து, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திரு

மாளிகையில் திருவமுது செய்து வீற்றிருந்து சோழநாட்டின்கண்ணுள்ள சிவாலயங்களை தரிசிக்க வேண்டுமென்னும் ஆவலோடு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருடன் எழுந்தருளி, திருக்கோலக்காவிற் சென்று சிவபெருமானைத் தொழுது பதிகம்பாடி, அங்கிருந்து தனித்துசென்று மற்றைச் சிவஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டு, பிறகு திருச்சத்தி முற்றத்திற் சென்று சிவபெருமானை பலமுறைபணிந்து கூற்றன் வரு முன்னரே அடியேன் முடியில் தேவரீர் திருவடி சூட்டவேண்டுமெனத் திருப்பதிகம் பாடியருள, சுவாமி திருநல்லூர்க்கு வருகவென, அவ்வாறே அங்குச்சென்று, ஆலயத்தில் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து நின்றபொழுது, எம்பெருமான் திருவடிசூட்ட, திருப்பதிகம்பாடித் துதித்து, அங்கிருந்து புறப்பட்டுத் திங்களூரிற்சென்று தம்மிடத் தன்புள்ள அப்பூதி நாயனரைக்கண்டு மகிழ்ந்து, அவரது வேண்டுகோளால் அவர்திருமனையில் திருவமுது செய்ய வுடன்பட்டமையால் அந்நாயனர் மனைவியார் திருவமுது சமைத்து, மூத்த திருநாவுக்கரசென்னும் புதல்வனை நோக்கி, நீ சென்று வாழையிலை கொய்துவருகவென வேவ, அப்புதல்வன் சென்று வாழையிலை யறுக்கும்பொழுது சர்ப்பந் தீண்டிற்று. அவன் கொய்த இலையைக் கொண்டு வந்து தாய்கையிற்கொடுத் திறந்தனன்.

அவர்கள்கண்டு விஷந்தீண்டி யிருக்கலாமென்று தமக்குள் குறிப்பாலறிந்து, அவ்வுயிர் நீங்கிய வுடலை மறைத்துத் திருநாவுக்கரசு நாயனாரிடத்துச்சென்று திருவமுது கொள்ள எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அவரதையுணர்ந்து தேவாரமோதிப் புத்திரனைப் பிழைப்பித்து, அப்பூதி நாயனாருடன் திருவமுது செய்து, அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரிற்சென்று திருக்கோயிலுட் புகுந்து, வன்மீகநாதரைப் பதிகம் பாடித் துதித்து, திருப்புகலூர்க்கு வருகையில், அங்கு முன்னரே எழுந்தருளியிருந்த திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் கேள்வியுற்று எதிற்கொண்டுவர, இருவருங்கண்டு வணங்கித் திருப்புகலூரைச் சேர்ந்து, சிவதரிசனஞ் செய்து திருப்பதிகமோதி, முருக நாயனார் திருமடத்தில் எழுந்தருளித் திருவமுதுசெய்து, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாரூர்க்கெழுந்தருள, திருநாவுக்கரசு நாயனார் அங்குள்ள மற்ற சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு மீண்டும் திருப்புகலூரில் முருக நாயனார் திருமடத்தில் வீற்றிருக்கத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் அங்கெழுந்தருளினர். பின்னர் இவ்விருவர்களும் திருவீழிமிழலையிற்சென்று சிவதரிசனம்செய்து தேவாரமோதித் துதித்து அங்கிருக்கும்பொழுது, காலமழையின்றி பஞ்சமதிகரிக்க, சிவபெருமான் திருவுள

யிரங்கித் தம்மடியார்க்குப் படிக்காசு கொடுத்தருள, அதனால் அச்சிவனடியார்கள் இடைவிடாது வரு கின்ற யாவர்க்கும் அமுதுபடைத்துக்கொண்டிருந்து பிறகு திருமறைக்காடென்னுந் தலத்திற்சென்று தேவர் பூசித்துச் சாத்திய திருக்கதவும் திறக்கும்படி, "பண் ணினேர் மொழியாளுமை பங்கரோ," என்னும் திருப் பதிகமோதிப் பின்னர் சோழநாட்டின்கண்ணும் நடு நாட்டின்கண்ணுமுள்ள சிவஸ்தலங்க ளனைத்தையுந் தரிசித்து வணங்கி, தொண்டைநாட்டிற் கெழுந்த ருளி, அங்குள்ள காஞ்சி முதலிய ஸ்தலங்களை வணங் கிக்கொண்டு, திருக்காளத்திமலைக் கெழுந்தருளிச் சிவ பெருமானை தரிசிக்கும்பொழுது, ஸ்ரீகைலாசம் தரி சனமாக, அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீமல்லிகார்ச்சுன மென்னுந் தலத்திற்சேர்ந்து சிவபெருமானைத் தரிசித் துத் திருப்பதிகமோதித் துதித்து விடைபெற்றுக் கொண்டு, வடக்கு நோக்கிச்சென்று கங்கைக்கரை சேர்ந்து காசிவிசுவநாதரைத் தரிசித்து வணங்கி, அங் குத் தம்பரிசனங்களை நிறுத்தி, தாம் தனியே இர வும் பகலும் இடைவிடாமல் நடந்து, காடுமலை காறு யாவுங் கடந்து பாலைவனத்திற் செல்லும்பொழுது, அதன் வெப்பத்தாற் கால்கள் பாடுவரையினும், கை கள் மணிகட்டுவரையினுந் தேய நடக்கச் சக்தியற்று, பின்னர் மார்பால் தவழ்ந்தும், புரண்டுஞ் சென்று

அதற்குஞ் சக்தியின்மையால் மூர்ச்சித்துக்கிடக்க, சிவபெருமான் திருவுளமிரங்கி இவ்வுலகத்தின்கண்ணுள்ள ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுத் திருப்பதிகம் பாடியருளவேண்டுமென்னுங் கருத்தால், திருக்கைலாயத்திற்குவரக் கட்டளையிட்டருளாது ஓர் பிராமண வடிவங்கொண்டு திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னெழுந்தருளி, நீரிங்ஙனம் வருந்திய தென்னையென, அப்பொழுது சிவபெருமான் கிருபாநோக்க விக்ஷண்ணியவிசேஷத்தால் திருநாவுக்கரசு நாயனார் சற்றுணர்வுற்று அம்மறைவரை நோக்கித் திருக்கைலாச தரிசனஞ் செய்யவேண்டுமெனும் பேராசையால் இங்ஙனம் வந்தேனென, அதற்கு அவ்வந்தணர் திருக்கைலாச தரிசனம் மானிடர்களுக்குக் கிடைக்கத்தக்கதோவென, இவ்வுடல் எவ்வகையாலும் அழிவது ஆகையால், கைலாசதரிசனஞ் செய்தாலொழிய மீளேனென்றனர். அவரது மனவுறுதியை நன்குணர்ந்த சிவபெருமான் அப்பிராமணவுருக் கரந்து, அறவடிவாகிய இடபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய்த் தோன்றி, நாவுக்கரச! எழுந்திருவென்று திருவாக்கருளிய அளவில், திருநாவுக்கரசு நாயனார் திருமேனி முன்போலப் பழுதின்றி விளங்க உணர்வுற்றுச் சிவபெருமானே! அடிமைக்குத் திருக்கைலாச தரிசனந் தந்தருளவேண்டுமென்று பலவாறாகத் தோத்

திரஞ்செய்தனர். சுவாமி எழுந்தருளியபோது உண்டாகிய தடாகத்தைக்காட்டி, இதில் முழுகி திருவையாற்றிற்சென்ருல் அங்குக் கைலாச தரிசனஞ் செய்வாயென, அவ்வண்ணமே அத்தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றில் ஓர் தடாகக்கரையிலேறிச் சிவபெருமான் சந்நிதானத்திற்சென்று நந்திதேவர் முதலிய பிரமதகணங்களும், முனிவர்களும் இந்திராதி தேவர்களும் வந்து நெருங்கியிருக்கவும், தேவதுந்துமி முழங்கவும், நான்குவேதங்களும் கோஷிக்கவும், பார்வதி சமேதராய் எழுந்தருளியிருக்கும் கைலாசபதியைக்கண்டு தரிசித்து வணங்கி ஆநந்தபரவசராய்த் திருப்பதிகம் பாடித் துதித்து, பின்பு அக்காட்சி போய் பழையபடி ஆலயமாயிருக்கக்கண்டு, மனவருத்தமடைந்து இன்னுமுள்ள சிவஸ்தலங்களனைத்திற்கும் சென்று தரிசிக்கவேண்டுமென்னும் பேரன்பினுல் திருப்பூந்துருத்தி என்னும் சிவஸ்தலத்திற்கெழுந்தருளிச் சிவதரிசனம்செய்து, திருப்பதிகம் பாடித் துதித்து, கைத்தொண்டுஞ்செய்து அங்கோர் மடாலயம் கட்டுவித்து அதில் வீற்றிருந்து காலங்கள்தோறுந் தவருது சிவதரிசனஞ் செய்துகொண்டிருக்கையில், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் மதுரைக்கெழுந்தருளிச் சமணரை வாதில் வென்று மீண்டும சோழவளநாட்டிற்கு வரும்போது திருநாவுக்கரசு

நாயனாரைக் காணவேண்டுமென்னும் ஆசையால் திருப் பூந்துருத்திக் கெழுந்தருள, அதைத் திருநாவுக்கரசு நாயனா ருணர்ந்து, ஒருவரும் அறியாதுசென்று திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எழுந்தருளிய முத்துச் சிவிகையைத் தமது அருமைத் திருத்தோளால் தாங்க, அதைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அறியா மையால், அப்பர் எங்கு என்ன, அடியேன் தேவரீர் முத்துச்சிவிகையைத் தாங்கும் பெருவாழ்வு பெற் றுளனென, அம்மொழி தம் திருச்செவியில் புகு முன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விரைவிற் சிவிகையை விட்டிறங்கித் திருநாவுக்கரசு நாயனாரைப் பணிய, அவரதற்கு முன்னரே வணங்கக்கண்ட சிவ னடியார்களனைவரும் அவ்விருவர்களையும் தொழுது அடங்காமகிழ்ச்சியால் ஆரவாரித்தனர். பிறகு திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாய னாரும் ஆலயத்திற்கெழுந்தருளி, சுவாமி தரிசனஞ் செய்து திருமடத்திற்குப்போய் அளவளாய் இருவ ரும் அமர்ந்திருக்கையில், மதுரையில் நடந்த செய்தி கள் எல்லாவற்றையுந் திருக்கூட்டத்தார் சொல்லக் கேட்டு ஆநந்தமடைந்ததுமன்றிக் குலச்சிறை நாயனார், மங்கையர்க்கரசியார் ஆகிய இவர்களுடைய சிவநேச மிகுதியைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திரு வாய் மலர்ந்தருளக்கேட்டு, பரவசமடைந்து, உடனே

தாமும் மதுரைக் கெழுந்தருளிச் சொக்கநாதரையும், அங்கயற்கண் ணம்மையையும் தரிசித்து, திருப்பதி கம்பாடித் துதித்திருக்கையில், மந்திரியாராகிய குலச் சிறை நாயனாரும், பாண்டியராஜராகிய நின்றசீர் நெடு மாற நாயனாரும் வந்து வணங்க, மகிழ்ந்து அவர்க் கினியவசனங்கள் சொல்லிப்போக்கி, அங்கிருந்து புறப்பட்டு இடையிலுள்ள சிவஸ்தலங்களைத் தரி சித்து, இராமேசுரத்திற் கெழுந்தருளி இராமேசுரரை தரிசித்து, பதிகம்பாடிச் சாத்தி, அங்குச் சிலநாள் வரையிலிருந்து, மீண்டும் சோழவளநாட்டிற் கெழுந் தருளித் திருப்புகலூரிற்சென்று சிவபெருமானைத் தரி சித்து வணங்கி அங்குழவாரத்தாற் கைத்தொண்டு செய்து வாழும்நாளில், பரமகாருண்யராகிய சிவபெரு மானார் திருநாவுக்கரசு நாயனாரது பக்தி மிகுதியை உலகத்தின்கண்ணுள்ள ஆன்மகோடிகளுக் கறிவிக் கும்பொருட்டு, அவர் உழவாரப்படையாற் செதுக்கு மிடங்களிலெல்லாம் பொற்குவையும் நவமணிக் குவையுமாகச் செய்தருள, அவற்றை ஓடுங் கற் களுமாக மதித்துத் திருவலகிட்டெறிய, பின்பு அவ ரை மயக்கும்படி அரமகளிரை ஏவ, அவர்களங்ஙன மெய்தி மயக்க, அதுகண்டு திருநாவுக்கரசு நாயனார் வினையைக்குறித்து "உம்மா லிங்கென்ன குறையுடை யேனான்" என்னுந் திருத்தாண்டக மோதியருள,

அம்மாதர்கள் இவரை மயக்குவது நம்மாலாவது அன்றென்று கருதிப்போயினர். பின்பு திருநாவுக்கரசு நாயனார் அத்தலத்திலேயே சிவபெருமானை இடையறாது தரிசனஞ்செய்து பதிகம்பாடிச் சாத்தி வாழும் நாளில் ஓர்நாள் "எண்ணுகே னென்சொல்லி யெண்ணுகேனே" என்னுந் திருத்தாண்டகமோதிச் சிவானந் தாதீதராய்ச் சிவபெருமான் திருவடிநிழலில் சேர்ந்தருளினர்.

முற்றிற்று.

---

உ

சிவமயம்

## மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகரென்பவர் சைவத்துக்கு ஒரு பெரிய சமயாசாரியராயுள்ளவர். அவரைத் தேவாரமாகிய தமிழ்வேதஞ் செய்தருளிய திருஞான சம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் இம்மூவரோடு சேர்த்துத் துதிசெய்து வருகிறார்கள். அவராலே அருளிச்செய்யப்பட்ட இத்

திருவாசகமானது அனேகருக்குப் பக்தி ஞானங்களை உண்டாக்குகின்றது. அவருக்குப் பரிசுத்த சிவஸ் தலங்களிலெல்லாம் மார்கழிமாதத்திலே திருவிழா நடத்தப்படுகின்றது.

அம்மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டிய ராஜன் காலத்திலே, தென்றிசையிலே, பாண்டிவள நாட்டிலே, வையை யாற்றங்கரையிலே, திருவாத வூரிலே, ஆமாத்தியர் என்கிற அந்தணர்குலத்திலே, திருவவதாரஞ் செய்தருளினார். ஆதியிலே வாதவூர ரென்பது அவருக்குத் தந்தையாரால் கொடுக்கப்பட்ட பெயராயிருந்தது. அவர் இளமைப்பருவங் கடப்பதன் முன்னாகவே, தம்மரபுக்குரிய வேதாகம முதலிய வற்றையும், பிறநூல்களையும் கற்று, அறிவிலே பெரி யவரானார்; ஒழுக்கங்களிலே உயர்ந்தவரானார்.

திருவாதவூரர் மகிமைகளெல்லாம் மதுரை அரி மர்த்தன பாண்டியனுக்குத் தெரியவந்தது. அவ்வர சனே வாதவூரரை உடனே வரவழைத்து அவருடைய குணங்களையெல்லாம் தீவிர ஆராய்ச்சிசெய்து வியந்து, மேலான சிறப்புகள் செய்து தென்னவன் பிரமராயன் என்னும் பெயருங்கொடுத்துத் தன்னிடத்தே முதன் மந்திரியாக அமர்த்திக்கொண்டான். அவர் அரச னுடைய ஆணையைத் தவறாதும் சிவனடியார்களுக்கு இனபத்தை செய்பவராகவும், இப்படிப்பட்ட பெருஞ்

செல்வத்தோடு கூடிவாழ்ந்திருக்கையில் இந்த மண்ணுலகவின்பமும், அந்த விண்ணுலக வின்பமும் அநித்தியங்களென்கிற விவேகம் தோன்ற யாவும் அவை வெறுக்கப்பட்டன. ஆகையால் பேரின்ப வீட்டுக்கு ஏதுவாகிய தத்துவ ஞானத்தைப் போதிக்கவல்ல ஆசாரியரைக் காணுதற்கு அவாக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்கையில் அரசன் வழக்கம்போல் ஒரு நாள் சிங்காசனத்திலே அமர்ந்து விசாரணை செய்து வருகையில், குதிரைக் காவலன் வந்து, பணிந்து நின்று "நம்முடைய குதிரைப்படைகளுள் மரித்தவைபோக இரவாமலிருப்பவை மிகவும் நோயுடையவைகளாயுமிருக்கின்றன. ஆதலால் சிறந்த குதிரைகள் ஒன்றுமில்லை. இக்குறையை நீக்கியருளல் வேண்டும்" என்று வினவ அவனை அனுப்பிவிட்டு, தன் உடலும் உயிரும்போல் இருப்பவரும், சிவபெருமானிடம் அன்புடையவருமாகிய வாதவூரரை நோக்கி, "நமது பொக்கிஷசாலையைத் திறந்து வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு கீழ்கடற் றுறையிலே சென்று குதிரைகள் வாங்கி வரும்படி அவரை ஏவினான். ஏவப்பட்ட அம்முதன் மந்திரியார் அளவிறந்த பொற்குவைகளைக் கைக்கொண்டு நால்வகைச் சேனைகளாலும் சூழப்பட்டுச் செல்கையில் வழி நடுவிலே திருப்பெருந்துறையென்னும் ஆலயத்தைச் சமீபித்

தார். அப்போது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்கிற ஐந்தொழில் நடத்தும் ஆதிபகவனாகிய பரமசிவனார் திருவாதவூரார்க்கு அருள் செய்தற் பொருட்டுத் திருப்பெருந்துறையிலே, குருந்த மரத்தடியிலே, தமதுகணங்கள் மாணாக்கராய்ச் சூழ்ந்திருக்க நடுவே தாம் ஒரு ஞானாசாரியராய்த் திருவுருக்கொண்டு வீற்றிருந்தருளினார். அச்சமயத்தில் வாதவூரார் தெய்வவசத்தால் சிவபெருமான் வந்து தங்கியிருந்த அச்சோலையில், தொண்டர் பலர் சிவாகமம் ஓதுவது தம் செவியில்பட்டது. அதைக்கேட்டதும் தம்முடன் வந்த சில தூதர்களை அழைத்து நீங்கள் இந்தச் சோலைக்குட்சென்று சிவாகமம் ஓதுவது யாவரெனக் கண்டறிந்து வாருங்கள் என்று கூறி அனுப்பினார். அவர்கள் அவ்வாறே சென்று அச்சோலைக்குட் போய்ப்பார்த்து குருந்த மரத்தடியிலே ஒரு பெரியவர் வீற்றிருக்க அவரைச் சூழ்ந்து அடியார்கள் சிவாகமம் ஓதுகின்றனர் என்று கூறினர்.

இதைக்கேட்டதும் திருவாதவூரருடைய நெஞ்சம் நெருப்பில் விட்ட நெய்யைப்போல் உருகியது. உருகவே வாதவூரர், "ஓ! என்னை யாளவந்த குருநாதன் இவரே" என எண்ணி, உடல் புளகமடைய உவந்து, சரேலெனப் பல்லக்கிலிருந்து இறங்கி அச்சோலைக்குட் சென்று அந்தத் தெய்வசபையைக் கண்

டார். அங்கே, தொண்டர் பலர்சூழக் குருந்த நிழலில் வீற்றிருக்கும் பெரியவர், தம் செவியிலும் சிரசிலும் கண்டத்திலும் மார்பிலும் கரங்களிலும் உருத்திராக்ஷமணிந்து, விபூதியை நெற்றியில் திரிபுண்டரமாகவும் உடல் முழுதும் உத்தூளனமாகவும் தரித்துக்கொண்டிருந்த குருமூர்த்தியைக் கண்டபொழுதே "வெங்கொடுஞ்சுரத்து வெயிலிடை வருந்தியோன் தண் மலர்த் தருவைத் தன்னெதிர் கண்டென விரைந்து செல்வேட்கை பொருந்தினராகி, அழலிடைப்பட்ட மெழுகெனவுருகி அழுதகண்ணுந் தொழுத கையுமாய்ச் சென்று திருவடிகளிலே வீழ்ந்து, தேவரீர் அடியேனுக்கு அருள்செயல் வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

சிதம்பரத்திலே திருநடனஞ்செய்யும் அருட்பரஞ்சோதியாகிய சிவபெருமான் வாதவூரரின் அதி தீவிர பக்குவத்தைக்கண்டு அவர்பால் கிருபை வைத்து, சூரியன் முன்னே ஒளிக்கும் தாமரைமலர் போன்ற திருவாதவூரரின் திருமுகத்தை நோக்கி "நீ முன் ஜன்மத்திலே செய்த தபோபலத்தினால் உன்னை அடிமைகொள்ளும் பொருட்டே இந்தத் திருப்பெருந்துறைக்கு யாம் வந்தோம்; இனி சஞ்சலப்படவேண்டாம்" என்று மொழிந்து, பரமபக்த சிரோமணியாகிய வாதவூரரை சிவபெருமான் அருகிலழைத்து,

திருவருள் சுரந்து ஞானதீக்ஷைசெய்து பதி, பசு, பாசம் என்கிற முப்பொருள்களினியல்புகளும், ஐந் தெழுத்தடைவால் உபதேசித்தருளினார். அவ்வுபதே சப்பொருளை வாதவூரர் ஆநந்தப் பரவசத்துடன் அங் கையினெல்லிபோற்பெற்ற மாணாக்கரானவர் அன்பு மேலிட்டு சிவபெருமானுடைய திருவடியிலே பணிந்து எழுந்து நின்று, "பித்தனாகிய என்னுடைய குற்றம் பொருத்தருளிய ஐயனே, என்னுடையதென்று இது வரை நான் நினைத்திருந்த பொருளும், எனக்கு இட மாகிய தேகமும், யானும், தமது திருவருளினால் இனி தம்முடையவைகளாகவே நினைக்கிறேன்" என்று கூறித் தாம் அணிந்திருந்த ஆடையையும் ஆபரணங் களையுங்களைந்து குருவின் திருமுன் வைத்தார்; அதன் பின் பாண்டியன் குதிரைகொள்ளும்படி கொடுத்த பொருளையும் அவர் முன்னே வைத்துப்பணிந்தெழுந் தார்.

சிவபெருமான் வாதவூரரை முகமலர்ச்சியோடு பார்த்துப் பின் அருகிலிருந்த தம் அடியாரில் ஒரு வரை அழைத்து, "இந்தப்பொருளை யெல்லாம் சிவால யத் திருப்பணிகளுக்கும் மகா தபசிகளுக்கும் வறிஞ ருக்கும் வாரிக்கொடு" என்றாக்ஞாபித்தார்.

அழகிய சிவிகையின்மேல் வெண்கொற்றக் குடை நிழலில் சேனைகள் சூழ ஓர் அரசனைப்போல் வந்த

வாதவூரர், திருநீறுபூசிய திருமேனியும் கோவண வுடையும் குஞ்சிவிரிந்த சிரசும் உடையவராயினர். அவர் விழியினின்றும் ஆனந்தபாஷ்பம் தானே பெருகி அற்புதமான ஞானப்பாடல்களையும் பாடத்தொடங்கினூர்.

அப்பாடல்களைக்கேட்ட சிவபெருமான் திருவுளங்களிகூர்ந்து அவரது திருவாய்மலரினின்றும் பிறந்த வாசகங்கள் மாணிக்கங்கள்போல் விலையேறப் பெற்றவைகளாகையால் அவருக்கு மாணிக்கவாசகர் என்னுந் திருப்பெயரைக் கொடுத்து அவரை அங்கேயிருக்கும்படி கட்டளையிட்டு மறைந்தருளினூர்.

பின்பு மாணிக்கவாசகர் குதிரைகள் வாங்குதற் பொருட்டுக் கொணர்ந்த பொன்னை யெல்லாம் அப்பதியிலே சிவாலயத்திருப்பணிகளுக்கும் மற்றும் பல வகைகளிலும் செலவுசெய்துவிட்டு நிரதிசயானந்த நிட்டானுபூதியிலே சுகித்திருக்கையில் இதுவரையிலே குதிரைகளை வாங்கிக்கொண்டு வாராமையைக் கண்டு, பாண்டியராஜன் கீழ்கண்டவாறு தென்னவன் பிரமராயன் என்னும் மந்திரிக்கு எழுதிக்கொண்ட நிருபம்:—

குதிரைகள் வாங்கும்பொருட்டு பெரும்பொருள் கொண்டு சென்ற நீர், குதிரைகள் வாங்காமல், பொருளை வேறு வழியிலே செலவிட்டுக் கோவணங் கொண்டதாக அறிகிறோம்.

இராஜ கரரியம் பார்ப்பவருடைய சாமர்த்தியம் இப்படிப்பட்டதென்றறிய மகிழ்ச்சி யடைந்தோம்; பூலோகத்தில் அரசனுயிருந்து ஆள்வதைவிட வீடுகள்தோறும் சென்று, பசிப்பிணி தீர இரந்துண்டு வாழ்வது பெருமையாகும் என்றும் கண்டுணர்ந்தோம்; உண்மையாகத் தம்மைப்பரிபாலித்து வந்த அரசருக்குப் பிழைசெய்து வேறொரு கருமம் செய்வது பயன் படுமென்று நீர் சாஸ்திரங்களிலே கண்ட துணிவையும் கண்டு மகிழ்ந்தோம். அரசரைச் சேர்ந்து வாழ்வது விஷத்தையுடைய ஸர்பத்துடன் வாழ்வதைப்போ லாகுமென்று அறிவீரானல், இந்த எமது திருமுகம் கண்டதும் மதுரைமா நகரத்துக்கு வரக்கடவீர்.

இங்ஙனம்:

அரிமர்த்தன பாண்டியன்.

இந் நிருபத்தை கண்டதும் வாதவூரார், "என்னை அடிமையாகக்கொண்ட சிவபெருமானுடைய துணை பெற்ற என்னிடம் யமனுடைய ஓலையை எடுத்துக் கொண்டு வரும் தூதரும் அணுகமாட்டார்களே! ஒரு கணப் பொழுதில் திரிபுரங்களையும் சிரித்து எரித்த சிவபெருமானுடைய அடியார்கள் ஒருவர்க்கு அஞ்சுவார்களோ?" என்று நினைத்து, சிவபெருமானை வணங்கி, "புண்ணியனே சரணம்! அரவாபரணனே சரணம்! மன்னன் பாண்டியன் எழுதியனுப்பியுள்ள ஓலையைக் கவனியும்" என்ருர்.

குருநாதனுக வந்த சிவபெருமான், "அப்பா, அறிவில்லாதவரைப்போல் நீ கலங்காதே. இந்த நாடெல்

லாம் மதிக்கும்படியான குதிரைகளைக் கொண்டு போய்ப் பாண்டியனுக்கு நாமே கொடுத்து வருவோம். நீ இப்பொழுதே பாண்டியனிடம சென்று 'வேந்தே, நீர் ஓலை யனுப்பியபடியால் நான் முன்னே வந்து விட்டேன். ஆவணி மாதம் மூலநாளில் குதிரைகள் இங்கே வரும்' என்று அறிவித்துக்கொள். பாண்டியன் உன்னை ஏதேனும் துன்பத்திற் குள்ளாக்குவா னென்று நீ சிறிதும் அஞ்சவேண்டாம்" என்று கூறி, அவருக்குத் திருநீறணிந்து, பொன்னாலும், இரத்தினங்களாலும் செய்த ஆபரணங்களும் அழகிய ஆடைகளும் வாகனமும் அளித்து, அரசன் கண்டு மகிழும்படி மந்திரிக் கேற்ற கோலஞ்செய்து, அப்பால் "நீ மன்னனிடம் இதைக் கொடு" என்று நல்ல மாணிக்கமொன்றையும் அவரிடம் கொடுத்து அனுப்பினார்.

உடனே பகவானிடம் விடை பெற்றுக்கொண்டு மதுரைக்குப் புறப்பட்டுபோய் அரிமர்த்தன பாண்டியனைக்கண்டு ஆசிர்வதித்து, சிவபெருமான் அளித்த மாணிக்கத்தையும் மன்னனிடம் கொடுத்து எதிரில் நிற்க, பாண்டியனும் முறைப்படி அவரை வரவேற்று வீற்றிருக்கும்படி உபசரித்து, அந்த மாணிக்கத்தை வியப்புடன் பார்த்து மகிழ்ந்து, "நீர் போன காரியமென்ன? நீர் செய்தகாரிய மென்ன?" என்று கேட்க, வாதவூரர் "வேந்தே, தம்முடைய பொருளைக்கொண்டு

போய் இலக்ஷணக் குறைபாடில்லாதவைகளாயும், நான்கு கதிகளும் அமைந்தவைகளாயுமுள்ள நல்ல ஜாதி குதிரைகளை வாங்கி இங்கே கொண்டுவருவதற் கேற்ற நல்ல நாள் ஆவணி மாதம் மூலநக்ஷத்திரம் கூடியதினமே வேதியர் கூறியபடியால், அந்நாளை எதிர்க்கொண்டு நான் திருப்பெருந்துறையில் இருக்க, தாங்கள் கோபமாக எழுதிய கடிதத்தைப் பார்த்து நான் முன்னே வந்தேன். ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும்" என்று வினவ, அரசன் அந்நாளள வும் குதிரைகளை எதிர்ப்பார்த்திருந்து வராமையைக் கண்டு கோபங்கொண்டு வாதவூரனைப் பொருத்தற் கரிய துயரஞ்செய்து, அவனிடமிருந்து நம்முடைய பொருள்களை யெல்லாம் வாங்கும்படி சேவகர்களை நோக்கி ஆக்ஞையிட்டான். அன்பர் அவ்வருத்தம் பொறுது கடவுளை நோக்கி "ஜகதீசா! பாண்டிய னுக்குக் குதிரைகள் கொடுப்பது நம்முடைய கடமை யாகும் என்று கூறியது பொய்யோ? உம்மை அடுத்த அடியேனைப் பாண்டியனிடம் மறுபடியும் விட்டீர்! அந்தோ! ஆற்று நீர், கடலிலே கலந்தபின் அது கடல் நீராகுமே யல்லாமல் ஆற்றுநீ ராகுமோ? மங்கைபங் காளரே, உம்மிடத்திலே அன்பில்லாதவனென்று என்னை வெறுத்துவிட்டால், அடியேனுக்கு இங்கே வேறு துணையுண்டோ? நான் இப்படி துயரப்படுவது

உம்முடைய கீர்த்திக்கு ஒரு பெருமையாகுமா? தேவ தேவனே, உமக்கு அடிமையான நான் இவ்விதம் வருந்துவதைப் பார்த்தால் இனி எவர் உமக்கு அடிமையாவர்? நானென்னும் அகந்தை நீங்கிய நல்ல மனமுடையவர்கள் சொல்லும் சொல்லேயல்லாமல் ஈனனாகிய என் சொல்லை ஏற்கப் போகிறதா உம்முடைய செவி?" என்று குறைகூறி முறையிட்டுக் கண் கலங்கினார்.

தனயனுக்கு வந்த துன்பத்தை நீக்குவது தந்தையின் கடனாகையினால் சிவபெருமான், காட்டிலுள்ள நரிகளெல்லாம் பரிகளாகவும், தேவர்கள் அந்தக் குதிரைகளைச் செலுத்துகின்ற இராவுத்தராகவும் மனத்திலே நினைத்தார். நினைத்தமாத்திரத்தில் காட்டிலுள்ள நரிகளெல்லாம் பரிகளாக மாறிப் பெருந்திரளாக வந்து திருப்பெருந்துறையில் கூடின. தேவர்களெல்லாம் அவைகளுக்குப் பாகராயினர். அப்பால் சிவபெருமான் ஆரியதேசத்துக் குதிரை வர்த்தகனைப் போல் உருமாறினார். வேதம் அவருக்குக் குதிரையாகவந்து நின்றது. பகவான் அதன்மேலேறிக் கொண்டு, சவுக்குகள் கொண்ட குதிரைச் சேவகர்கள் திரண்டு இரண்டு பக்கங்களிலும் நெருங்கிவர, கொம்பு, உடுக்கை, தாரை முதலிய வாத்தியங்கள் முழங்கக் குதிரைகளோடு மதுரை போய்ச் சேர்ந்தார்.

இவ்வாறு குதிரைகள் வந்து சேர்ந்ததை அரச னுக்கு அந்நகர்க் காவலாளர் போய்க் கூறினர். அர சன் அதைக்கேட்டதும் மகிழ்ந்து, "அந்தோ! வாத வூரரை வீணே துன்பப்படுத்தினோமே! நிதானியாத தனாலே வந்த தவறு இது. வாதவூரருடைய திறமை யும் மகிமையும் நன்குணர்ந்திருந்த நாம், அவருடைய பேச்சில் நம்பிக்கைக் கொள்ளாமல் அவரைத் தொந் தரவுக் குள்ளாக்கியது ஆலோசனை யில்லாத செய்கை யேயாம். இனி என்ன செய்வது?" என்றெண்ணி வருத்தமுற்றுச் சிறைச்சாலையிலிருக்கும் வாதவூர ரைத் தன் முன் வரவழைத்துக் குதிரை வந்த செய்தி கூறி, "என்னை மன்னிக்க வேண்டும். நிதானியாமல் உம்மிடம் கோபங்கொண்டேன்" என்றுரைத்து, அவர் க்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் நல்கி, "வாரும், குதிரைகளைப் போய்ப் பார்த்து வரலாம்" என்றான்.

வாதவூரர், அரசனை அன்போடு பார்த்து, "எல் லாம் ஈசன் செயல்! அவன் அன்றி ஓர் அணுவும் அசையாதன்றோ?" என்று விடைதந்து மனத்திற்குள் தம்மை யாட்கொண்ட தயாபரனுடைய திருவருளை எண்ணி மகிழ்ந்து, "இதோ வந்தேன்" என்று அரச னோடு குதிரைகளைப் பார்க்கப் புறப்பட்டார். அரசன் "நல்லது போவோம்" என ஆசனத்தை விட்டு எழு ந்து, வாதவூரருடன் அரண்மனைக்கு வெளியே வந்து,

தன் கட்டளையினால் முன்பே வந்து நிற்கும் அழகிய சிவிகையின்மீதேறினான். வாதவூரரும் தம்முடைய பல்லக்கி லேறிக்கொண்டார். பகைவர்களும் அஞ் சத்தக்க சேனைகள் பெரிய ஆரவாரத்தோடு புறப்பட் டன. 'தாம் தாம்' என வாத்தியங்கள் முழங்கின. அப்பால் அரசன், 'வையாளி வெளி' என்கிற ஓரிடத் திற்குப் போய், அங்கே அமைத்திருந்த முத்துப் பந்த லின் கீழுள்ள அழகிய பொன்னாசனத்திலே அமர்ந் தான். இயல், இசை, நாடக மென்னும் முத்தமிழ் உணர்ந்த புலவர்களும், வேதப் பிராமணர்களும் முறையே அரசனை வாழ்த்தினர். மங்கையர்கள் இரு மருங்கு மிருந்து வெண்சாமரைகள் வீசினர்.

அன்றையதினம் ஆவணிமூல நாளா யிருந்தபடி யால் அரசன் அதை நினைத்து மகிழ்ந்தான். குதிரை களை நடத்திவரும் இராவுத்தர்க ளெல்லோரும் உடை வாளும், வேலாயுதமும், வில்லும், அம்பும், கத்திகளு முடையவராய், இருபக்கமும் சூழ்ந்து வர, சிவபெரு மானாகிய குதிரைத் தலைவர், இடையில் பட்டாடை யுடுத்து, அதன்மேல் கச்சையை இறுக்கிக் கட்டிக் கொண்டு, அதில் உடைவாள் இலக, ஓர் அழகிய வெள்ளைக் குதிரையின்மேல் வந்தார்.

இவ்வாறாக இவர்கள் வருவதைப் பார்த்த மன் னன் உள மகிழ்ந்து "இந்தக் குதிரைத் தலைவர்

யாவராயிருப்பர்? பிர்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் தேவர்கள் மூவரில் யாவரேனும் ஒருவராய் இருக்கவேண்டுமென்பது திண்ணம். இல்லாவிட்டால் இவருக்கு இவ்வளவு அழகமைய நியாயமில்லையே" என எண்ணி அதிசயித்தான்.

வாதவூரர், "முன்செய்த தவமே குதிரையின் மேலே வருகின்றது" என்று தமக்குள்ளே மகிழ்ந்து அதிசயித்து, "ஈசன் நான் எண்ணியதை முடித்தார்!" எனக் கருதிப் பரமாச்சரிய மடைந்தவராய், சிவபெருமானைத் தியானித்தபடி நின்றார்.

பாண்டியன் வாதவூரரைப் பார்த்து, "தெருவீதியிலே இந்தக் குதிரைகளைச் சற்று நடத்திக் காட்டும்படி குதிரைத் தலைவருக்குச் சொல்லிவிட்டு வாரும்" என்றான். வாதவூரர், "என்ன இவர் இப்படிச் சொல்லுகிறார்?" என்று நினைத்தவராய் "நல்லது போய்ச் சொல்கிறேன்" என்று கூறி வேகமாய்ச் சென்று, முகமலர்ச்சியுடன் சிவபெருமானாகிய குதிரைத் தலைவனை வணங்கி, முகமன் கூறி, தெருவிலே குதிரைகளை நடத்திக் காட்டும்படி பாண்டியன் கூறியதையும் விநயமாய்த் தெரிவித்தார்.

சிவபெருமான் அதற்கிணங்கி, குதிரைகளை ஓட்டி நாகபந்தம், வட்டம், நெடுவீதி என்னும் குதிரையின் நடைபேதமெல்லாம் செவ்வையாக நடத்திக் காட்டி

ணர்; மனோவேகமாக ஓடும் குதிரைகளை நல்ல நடனம் செய்யும்படி நடத்தினர். பாண்டியன் அதுகண்டு கரை கடந்த களிப்படைந்து, "இப்புரவிகளெல்லாம் தெய்வ லோகப் புரவிகளோ? குற்றமொன்றும் சொல்லுவதற் கில்லாமல் இருக்கின்றனவே! இவைகளை நடத்தும் குதிரை வீரர்களும் மகா சாமர்த்தியசாலிகளாகக் காணப்படுகின்றார்களே! என்னே அதிசயமிது!" என்று கூறி வியந்தான்.

அப்பொழுது சிவபெருமான் குதிரைமேல் ஏறிய வண்ணம் அரசன் முன் போய் நின்றார். அரசன் அவரைக் கண்டு புகழ்ந்து, அவருக்கு விலை மதித்திடற் கரிய ஒரு வஸ்திரங் கொடுத்தான். சிவபெருமான் அந்த வஸ்திரத்தைத் தமது கைச் சவுக்கினால் ஏற்றுக் கொண்டு புன்னகை செய்தார். அது கண்ட அரசன், "நாம் கொடுத்த வஸ்திரத்தை விருப்பமில்லாதவனைப் போல் அலக்ஷியமாய்ச் சவுக்கினால் ஏற்றுக்கொண்டது மல்லாமல், சிரசிலே தரியாமல் அவமதித்த இவனுடைய துணிவுதானென்னே?" என்று கருதிச் சினங் கொண்டான். ஆகா! கடவுளின் மகிமையை என் னென்று கூறுவது! காணுதற்கரிய திருமேனியை யுடைய அவர், கண்டவர் கண்களும் மனமும் மகிழ வெளிப்பட்டு வந்திருப்பதைக் கண்டும், அரசன் அவரைக் கண்டுணரச் சக்தியில்லாதவனானான்! என்னென்

பது இதனை? அந்தப் பரம்பொருளின் கருணையினால் ஞானமடைந்தாலன்றி யாரால் அவரை அறிய முடியும்?

இப்பொழுது அரசனுக்கு அருகிலிருந்த வாதவூரர், அவனுடைய திருமுகத் தோற்றங்கண்டு கோபங் கொண்டிருக்கிறானென்று உணர்ந்து, "வேந்தே, இவர்கள் தமக்கு வெகுமதியாகக் கொடுக்கப்படும் வஸ்திரங்களைத் தம் கைச்சவுக்கினால் ஏற்பது இவர்களுடைய தேச வழக்கம்" எனக்கூறி, அவன் கோபத்தைத் தணித்தார்.

பின்னர், குதிரைத் தலைவராக வந்த சிவபெருமான் அரசனிடம் விடைகொண்டு தம்முடன் குதிரை வீரர்களாக வந்த தேவர்களுடன் தாம் வந்த வழியே சென்று, ஊரைக் கடந்து, கொஞ்சதூரம் போனபின் மறைந்தார். தேவர்களும் தமதுலகம் போய்ச் சேர்ந்தனர்.

இப்படி யிருக்கையில் அன்றிரவிலே கடவுள் சித்தத்தின்படி அப்பரித்திரள்களெல்லாம் நரித்திரள்களாய் முன்னுள்ள குதிரைகளும் வெகுண்டு நடுங்கவும், குதிரைப் பாகர்கள் திடுக்கிடவும் அட்டகாசம் செய்து அவைகளுள் சில குதிரைகளை ஒருங்குபடக் கொன்றுவிட்டு, இராஜ வீதிகளிலும் ஆவண வீதிகளி

னும் ஓடி ஊளையிட்டு யாவரையும் அச்சுறுத்தித் தம் பழய இடங்களைச் சேர்ந்தன.

விடிந்தபொழுது அரசன் இச்செய்தியைக் கேட்டுப் பெருங்கோபத்தில் மூழ்கினவனாய் மந்திரி தன்னை மாயவித்தையினால் வஞ்சித்தானென்று தண்டற்காரரை விடுவித்து "நரிகளை யெல்லாம் நல்ல குதிரைகளாக்கவல்ல சாமர்த்தியமுடைய நமது மந்திரியைப் பிடித்து வாருங்கள் என் முன்" என கட்டளையிட்டருள, அவ்வாக்ஞைப்படியே வாதவூரரை அரசன் முன் கொண்டுவர, அரசன் அவரைக்கண்டதும் மூண்டெழுகின்ற தீயைப்போல் கோபங்கொண்டு, வாதவூரரைப் பார்த்து "ஓ, எங்கே கற்றாய் இந்த வித்தைகளையெல்லாம்? இந்த மோச நினைப்பேன் உனக்கு?" என்றதட்டி அப்பால், "தன் கடமையிலிருந்து தவறியவர்களுக்குத் தண்டனை விதிக்க வேண்டியது அரசர்களுக்கு அடுத்த நீதியானாலும், வேதவிற்பந்நராகிய அந்தணர்களுக்கும், தவமதிச் செல்வர்களுக்கும், மாதர்களுக்கும், விருத்தர்களுக்கும், பாலர்களுக்கும், துன்பம் விளைவிப்பது நம் போன்றவர்களுக்கு இயற்கையல்ல. ஆகையினால், இவனை நம்முடைய கண்முன்னே வைக்காமல் விரைவிலே கொண்டுபோய், ஒரு வெளியில் வட்டக்கோடு ஒன்று கிழித்து அதனுள் நல்ல கடுமையான வெயில்

வேலையில் நிறுத்திப் பொருளை வாங்குங்கள்" என்று மறுபடியும் தண்டற்காரர்களுக்கு ஆக்ஞையிட்டான்.

அவ்வாறே அவர்கள் செய்ய, இன்பத்திலும், துன்பத்திலும் இறைவனடி மறவாத வாதவூரர், சிவ பெருமானை நினைந்துருகித்

"தொல்லையோ ரிருவர் தேடுஞ் சோதியே யாது செய்வேன்
தில்லையோர் பரவ நின்ற தெய்வமே யாது செயவேன்
இல்லையோ கருணை நின்பா லின்றெனை யடிமை கொண்டாய்
அல்லையோ தமியே னின்ன லறிதியோ வறிந்தி லாயோ"

எனத் திருவாதவூரர் சாக்ஷாத் கடவுளை மனமிரங்கி வருந்தவே, சிவபெருமான் அவருடைய துன்பத்தை நீக்கத் திருவுள்ளங்கொண்டு, கங்கையை அழைத்து, "விரைவிலே நமது அன்பன் படும் துயரத்தை நீக்கக் கடவாய்" என்றுக்ஞை யிட்டார். கங்காதேவி உடனே பெருக்கெடுத்து வைகை நதியிலே சேர்ந்து, சமுத்திரம்போல் பெருகி ஜலப்பிரவாகமாய் எங்கும் புரண்டு ஊரை அழிக்க வருவதைக்கண்ட மதுரை ஜனங்களெல்லோரும் பயந்து, "என்ன செய்வது? எங்கே ஓடுவது? ஈசா! உமையவள் நேசா! சொக்கநாதா!" என்றலறினார்கள். இதையறிந்த பாண்டியன் உடனே சேனையுடன் வைகை நதியின் கரையின்மேல் வந்து நின்று அவ்வெள்ளத்தை நோக்கி, "பூலோகத்தாருக்கு உயிராகிய தாயே! கோபந்தணிந்து எம்மை ஆதரித்தல்

வேண்டும்" என்று வேண்டிக்கொண்டு, அந்த நதியில் முத்தையும் துகிலையும் அள்ளி யெறிந்தான்.

அந்நதி அவனுடைய பிரார்த்தனைக்கு இரங்காததுபோல் மலைபோன்ற அலைகள் கிளம்ப மேன்மேலும் பெருகியது. அது கண்ட வேந்தன் "என்னே இது" என வியந்து திகைக்கப் பேரறிஞராகிய அமைச்சர்கள் அரசனைப் பார்த்து, "வேந்தே, இது மகா சிவபக்த சிரோமணியாகிய வாதவூரரை வருத்தியதால் நேர்ந்த விபத்து என்று அறிகிறோம். அடியார்க்குச் செய்யும் நன்மையையும் தீமையையும் சிவபெருமான் தமக்கே செய்ததாகக் கொள்வர் என்பது பெரியோர்களுடைய துணிபு. ஆகையினால், தாம் வாதவூரரை இப்பொழுதே மனமகிழும்படி செய்வித்தால், இந்த வெள்ளப் பெருக்கு அடங்கிவிடும்" என்றனர்.

அரசன் இதைக் கேட்டதும் மகிழ்ந்து, அவர்களை அருளோடுபார்த்து, "நான் எதை எண்ணினேனோ அதையே நீங்களும் புகன்றீர்கள்" என்று கூறி, உடனே வாதவூரரைத் தன்முன் மரியாதையுடன் வரவேற்று, "ஐயா, சிவனடியாரிடம் நீர் கொடுத்த பொருள் நம்முடையதேயானால் அந்தத் தருமத்தின் புண்ணியம் பிறருக்குப் போகுமோ? இந்த நன்மை செய்த உம்மை நான் வருத்தியது என்னுடைய அறியாமையென்பதை இப்போது நன்குணர்ந்

தேன்; என்னை மன்னித்து, இந்த நதி, இனியும் மேலே பெருகி வராமல் தடுத்து, நீரே ஊரைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டினான்.

இச்சமயம் பாண்டியன் பகர்ந்த அன்புரையைக் கேட்ட வாதவூரார், அவனிடம் விருப்பமும், முன்பு இவர் மீது சினங்கொண்டு தண்டித்தபோது அவனிடம் வெறுப்புங் கொள்ளவில்லை. எல்லாம் இறைவன் செயலென்றெண்ணி யிருந்தாராதலால், இவ்வாறு அரசன் பிரார்த்திப்பதை ஈசன் திருவுளமென்று கருதி, அந்தப் பரம்பொருளைத் தியானித்து வேந்தனை நோக்கி, "நல்லது, கட்டளைப்படி நடக்கச் சித்தம்" என்று கூறினார். அப்பால் அவர் தூதர்களை வரவழைத்து, "தூதர்களே! மண் வெட்டிக் கொட்டி இந்த வைகையின் கரையை அடைக்க இந்த ஊரிலுள்ளார் அனைவரும் இப்பொழுதே இங்குவந்து சேரும்படி பறையறைவித்துத் தெரிவியுங்கள்" என்று கட்டளையிட் டனுப்பினார்.

தூதர்கள் உடனே சென்று வாதவூராரின் கட்டளைப்படி பறையறைவித்து, உடனே மதுரையிலுள்ள மாந்தரனைவரும் மண்வெட்டியும் கூடையும் எடுத்துக் கொண்டு வைகை நதிக்கரைக்கு வந்து சேர, அவர்களனைவரையும் அன்போடு பார்த்து, "உங்களொவ்வொருவருக்கும் இந்த நதியின் கரையில் ஒவ்வொரு பாகம் அளந்து கொடுக்கப்படும். அவரவருடைய

பாகத்தை அவரவர் மண்ணை வெட்டிக் கொட்டி அடைத்து ஊருக்குச் சேதம் வராமல் காப்பாற்ற வேண்டும்" என்றார்.

இவ்வாறாக யாவரும் அணைக்கட்டி வருகையில், ஒருபங்கு மாத்திரம் அடைப்பவரில்லாமல் சும்மா விடப்பட்டிருக்க, அரசனுடைய ஏவலாளர், "இது யாருடைய பங்கு?" என விசாரித்து, இவ்வூரில் பிட்டு சுட்டு விற்கும் ஒரு கிழவியின் பங்கெனத் தெரிந்து, அவர்கள் அக்கிழவியினிடம் போய், "நீ யேன் உன் பங்கை அடைக்கவில்லை?" என்று அதட்டினர்.

கிழவி, "நான் தள்ளாத கிழவியாகையினால், யாரையேனும் ஒரு கூலியாளை விட்டு என்பங்கை அடைத்து விடலாமென்று பார்க்கிறேன். ஆனால் கூலியாள் கிடைக்கவில்லை. கூலிக்காக என்னால் ஒரு காசும் கொடுக்க இயலாது. நான் சுடும் பிட்டிலே கொஞ்சம் தருவேன். பிட்டினைக் கூலிகொண்டு அடைப்பவர் ஒருவரையும் காணேமே? என்ன செய்வேன்" என்று அழுதாள். தூதர்கள் "நீ என்ன செய்வாயோ எங்களுக்குத் தெரியாது. எப்படியாவது உன் பங்கை நீ அடைத்தே தீரவேண்டும்" என்றார்கள்.

கிழவி பிட்டு சுட்டு விற்கும் பரம ஏழையேயானாலும் சிவபெருமானிடம் அன்புடையவள்; சிறந்த தவமதியுடைய உத்தமி. ஆகையினால் அவள் சிவபெரு

மாளை எண்ணி, "அரவாபரணனே! மங்கை பங்காளனே! அடியவர்கள் நேயனே! அநாத ரக்ஷகனே! உன்னுடைய கிருபா கடாக்ஷத்தினால் பிட்டு விற்று ஜீவனம் செய்யும் எனக்கு இப்படிப்பட்ட துக்கமுண்டாகலாமா? என்னால் பொறுக்க முடியுமோ இதை? உன்னையன்றி வேறு துணையுண்டோ எனக்கு? இச்சமயத்தில் என்னைக் கைவிடலாமோ நீ?"

"யாருடனு னினிப்புகல்வே னெனையுடையாய் வைகையினன்
நீருடையா தடைக்கும்வகை நீசிறிதின் றருளாயேற்
சீருடையா யுனக்கடிமை செய்யுமவர்க் கெளியையெனும்
பேருடையா யெனப்பலரும் பேசுமொழி பழுதாமே"

"தாயுமிலை தந்தையிலை தமருமிலை தமியேனைப்
பேயினுட னின்றாலும் பிரித்தறிய வொண்ணாது
தீயதென திலம்பாடென் சிந்தையில்வெந் துயர்தீர
நீயருளா தொழியினுயிர் நீப்பேன்மற் றென்செய்கேன்."

இவ்வாறு கிழவி மனமுருகி துதிக்கவே, சிவபெருமான் அவள் மீது இரக்கங்கொண்டு இடையில் கிழிந்துபோன கந்தலும் தலையில் கூடையும் தோளில் மண்வெட்டியுமுடைய ஒரு கூலியாளாக அந்தக் கிழவியின்முன் போய் நின்று, "என்னை யாரேனும் கூலியாளாகக் கொள்வாருண்டோ?" என்று கேட்

டார். கிழவி அதைக்கேட்டதும் மகிழ்ந்து, அப்பா எனக்கோர் ஆள் வேண்டும், வா" என்று அழைத் தாள்.

கூலியாள்: "அம்மே, முன்னே கூலி கொடுப் பாயேயானால் வருவேன் நான்" என்றான்.

கிழவி: "இப்பொழுது தேவாமிர்தத்துக்கு ஒப் பான பிட்டு தருகிறேன். மாலையில் பிட்டு விற்றபணம் கையிலிருக்கும், அப்போது உன் கூலியை நான் தரு கிறேன்" என்றாள்.

கூலியாள்: "அம்மா, மெத்தவும் பசியுடையவனா யிருக்கிறேன். இனிய பிட்டு தருவாயாயின் தின்று பசியாறி உன் பங்கை அடைப்பேன்" என்றான்.

கிழவி உடனே "இதோ தருகிறேன்" என்று கூறிப் பிட்டைக் கை நிறைய எடுத்துக் கொடுத்தாள். கூலியாள் அதனை வாங்கி யுண்டு, பின் "இன்னுங் கொஞ்சம் பிட்டு கொடு" என்று துணியை ஏந்தி அதில் நிறைய வாங்கித் தின்று, கரையை அடைக்கப் போய், நான் பிட்டுவாணி யம்மையின் கூலியாளாக வந்தவன். அவள் அடைக்கவேண்டிய பங்கைக் காட் டுங்கள்" என்று சேவகர்களைக் கேட்டான். சேவகன் கிழவி அடைக்க வேண்டிய இடத்தைக் காட்டினான். சொக்கநாயகராகிய கூலியாள், "இதோ அடைக் கிறேன்" என்று கூறி, கொஞ்சம் மண்ணெடுத்துக்

கொட்டிக் கரையை அடைத்துவிட்டு, ஒரு பக்கம் போய்க் கூடையைத் தலைக்குயரமாக வைத்துக் கொண்டு, வேலை செய்து களைத்தவரைப்போல் படுத்துக்கொண்டார்.

இச்சமயத்தில் வாதவூரர் கையிலே ஒரு பிரம்பு வைத்துக்கொண்டு ஏவலாளரைப் பார்த்து, கரை நெடுகலும் போய் ஒவ்வொருவரும் அவரவர் பங்கை நன்றாய் அடைத்திருக்கிறார்களா எனப் பார்த்து வரச் சொல்ல, பிட்டு வாணிச்சி பங்குமாத்திரம் மற்ற இடங்களுக்குச் சற்றுத் தாழ்ந்திருப்பதைக் கண்டு தெரிவிக்க, தலைமைத் தூதன் தன்னோடு வந்த ஏவலாளர் சிலரைப் பார்த்து, "அந்தக் கூலியாளை என்முன் கொண்டுவாருங்கள்" என்று சொல்ல, அவர்கள் அவனை நெருங்கி, "அடே வா எஜமானன் முன், நீ தானே பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாக வந்தவன்? ஏன் உன் வேலையை நீ சரியாய்ச் செய்யவில்லை? வா இங்கே" என்றழைத்துவந்து, தூதர் தலைவன் முன்விட "இவனை நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. அமைச்சர் முன்னே கொண்டுபோய் இவனுடைய நடத்தையைக் கூறுவோம். அவர் பார்த்து இவனுக்குத் தண்டனை விதிக்கட்டும்" எனக் கூறி, எல்லாம் வல்ல இறைவனை வாதவூரர்முன் கொண்டுபோனான்.

இச்சமயத்தில் அரிமர்த்தன பாண்டியனும் வாத

ஊரரிடம் வந்து கரை சரியாய் அடைபட்டதா என விசாரித்துக் கொண்டிருந்தான். கூலியாளாக வந்த சிவபெருமானை அழைத்துச் சென்ற தூதர் தலைவன் அவர்களிருவரையும் வணங்கி, பரம பித்தன் போல் நின்ற பகவானை அவர்கள் முன்னே நெட்டித் தள்ளி நிற்கவைத்து, "இவன் பிட்டு வாணிச்சிக்குக் கூலி யாளாக வந்து கரையை யடைக்க உடன்பட்டான். அப்படி வந்த இவன் சரியாய் வேலை செய்யவில்லை. கூலியை மாத்திரம் அவளிடமிருந்து முன்பே வாங் கிக்கொண்டானும். அன்றியும் இவன் வேலை செய்யும் போது, செல்வப் புத்திரர்களைப்போல் களிப்பதும், ஆடுவதும், பாடுவதுமாயிருந்து காலம் போக்கினும். இவனைப் பார்த்தால், நன்றாய் வாழ்ந்துவந்து இளைத்த வருடைய குடும்பத்தைச் சார்ந்தவனைப்போல் காணப் பட்டமையால் தண்டிக்க மனமில்லாமல் சமூகத்துக் குக் கொண்டுவந்தோம்" என்றான்.

பாண்டியன், "அப்படியா! இவன் யாராயிருந் தால் நமக்கென்ன? செய்வேனென ஒப்புக்கொண்ட வேலையைச் செய்யாமல் வீண்காலம் போக்கினை னல் லவா?" எனச் சினங்கொண்டு வாதவூரரிடமிருந்த பிரம்பை வாங்கி, பல்லாயிரங்கோடி அண்டங்களையும் அவற்றிலுள்ள அளவில்லாத உயிர்களையும் தமது திருமேனியாகக்கொண்ட சிவபெருமானுடைய முது

கிலே அடித்தான். அடித்தமாத்திரத்தில் அவர் ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல் மறைந்துவிட்டார். ஆனால் பாண்டியன் அடித்த அந்த அடி, ஒவ்வொருவர்மேலும் படவே எல்லோரும் பற்பலவாறாகப் பேசத் தொடங்கினார்கள்.

இந்த அடி வாதவூரர்மேல் பட்டதும் அவர் அயர்வடைந்து, "நான் உய்யும்படி என்னை அடிமைகொண்டருள சொக்கநாயகரே இங்கு ஒருவருக்குக் கூலியாளாக வந்தார்" என அறிந்து வருத்தமுற்று உடனே, ஜகதீசன் மண்சுமந்து கொட்டிய இடத்திற்குப்போய்ப் பார்த்து "அடியேன் கொடிய நரகத்திலே விழாமற் காத்தருள எழுந்தருளிய ஐயனே, நீ எங்கே இருக்கின்றாய்? நீ எங்கே இருக்கின்றாய்?" என்று கூவிக்கொண்டு, சிரசின் மேலே கரங்கூப்பித் தொழுத வண்ணம் கண்களிலிருந்து நீர் பெருக மனமுருகியவராய் அந்த இடத்திலே விழுந்து புரண்டு கதறி எழுந்து நின்று, "ஆகா என்ன சொல்வேன் நான்! இந்த ஆற்றங்கரையை வெள்ளியம்பலத்துக்குச் சமானமாகவும் இந்த ஆற்றில் எழும் அலையின் ஓசையைத் தேவ துந்துபியாகவும் இங்கிருந்தவர்களை பதஞ்சலி வியாக்ரபாதர்களாகவும் கொண்டு திருவிளையாடல் செய்தார் போலிருக்கிறது சிவபெருமான்! யார் அறிவார் அவர் மகிமையை?

"மீனேறுங் கொடித்தென்னன் விழிக்கேற விரைதூரகந்
தானேறு வதுகண்டு தருங்கலைபொற் சென்டேறத்
தேனேறு மலர்க்கொன்றைத திருமுடிமேன் மண்ணேற
யானேறுஞ் சிவபதமு மெனக்கேற வின்றுதே"

பின்னும் மனமிரங்கி, "என் ஐயனே, மூவர்க்கும் முதல்வனே, பிட்டு வாணிச்சி யம்மைக்குக் கூலியாளாய் அமைந்து, வைகை நதியை அடைத்து, அரசன் கைப்பிரம்பினால் அடிபட்டு, என்னை உமக்கு அடிமையாக்கிக் கொண்ட உன் கருணையை நான் என்னென்று கூறுவேன்? யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம்? என் அப்பனே"—

"தாருருஞ் சடைமுடியாய் தவம்பெரிது முயன்றவர்கள்
நீருரும் புகழ்வைகை நெடுங்கரைமே னின்றாரோ
சீருருங் கனகமுடித் தென்னவனோ மதுரையெனும்
பேரூரி லிருப்பவரோ பிட்டமுதிட் டருள்வாளோ."

வாதவூரர் இவ்வாறாக பன்னிப்பன்னிப் பலவாறு இறைவனைப் புகழ்ந்து மனமுருகியவராய் நிற்கையில் ஆற்றின் வெள்ளமும் வடிந்தது.

இப்பொழுது பாண்டியன், இவையாவும் சிவபெருமானுடைய செயலெனத் தெறிந்தபடியால், திருவாதவூரரிடம் வந்து அவரை வணங்கி, "அந்தணர் குலத்

திலே அவதரித்து அடியேனிடம் அமைச்சராயமர்ந்து, சகலலோக சரண்யனாகிய சிவபெருமானை வெற்றி பொருந்திய வெள்ளைக் குதிரையின்மேல் என்னை தரிசிக்கச்செய்து, என்னுடைய பாபத்தை யொழித்துப் புனிதனாக்கிய வாதவூரரே! உமது பெருமையை யறியாதவனாகிய நான், தமக்குப் பெரும்பிழைகள் செய்தேன்; அவற்றையெல்லாம் பொறுத் தருளல் வேண்டும். அந்தோ, என்னுடைய பிறவிப்பிணி தீரத் தம் திருமேனி காட்டியதை யுணராமல் குதிரையேறி வந்த என் தந்தைக்கு அழுக்காடை கொடுத்தேனே! என் ஐயனே! என்ன பிழை செய்தேன் நான்? ஆகா! சிவபெருமானைக் குதிரைக்காரராகக் காட்டிய உம்மை, மெய்ப்பொருளென் றறியாமல், தீவினைக்குக் காரணமாகிய பொருளைக் கொடுக்கும்படி எவ்வளவோ கொடுமைகள் செய்தேனல்லவா? அவைகளை எண்ணினால் என் நெஞ்சம் நடுங்குகிறது. என்னுடைய எல்லாப் பிழைகளையும் பொறுத்து, என்னை உமது பணிவிடைக் காளாக்கிக்கொண்டு இவ்வுலகத்தை நீரே யாளவேண்டும். அரவாபரணராகிய சொக்கநாதர், பரியின்மேலேறிவந்து காட்சி தந்ததும் ஜடா மகுடத்திலே மண் சுமந்ததும் எனக்கு என்றும் அழியாத கீர்த்தியைத் தருவனவாகும். ஆகையினால் அவைகளே எனக்குப் போதுமானவை" என்றான்.

வாதவூரர், பாண்டிய ராஜனைக் கருணையோடு பார்த்து, "என்னை நீர் இனித் திருப்பெருந்துறைக்கு அனுப்புதல் வேண்டும் என, பாண்டியன் வேறு பேச வழியில்லாதவனாய், "ஐயா, தமக்கு விருப்பமான தெதுவோ அதையே செய்யலாம்" என்று கூறி மீண்டும் பணிந்து, எழுந்து, வலம் வந்து, விடைகொண்டு அவரைப் பிரிய மனமில்லாமல் பிரிந்து அரண்மனைக்குச் சென்றான்.

அதன்பின் வாதவூரர், சொக்கநாதருடைய ஆலயஞ் சென்று, சுவாமியையும் அம்மையாரையும் பணிந்து விடைகொண்டு புறப்பட்டு மதுரையம்பதியைக் கடந்து, திருப்பெருந்துரையை அடைந்து, அங்கே முன்பு தாம் உபதேசம் பெற்ற சோலைக்குள்ளே போய்த் தம் குருநாதனைக் கண்டு, அவர் திருவடியிலே விழுந்து பணிந்தார்; எழுந்த பிறகு சிரசிலே கரங் கூப்பி நிற்க, வாதவூரருடைய சிரசிலே, ஆசிரியராக வந்த சிவபெருமான் தமது திருக்கரத்தை வைத்து இனிய சொல் சொல்லி விபூதி யளித்துக் கிருபாகடாக்ஷம் செய்தருளி, "இந்தக் குருந்தமரத்தினடியில் ஒரு தெய்வபீடத்தையும் அதன்மேல் நம்முடைய திருவடியையும் அமைத்துத் தினந்தோறும் அவைகளைப் பூசித்துக்கொண்டிருங்கள். அப்பால் ஒருநாள் இந்தப் பொய்கையில் அக்னி மூண்டு எரியும். அந்தத் தழலில்

நீங்கள் எல்லோரும் வீழ்வீர்களானால் எம்மிடம்வந்து சேர்வீர்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி, குருநாதர் எழுந்து கயிலாசத்திற்குப் புறப்பட்டார்.

அடியார்க ளனைவரும் நின்று விட்டார்கள். ஆனால் வாதவூரர் மாத்திரம் தாயைத் தொடர்ந்துசெல்லும் கன்றைப்போல் அவர்பின் செல்லலாயினார். அது கண்ட சிவபெருமான் சிறிது தூரம் போனதும் அங்கிருந்த ஒரு கொன்றை மரத்தடியில் அமர்ந்தார். மாணிக்கவாசகர் விரைந்துபோய் அவருடைய திருவடியிலே பணிந்து கண்களிலிருந்து நீர்பெருக நின்றார். சிவபெருமான் அவரைப் பார்த்து, "இங்குவரும் நம்மடியவருடைய தீவினையை நீக்கியாளும் பொருட்டு இந்தத் திவ்விய க்ஷேத்திரத்தின் குருந்தமரத்தடியிலே நாம் என்றும் எழுந்தருளியிருப்போம். நீ எமதடியாருடன் இங்கேயே இரு. நாம் முன் கூறியபடி அவர்கள் தடாகத்திலே எழும் தீயில் விழும்போது நீ மட்டும் விழாமல் இங்கிருந்து புறப்பட்டு உத்தரகோசமங்கை என்னும் ஊருக்குப் போ; அங்கே அஷ்டமா சித்திகளையும் அடைவாய். பின்னர் நீ எந்த ஸ்தலத்துக்குச் சென்று எம்மை வணங்கினாலும் அங்கெல்லாம் எமது திருவுருவங் கண்டு ஆநந்த மடைவாய். ஆதலால் நீ திருக்கழுக்குன்றம் என்னும் நமது ஸ்தலத்துக்குப் போய் அங்கே எம்மை வணங்கித்

துதித்து மீண்டும் சிதம்பரம் என்னும் திவ்விய ஸ்தலத்துக்குப் போ. அங்கே புத்தர்கள் உன்னோடு வாதிடுவார்கள். வாதத்தில் நீ அவர்களை வெல்வாய். அதன் பின் நீ எமது சாயுஜ்ய பதவியை அடைவாய்" என தெரிவித்து மறைந்தார்.

சிவபெருமான் மறையவே மாணிக்கவாசகர் விசனமடைந்து தொழுது சிரமேற் கரங்கூப்பி நின்று அவரைத் தியானித்தபடியே திரும்பி அடியார்களிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார். அப்பால் அவர்கள் யாவரும் குருந்தமர நிழலில் தெய்வ பீடமமைத்து, அதில் ஈசன் திருவடியை வகுத்துப் பூசித்து வருவாராயினர்.

இவ்வாறிருக்கையில் மாணிக்கவாசகர், அன்பில்லாதவர்களாலும் தம்மை துதிப்பவர்களுக்குச் சிவபெருமான் இரங்கியருள்வார் என்று எண்ணி "நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க" என்று தொடங்கித் திருவாசகம் பாடியருளினார். அன்றியும், திருவார்த்தையும் எண்ணப் பதிகமும், இருபத்தெட்டு வெண்பாவும், திருப்பள்ளி யெழுச்சி, திருவேசறவு, ஆநந்த மாலை, உயிருண்ணிப்பத்து, பிரார்த்தனைப் பத்து, திருப்பாண்டி விருத்தம் முதலியனவும் கூறியருளினார்.

இவ்வாறு மாணிக்கவாசகர் திருவாசகம் பாடி

யருளுவதற்கு முன், கைலையிலிருந்து தம்முடன் வந்த அடியவர்களுக்குச் சிவபெருமான் தெரிவித்துச்சென்ற படி, பொய்கையில் நெருப்பு எழுந்தது. அந்த நெருப்பில் அங்கிருந்த சிவனடியாரனைவரும் பஞ்சாக்ஷர மந்திரம் ஜபித்துக்கொண்டே விழுந்தனர். மாணிக்க வாசகர் மாத்திரம், தமக்கு இறைவனிட்ட கட்டளைப் படி அந்த அழலில் விழாமலிருந்தார். பொய்கையிலே விழுந்த அடியார்களுக்குச் சிவபெருமான் ஆகாயத்தில் விருஷப வாகனத்தின்மீது காக்ஷி தந்தருளினார். விழுந்த அடியாரனைவரும் அப்பொழுதே முன்போல் சிவகணங்களாய் மாறிச் சிவபெருமானை வணங்கி நின்றனர். சிவபெருமான் அவர்களைப் பார்த்து, "உத்தமனாகிய வாதவூரனுக்காகவே நாம் உங்களனைவரையும் இவ்வளவுநாள் அங்கிருக்கும்படி செய்தோம்; பொய்யாய்த் தோன்றிய உங்கள் மாயாதேகத்தை அக்னியிலே வேகும்படி செய்து மறுபடியும் இந்த தேகத்தைக் கொடுத்தோம்" என்று கூறிக் கணநாதருடன் மறைந்தார்.

அப்பால், மாணிக்கவாசகர் ஒரு கொன்றைமர நிழலிலே இருந்து சிவயோகம் செய்தார். அந்த யோகத்தில், அடியார்கள் அக்னியிலே புகுந்த விதமும், கடவுள் விருஷபவாகனத்தின்மீது வந்து காக்ஷி தந்த விதமும், இனித் தாம் கனகசபையிலே போய்

அடையப் போவதுமாகிய இவைகளை யெல்லாம் அவர் ஏககாலத்திலே கண்டார். கண்டபின், எழுந்து கை குவித்துக்கொண்டு கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருக நின்று, "என் தந்தையே, இங்கே வந்து எங்கே மறைந்தாய்?" என மயங்கிப் பொய்கைக் கரைக் கேகி அங்கே நின்று, "என் ஐயன் விருஷப வாகனத்தின் மீது காக்ஷி தந்த இடம் இது வல்லவா?" என்று கூறி, அந்த இடத்திலே விழுந்து புரண்டு அழுது, ஐயோ என நொந்து, "கிருபாநிதியே! எங்கே ஒளித்துக் கொண்டீர்?" என்றலறிப் பின் தெளிந்து அங்கிருந்து குருந்த நிழலுக்குப் போய் அங்கே இறைவன் திருவடி நின்று, மெய்தானரும்பி என்று தொடங்கித் திருச்சதகம் பாடினார்.

அப்பால், உத்தரகோசமங்கை யென்னும் ஸ்தலத்துக்குப் போகும்படி முன் இறைவன் கூறியருளியது நினைவிற்கு வந்தமையினால், அவர் உடனே அங்கிருந்து புறப்பட்டு உத்தரகோசமங்கைக்குப் போய் ஆலய தரிசனம் செய்தார். தம்மை வந்து அடிமை கொண்ட சிவபெருமானுடைய திருவடிவம் அங்கே காணப் படாமையினால், மயங்கி வெய்துயிர்த்து வீழ்ந்து, **விடுதி கோல் என்னையென நீத்தல் விண்ணப்பம்**—என்னும் பாடல் பாடினார்; பாடி முடித்ததும் ஈசன்

தம்மை அடிமை கொண்டபோது காட்டிய திருவுரு வத்தை அங்கே கண்டு மகிழ்ந்தார்.

அதன் பின் மாணிக்கவாசகர் அந்த ஸ்தலத் திலே சிலநாட்க ளிருந்துவிட்டுத் திருவிடைமருதூர் என்னும் திவ்விய ஸ்தலத்துக் கெழுந்தருளினர். அங்கே சுவாமி தரிசனம் செய்து திருப்புலம்பல் பாடித் துதித்து, அப்பால் இறைவன் இயம்பிய பதிகளெல் லாம் சென்று சுவாமியை வணங்கிப் பின் சீர்காழிக் குப்போய் அங்கே இறைவன் சந்நிதியில் வணங்கி நின்று பிடித்த பத்து என்னும் பதிகம் பாடித் துதித் தார். அப்பால் விருத்தாஜலத்துக்குப்போய் இறைவனை வணங்கிப் பின் திருப்பெருந்துறை போய் அதன்பின் திருவெண்ணெய்நல்லூர் சென்றார்; அங்கே ஈசனை வணங்கிப் பின் திருவண்ணுமலையை அடைந்தார்; அங்கே தம்மை அடிமைகொண்ட குருநாதனுடைய திருவுருவங் கண்டு மகிழ்ந்தார்.

அந்த மாதம் மார்கழி மாதமாயிருந்ததால் அங் கிருந்த மாதரெல்லாம் திருவாதிரைக்கு முன் பத்துத் தினங்களிலும் வீடுகள்தோறும் போய்த் தத்தம் தோழி மார்களை அழைத்துக் கொண்டு விடியற்காலத்தில் குளத்திலே நீராடித் தெய்வம் தொழுதுவந்தனர். அவர் களுடைய செயல்கண்ட மாணிக்கவாசகர், மங்கை யர்கள் சொன்னதாகத் திருவெம்பாவை பாடினர்;

அப்பால் அம்மங்கையர் அம்மானை பாடி ஆடியதைக் கண்டு, தாமும் அவர்கள் பாடியதாகத் திருவம்மானை பாடியருளினார்.

அதற்கப்பால் மாணிக்கவாசகர் அங்கிருந்து புறப்பட்டுக் காஞ்சிபுரம்போய்ச் சுவாமி தரிசனம் செய்துகொண்டு திருக்கழுக்குன்றம் போனார். அங்கே, ஒவ்வொரு பாடலிலும் கடையடி காட்டினாய் கழுக் குன்றிலே என்று வரும்படி பதிகம் பாடித் துதித்துச் சிலநாள் தங்கியிருந்து அப்பால் சிதம்பரத்துக்குப் புறப்பட்டுப் போனார். அங்கே இறைவன் அவர்க்குக் குருநாதராய்க் காட்சிதந்தார். அதைக்கண்டு, அவர் "மன்னா உயிரன்னாய் மணிமன்று சரண்" எனச் சொல்லிப் பலகால் அன்போடு தொழுது, அழுது, கீழே விழுந்து பணிந்து, எழுந்து "உமாதேவிக்கு நாயக னாகிய சிவபெருமானைத் தில்லையிலே கண்டேன்! கண்டேன்!!" எனக் கண்டபத்து மனங்கொள்ள உரைத் தருளினார்.

இவ்வாறு பல ஸ்தலங்களுக்குச் சென்று பதிகங் களைப் பாடியபின் உறுதிமேலிட்ட மாணிக்கவாசகர், "என்னை யடிமையாகக் கொண்ட கடவுளை யல்லாமல் வேறொருவரைத் தெய்வமென்பதற்கு அஞ்சுகிறேன்" என அச்சப்பத்து பாடியருளினார்; அதன்பிறகு அந் நகர்ப் புறத்திலே ஒரு பன்னசாலை யேற்படுத்திக்

கொண்டு அதிலே தங்கியிருந்தார். இத்தகைய மகிமை வாய்ந்த மாணிக்கவாசகரைப்பற்றி அந்நகரில் யாவரும் இரவும் பகலும் பேசிப் புகழ்வாராயினர்.

**புத்தரை வாதில் வென்ற சருக்கம்.**—மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு சிதம்பரத்தில் இருந்து வருகையில், ஒரு தபோதனர் அங்கே வந்து நடனசபேசரைத் தரிசித்துப் பரமானந்த மடைந்து எப்போதும் சிவசிதம்பரம் தில்லையம்பலம் என்று சொல்லிக்கொண்டே ஸ்தலந்தோறும் போய்வரத் தலைப்பட்டார். அப்படி ஸ்தலயாத்திரை செய்யும் அவர், பூமி முழுவதும் சுற்றிப்பார்க்க எண்ணங்கொண்டு ஈழநாட்டிற்குச் சென்றார். அங்கே போனவர் வழக்கம் போல் சிவசிதம்பரம் தில்லையம்பலம் என்று சொல்லிக் கொண்டும், தில்லையம்பலத்திற்கு மேற்பட்ட ஸ்தலமில்லையென்று பாடிக்கொண்டும் நெடுகலும் சுற்றிப் பார்த்தார்.

அவர் இவ்வாறு சொல்லிக்கொண்டிருப்பதை யறிந்த புத்தர், அந்நாட்டு வேந்தனிடம் போய், "சோழநாட்டிலிருந்து இங்கொரு பிச்சைக்காரன் தேகமுழுவதும் விபூதியும், உருத்திராக்ஷ மாலையும் பூண்டு, தெருத்தெருவாய்ப் பிச்சை யெடுத்துக் கொண்டு, சதாகாலமும் 'சிவசிதம்பரம் தில்லையம்பலம்' என்று சொல்லிக்கொண்டு அந்தப் பதியையே

மேலான ஸ்தலமென்று பாடிக்கொண்டு மிருக்கிறான், அது நமக்குப் பெருங் குறைவாகத் தெரிகிறது" என்றார்.

இதைக்கேட்ட அரசன் அருகிலிருந்த ஏவலாளரை யழைத்து "இப்போது நம்மூரிலே 'சிவசிதம்பரம்' என்று சொல்லிக்கொண்டு யாரோ ஒரு பிச்சைக்காரன் திரிகிறானும், அவனைக் கைப்பிடியாய்ப் பிடித்து நம் முன்னே கொண்டுவாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

ஏவலாளர் உடனே புறப்பட்டுப்போய் நெடுகலுந் தேடிப்பார்த்து, ஓரிடத்தில் 'சிவசிதம்பரம் தில்லையம்பலம்' என்று சொல்லிக்கொண்டிருந்த தபோதனரைக்கண்டு, "ஐயா, உம்மை எமது அரசர் அழைத்து வரச் சொன்னார்; வாரும்" என்றனர். தபோதனர், "பிச்சை யெடுத்துண்பதை யன்றி வேறொன்றையும் கருதாத எம்போன்றவர்களிடத்தும் அரசனுக்குக் காரியமுண்டோ?" என்று கேட்டார்.

ஏவலாளர், "வேறு பேசாதேயும், அரசன் உம்மை அழைத்துவரச் சொன்னார். அவர் கட்டளையை மறுப்பதற்கு நீர் யார்? வாரும்" என்று கூறி அவரை அழைத்துக்கொண்டுபோய் வேந்தன் முன் நிறுத்தினார்கள்.

தபோதனர் அங்கே போனதும் வழக்கம்போல் "சிவசிதம்பரம் தில்லையம்பலம்" என்று கூறினர். புத்தர், அரசனை நோக்கிப் "பார்த்தீர்களா இவனுடைய குறும்பை" எனக் கூறி அரசனுக்குக் கோபத்தை உண்டாக்கினர்.

அரசன் அந்தத் தபோதனரைப் பார்த்து, "நீர் யார்? எந்த வூர்? இங்கே வந்து ஏன் இப்படிச் 'சிவசிதம்பரம் தில்லையம்பலம்' என்று கூறுகிறீர்?" என்று கேட்டான். தபோதனர் "இந்த ஏழை, சிவபெருமானுடைய அடிமை. இந்த ஏழைக்கு எந்த வூரும் ஊர்தான். இந்த ஏழை இந் நாட்டைப் பார்க்கவேண்டும் என்று இங்கு வந்ததேயன்றி வேறொன்று மில்லை. பிரபுவே! எந்த ஸ்தலம் முன்னே தில்லைவனமாயிருந்ததோ அதே மூன்று புவனங்களுக்குள் முன்னுண்டாகிய தெய்வஸ்தலம். அதனால் அதனை மூலஸ்தானமென்றும் சொல்லலாம். அது பூமிக்கு நடுவே விளங்கும் சித்சபை. அங்கே, உமாதேவியார் காணச் சபாநாயகர் நர்த்தனம் செய்தருளினர். அதனுள் சிவகங்கை என்றொரு தடாகமுண்டு. அந்தத் தடாகத்திலே மூழ்கிய இரண்யவன்மனென்னும் ஒரு வேந்தன், தன்னை நெடுநாட்களாக வருத்திய குட்டநோய் நீங்கித் திவ்விய தேகம் பெற்றான். அந்தத் தடாகத்தில் மூழ்கி, நடராஜரைத் தரிசிப்பவர்கள்

மறுபடியும் இந்த உலகத்திலே வந்து பிறவார்கள். பிறவியை நீக்கி ஆத்மகோடிகளுக்கு நன்மையைச் செய்யும் அநேக சமய தெய்வங்களில், தாமே வல்லவரென்பது விளங்கத் தமது காலில் வீரக்கழலே அணிந்துகொண்டு, அருட்சத்தியாகிய உமாதேவியார் காணச் சிவபெருமான் திருநடனம் செய்கிறார். அந்தச் சிவபெருமானைக் கருதாத மனமும், துதியாத வாக்கும், அவர்க்குரிய பணிசெய்யாத அவயவங்களுடைய கொடியவரும், ஒருமுறை பொன்னம்பலமென்று சொன்னால், அவர் பஞ்சாக்ஷரத்தை இருபத்தோராயிரத்து அறுநூறுதரம் ஜபித்ததற்கு நிகராகும்; ஆதலாலேதான் இந்த ஏழை அடிக்கடி தில்லையம்பலம் என்று கூறுவது" என்றார்.

இப்படித் தபோதனர் கூறக்கேட்டதும், புத்தர் "புத்தரையல்லாமல் வேறு கடவுள் உண்டோ?" என்று கோபங்கொண்டு, "அப்படியானால் நான் தில்லைமாநகருக்குப்போய் வாது செய்து நர்த்தனம் செய்யும் இவனுடைய தெய்வம் தன் காலில் அணிந்துகொண்டிருக்கும் வீரக்கழலைக் கழற்றியெறியும்படி செய்கிறேன். அல்லாமலும் அந்த ஸ்தலத்தை இனி எவரும் அரசமர நிழலில் வைகும் புத்தருடைய ஆலயமென்றும் கூறும்படி செய்கிறேன்" என்று அரசனை நோக்கிக் கூறி, உடனே தம் பரிசனங்களுடன் ஆடம்

பரமாகப் புறப்பட்டு நாடுகளும் காடுகளும் கடந்து சிதம்பரத்துக்கு வந்து சேர்ந்தார்.

புத்தகுரு புறப்படவே, புத்தராஜனும் தன்னுடைய அருமைப் புத்திரியின் ஊமைத்தன்மை நீங்கச் சிதம்பரத்துக்கு போகவேண்டுமென்று கருதி, உடனே தன் படைசூழப் புறப்பட்டுப்போய் அந்தத் திவ்விய ஸ்தலத்தை யடைந்தான். அரசன் தில்லையை அடைவதற்கு முன்பே, அங்குச் சென்ற புத்தகுரு சிதம்பரம் கோவிலுக்குள் ஒருபக்கத்தி லிருந்து வந்தார். அரசனும் அங்கேபோய் அவரைக்கண்டு பணிந்து நின்றான்.

புத்தகுரு அங்கு வந்து இவ்வாறு ஆடம்பரமாய் அமர்ந்திருப்பதைக்கண்ட கோவில் பணியாளர்கள், "நீவிர் யாவர்? இங்கேன் இப்படிவந்து வீண் ஆடம்பரங்கள் செய்கிறீர்கள்? போங்கள் வெளியே" என்றனர். புத்தகுரு, "உங்கள் அரசன் முன்பிருந்து தர்க்கம் பேசி, நீங்கள் கைக்கொண்டிருக்கும் சைவ மார்க்கம் நிலையற்றதென ரூபித்து புத்தரே உயர்ந்த தெய்வமென்று நிலைநாட்ட நாங்கள் வந்தோமாதலால், அதை முடிக்காமல் வெளியே போகமாட்டோம்" என்றார். இக்கொடூரச் செய்தியைக்கேட்ட பணியாளர்கள் நடுநடுங்கி, புத்தர் சொன்ன இந்தச் சபதத்தைத் தில்லை மூவாயிரவர்களுக்கும், பரிகலத்தார்

களுக்கும் தெரிவித்தனர். புண்ணிலே வேல் நுழைந் ததுபோன்ற இச்சொற்களைக் கேட்டதும், அவர்கள் எல்லோரும் சபாநாயகருடைய ஆலயத்தில் ஒன்று கூடி, புத்தகுருவை அங்கே வரவழைத்து, "நீர் எதற் காக இங்கேகினீர்?" என்று வினவ,

புத்தகுரு, "ஆறு சாஸ்திரமும், நான்கு வேத மும், இருபத்தெட்டு ஆகமங்களும், பதினெண் புரா ணங்களும் ஆதாரமாகக்கொண்டு நீங்கள், உங்களு டைய தெய்வமே தெய்வமென்று கூறுவீர்களானால், நான் எங்கள் தெய்வமே தெய்வமென்று கூறுவேன். அதைச் சாதிப்பதற்கே நாங்கள் இங்கே வந்திருக் கிறோம்" என்றுரைக்க,

அந்தணர்கள் இதைக்கேட்டு வெகுண்டு "நாளைய தினம் உம்மை கோவிலுக்கு வர வேண்டுகிறோம்" எனக் குறிப்பிட்டு, இவ்விஷயத்தை சோழராஜனுக்கு அறிவித்தார்கள்.

அப்பொழுது சூரியாஸ்தமனமாகும் வேளை. அவர்களனைவரும் தத்தம் வீட்டிற்குச் சென்றனர். இரவில் நித்திரை செய்யும்போது அவர்கள் ஒவ் வொருவருடைய கனவிலும் சிவபெருமான் தோன்றி, "நீங்கள் கவலைப்படவேண்டாம், நம்முரெல்லையில் திருவாதவூரிலிருந்து ஒருவன் வந்திருக்கிறான், அவ னிடம் போய் 'மாணிக்கவாசகா' என்றழைத்து இச்

செய்தியை கூறுங்கள். அவன் இந்தச் செய்தியைக் கேட்டால் தர்க்க சாஸ்திரங்களைக்கொண்டு புத்தரை வாதில் வெல்வான். ஆதலால் நீங்கள் போய் அவனை அழைத்துவாருங்கள்'' என்று கூறியருளி மறைந்தார்.

இவ்வாறு கனவு கண்டதும் அவர்கள் ஒவ்வொருவரும் பெருமகிழ்ச்சி யடைந்தனர். மறுநாள் சபைக்கு வந்ததும் தாங்கள் கண்ட கனவை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு "இனி வென்றோம் இந்தப் புத்தனை'' என்று கூவி, சிவபெருமானைப் புகழ்ந்து துதித்துக்கொண்டே மாணிக்கவாசகரிடம் போய் அவரை வணங்கி 'மாணிக்கவாசகரே' என்றழைத்து, சிவபெருமான் தங்கள் கனவில் தோன்றிக் கூறியவைகளைத் தெரிவித்து, அவரைச் சபைக்கு வரும்படி வேண்டிக்கொண்டார்கள்.

சிவபெருமான், புத்தரோடு வாதிக்கும் விஷயமாய் முன்பே மாணிக்கவாசகர்க்குச் சொல்லியிருக்கிறாராதலால், சுவாமிகள் அதனை யெண்ணி இச்சமயம் மனமகிழ்ந்து உடனே பன்னகசாலையை விட்டுப் புறப்பட்டு ஆலயம் போய், புத்தரிருக்கும் இரத்தின மண்டபத்தை யடைந்து, அவரைப் பார்க்க விரும்பாமல், திரையொன்று போடச்செய்து, அதற்குப்பின்னே உட்கார்ந்துகொண்டார்.

மாணிக்கவாசகர் அங்கே போய்ச்சேர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம், சோழமகாராஜனும் அவ்விடம் வந்து சுவாமிகளைப் பணிந்து அவரருகே உட்கார்ந்து கொண்டான். அப்பால் மாணிக்கவாசகர் புத்தகுருவை யழைத்து "நீர் எங்கே வந்தீர்?" என்று கேட்டார். புத்தகுரு,

"மன்னுமெங் கடவு ளல்லான் மற்றிலை கடவு ளென்றே
இந்நெடும் பதியி லெய்தி யியம்பியிங் கெவருங் காணப்
பொன்னினம் பலத்தே யெங்கள் புத்தரை வைத்தல் வேண்டி
யென்னல்வந் திருந்தே னீங்கு வேறிலை நினைந்த தென்றான்."

இதைக்கேட்டதும் மாணிக்கவாசகர் சிறுநகை செய்து, "முயல் எங்கேயாவது யானை யாவதுண்டா? நல்லது, உம்முடைய தெய்வமே தெய்வமென்பதையும் ஆன்மாக்கள் அவனடியிலே சேரும் செய்தியையும் கூறும்" என்றார்.

புத்தகுரு கோபமடைந்து, "கண்ணில்லாதவனுக்குச் சூரியகிரணத்தின் ஒளியைக் காட்டக்கூடுமோ? எங்கள் புத்ததேவனுடைய நல்ல கீர்த்தியைப் பற்றிப் பேசவேண்டுமானால் பல்லாயிரம் நாக்கள் வேண்டும். இந்த ஒரு நா போதாது" என்று கூறிப் பின், "எங்கள் தெய்வம் அநேகம் பிறவிகள் எடுத்து, ஆன்மகோடிகளுக்கு உறுதிசெய்து, பொல்லாங்கைத்

தருவனவாகிய கொலை, களவு, பொய், கள்ளுண்ணல் ஆகிய நான்கு குற்றங்களையும் நீக்கி மேன்மையான அரசமர நிழலிலே இருப்பார்" என்றார்.

அப்பால் மாணிக்கவாசகர், புத்தகுருவுடன் அவர் கூறிய கடவுளின் இலட்சணங்களைக் கொண்டே நெடுநேரம் தர்க்கம் செய்தார். புத்தகுருவும் மாணிக்க வாசகரை மறுத்து நெடுநேரம் வரையில் வீண்வாதம் பேசித் தர்க்கித்தார். அப்பால் மாணிக்கவாசகர் சினங்கொண்டு, ஸரஸ்வதி தேவியை அந்தப் புத்த குருவினுடைய நாவினின்றும் விலகும்படி வேண்டி னார். வேண்டியவளவில், சரஸ்வதி தேவி அவ்வாறே விலகினள். உடனே புத்தகுருவேயன்றி அங்கு வந் திருந்த புத்தர்களனைவரும் ஊமையானார்கள்.

இதைக்கண்ட ஈழநாட்டரசன் வியப்படைந்து, மாணிக்கவாசகரை வணங்கி, "ஐயா, உமது மகிமை யினால் பேசத்தக்கவர்களும் ஊமையானது இன்று கண்டேன். பிறவியிலே ஊமையாயிருக்கும் என் புதல்விக்கு ஊமை நீங்கும்படி அநுக்கிரகம் செய்வீ ரானால் நானுமக்கு அடிமையாவேன்" என்றான்.

மாணிக்கவாசகர் உடனே அம்மன்னனுடைய புதல்வியைத் தம்முன் வரவழைத்துக் கிருபாநோக்கம் செய்து, "பெண்ணே, இந்தப் புத்தகுரு சொன்ன

தர்க்கங்களுக்கெல்லாம் நீயே உத்தரஞ் சொல்" என்றூர். அப்படிக் கூறியவளவில், புத்தகுரு கேட்ட வினக்களுக்கெல்லாம், கற்றறிந்தவள்போல் அந்தப் பெண் உத்தரம் சொல்லலாஞள். அப்படி அப்பெண் சொன்ன உத்தரங்களின் பொருளை யெடுத்துத் திருச் சாழல் விளையாட்டாக மாணிக்கவாசகர் பாடியருளினூர்.

அதன்பின் ஈழநாட்டரசன், விபூதி தரித்துக் கொண்டு சிவபெருமானைத் துதித்து மாணிக்கவாசகரை வணங்கி, "தமியேனை அடிமை கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அப்பால் சோழ ராஜனும், தில்லை மூவாயிரவரும் "அம்பலம் வாழ்க!" என்று துதித்து மாணிக்கவாசகரைப் புகழ்ந்து வணங்கினூர்கள்.

மாணிக்கவாசகர் அப்பால் புத்தரிடம் இரக்கங் கொண்டு, அவர்களை எப்போதும்போல் பேசும்படி அநுக்கிரகம் செய்தார். புத்தரனைவரும் அதனூல் பெருமகிழ்ச்சி யடைந்து, மாணிக்கவாசகரை வணங்கி அவரிடம் விபூதிவாங்கி நெற்றியிலணிந்துகொண்டு, சிவபெருமானிடம் அன்புடையவராயினர். அதன் பின் யாவரும் அம்மண்டபம் விட்டெழுந்து ஸந்நிதிக்குப்போய் நடராஜமூர்த்தியை வணங்கித் தரிசித்து விடைபெற்றுத் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்ற

ணர். மாணிக்கவாசகரும் தமது பன்னகசாலைக்குச் சென்றார்.

திருவடி பெற்ற சருக்கம்.—மாணிக்கவாசகர் அந்தப் பன்னகசாலையி லிருந்துகொண்டே சிவபெருமானை நினைந்து, திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி, அச்சோப்பத்து, யாத்திரைப்பத்து என்னும் பதிகங்களைப் பாடித் துதித்து, ஒன்றைத் தேடுதலும், திகைத்தலும், பின் தெளிதலும், சிறுமைகொண்டு வாடுதலும், களித்தலும் இல்லாமல் பெருவாழ்வு வாழ்ந்துவந்தார். அநதச் சிதம்பரம் அவர்க்கு மேலான சிவபதமாயிருந்தது.

அவ்வாறிருக்கையில், ஒருநாள் சிவபெருமான் ஒரு பிராமணத் திருமேனியுடன் அவரிடம் போய் நின்றார். மாணிக்கவாசகர் அவரைக் கண்டதும் "உட்காரும். நீர் யார்? எங்கே வந்தீர்கள்?" என்று விசாரித்தார். பிராமணர் "நான் இருப்பது பாண்டியதேசம்" என்றார். மாணிக்கவாசகர் மிகவும் சந்தோஷமடைந்து, "பாண்டியநாடா நீரிருப்பது? நல்லது. இங்கே வந்த காரியமென்னவோ?" என்று கேட்டார்.

பிராமணர், "ஐயனே, உம்மைப்பார்க்கவே நான் வந்தேன். பிரம விஷ்ணுக்களாலும் தேடி அடைதற்கரிய கடவுளை, குதிரையின்மீது வரும்படிசெய்த உம்

முடைய மகிமையினலே பாண்டிநாடு மேன்மை யடைந்தது. திருப்பெருந்துறையில் ஐயனுடைய திருவடிதொழுது, பின் திருக்கழுக்குன்றஞ் சென்று அப்பால் இந்தச் சிதம்பரம்வந்து புத்தரை வாதில் வென்றதையும் கேட்டு நாங்களெல்லோரும் பெருமகிழ்ச்சி யடைந்தோம். சித்சபையிலே நடனமிடும் நடராஜப் பெருமானைத் தாம் இனிய தமிழிலே பாடித்துதித்த பாடல்களை யெல்லாம் ஓதவேண்டுமென்கிற அவா மேலிட்டு நான் இங்கே வந்தேன். அவற்றையெல்லாம் தாம் பாடிக்கொண்டேவந்தால் நான் எழுதிக்கொள்வேன்; தயைசெய்யவேண்டும்" என்று கேட்டார்.

மாணிக்கவாசகர் அதைக் கேட்டதும் மகிழ்ந்து, சிவபெருமானைத் தியானித்துத் திருவாசகம் முழுவதையும் பிராமணர் எழுதத் தாம் பாடிக்கொண்டே வந்தார். அது எழுதி முடிந்ததும் பிராமணர், "உமாதேவியாரை இடதுபாகங்கொண்ட சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனகவைத்துக் கோவை யொன்று பாடியருளும்படி வேண்டிக்கொண்டார். மாணிக்கவாசகர் மனமுவந்து அவ்வாறே கோவையொன்று பாடியருளினர். அதையும் அந்தப் பிராமணர் புத்தகத்திலே எழுதிக்கொண்டார்.

அப்பால் அடுத்த நிமிஷத்திலே பிராமணர், அந்தப் புத்தகத்துடன் மாயமாய் மறைந்துவிட்டார்.

மாணிக்கவாசகர் அதுகண்டு அதிசயமடைந்து "இது இறைவன் திருவிளையாடல்" என்றறிந்து கண்களிலே ஆநந்தபாஷ்பம் பெருக நின்று சிவபெருமானைத் தியானித்துத் தம்மையே மறந்தார்.

புத்தகத்துடன் சென்ற சிவபெருமானாகிய பிராமணர், நேரே தமது சபைக்குச்சென்று, "நம்முடைய அடிமையாகிய மாணிக்கவாசகன் பாடிய பாடல்களைப் பாருங்கள்" என்று பிரமாதி தேவர்களுக்கு அவைகளைக் காட்டினார். அவர்கள் அந்தப் பாடல்களைப் பார்த்து மகிழ்ந்து சென்றனர். அப்பால் சிவபெருமான், கோவையின் கடைசியேட்டில், "இந்தப் புத்தகம் மாணிக்கவாசகன் பாட நடனசபேசன் எழுதியது" என்று எழுதி, அதற்கும் தம் திருக்கரத்தினாலேயே மைக்காப்பு செய்து, மாணிக்கவாசகருடைய மகிமையை உலகத்துக்கு உணர்த்த வெண்ணி அந்தச் சபையின் வாயிற்படியிலே அதனை வைத்துவிட்டு மறைந்தார்.

அங்கே பூஜை செய்யவந்த ஓர் அந்தணர் அந்தப் புத்தகத்தைப் பார்த்து அதிசயித்து "ஒரு புத்தகம் சபையின் வாயிற்படியிலே இருக்கிறது" என்று தில்லையில் உள்ள பல அன்பர்களுக்குங் கூறி அவர்களையும் அழைத்துவந்து காட்டினார். அவர்களும் அதைப் பார்த்து அதிசயமடைந்து "இது நமக்கென்று இறை

வன் தந்தருளிய திருநூலாகும்" என வியந்து தங்களுள் ஒருவனை நோக்கி "அதை யெடுத்துப் பிரித்துப் படி" என்றார்கள். அவன் சிவபெருமானை தியானித்துக்கொண்டே அப்புத்தகத்தை எடுத்துப் படித்தான்.

அந்தப் புத்தகத்திலடங்கிய திருச்சதகம் முதலாக அறுநூறு பாடல்களையும், கோவை நானூறு பாடல்களையும் படித்துப் பின் கடைசியில் 'மாணிக்க வாசகன் பாட நடனசபேசன் எழுதியது' என்று எழுதியிருந்ததையும் படித்தார்.

இந்தத் திருமுறையைப் படிக்கக் கேட்டவர்களனைவரும் மெய்ப்புளகமுற ஆநந்தமடைந்து, "மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளிய இந்தத் திருநூலல்லாமல் மோக்ஷமார்க்கத்திற்கு வேறு நூலும் உண்டோ" என்று பெருவியப்புற்றனர்; பின்னர், யாவரும் மாணிக்கவாசகரிடம் சென்று, அவர்முன் அந்தப் புத்தகத்தை வைத்துப் பணிந்து, "சிவபெருமான் செய்த காரியம் இது" என்று கூறினார்கள்.

மாணிக்கவாசகர் அதைக் கேட்டதும், "அடியேன்பொருட்டு இறைவன் இப்படி விளையாட யான் செய்த தவம் யாதோ அறியேன்" என நினைந்து ஆநந்தமடைந்தார். அவரை நோக்கிச் சிவநேயரெல்லாம், "சுவாமி, தம்மிடம் சிவபெருமான் வந்து இதனை

எழுதியதெப்படி?" எனக் கேட்டனர். வாதவூரர், நடந்ததை அவர்கட்குப் பெருமகிழ்ச்சியோடு நவின்றனர். அதுகேட்டு அவர்கள் ஆச்சரியத்துடன் அவரைப்பார்த்து "இந்தத் திருமுறைக்குத் தாம் பொருள் கூறியருளல் வேண்டும்" என்று வேண்டினார்கள்.

வாதவூரர், "நல்லது சபைக்குப் போவோம் அங்கே இறைவன் சந்நிதியில் பொருளை விரித்தருளுவோம்" எனக் கூறினார். பின் யாவரும் அவரை அழைத்துக்கொண்டு சபைக்குச்சென்றனர். அங்கே சென்றதும் மாணிக்கவாசகர் சிவபெருமானை வணங்கி நின்று, "ஐயன்மீர்! இந்தத் திருமுறைக்குப் பொருள் இவர்தாம்" என்று சபாநாயகரைக் காட்டி, தில்லை மூவாயிரவர்களும் ஏனைய அன்பரும் காண நடன சபையிலே மறைந்தார்.

"அண்டனை யண்டர் கோனை யன்பின ரடையுமாறு
கண்டனர் புளக மெய்திக் கம்பிதமாகி நின்று
விண்டனர் கசிந்து கண்ணீர் வேர்த்தனர் மேனி யெங்கும்
கொண்டனர் மகிழ்ச்சி செங்கை குவித்தனர் தில்லை யுள்ளார்."

இச்சமயம் பூதங்களெல்லாம் நர்த்தனம் செய்தன; கணநாதர்கள் புகழ்ந்தனர்; தும்புரு நாரதர்கள் இன்னிசை பாடி மகிழ்ந்தனர்; வேதங்களும் அந்தர

துந்துபியும் ஆகாயத்திலே முழங்கின; முனிவரும் தேவர்களும் மலர் தூவினர்.

"வாதவூ ரந்தணர் தந்திரு வாய்மை விளங்கு திருக்கதை
ஓதின ரன்புட னெண்செவி யூடு முகந்தது கேட்டவர்
போதமெய்ஞ் ஞான முறுஞ்சுக போக முடன்புகழ் பெறுவர்கள்
தீதில் பவங்க டொலைந்துபின் சேர்குவர் வண்சிவ லோகமே
பூதல மாதும் வாழ்க பொன்மழை பொழிந்து வாழ்க
வேதவா கமமும் வாழ்க வேந்தர்செங் கோலும் வாழ்க
தீதிலேந் தெழுதது நீறுஞ் சிவனடி யாரும் வாழ்க
வாதவூ ரிறை புராணம் படித்தவர் கேட்டோர் வாழ்க."

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்

# ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் சரித்திரம்.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்திலே, தென்னாடுகள் பலவற்றினுஞ் சிறந்ததும், திவ்விய க்ஷேத்திரங்கள் நிறைந்து விளங்குவதுமாகிய சோழ மண்டலத்திலே, வேதாரணியம் என்னும் வடமொழிப் பெயரையுடைய திருமறைக்காடாகிய் சிவஸ்தலத்திலே, சற்றேறக்குறைய 250-வருஷங்களுக்கு முன்னே, வேளாண் குலத்திலே, குரு லிங்க சங்கம பக்தியிலே சிறந்தவராய்க் கேடிலியப் பிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்; சிவபக்தி, அடியார் பக்தி நிறைந்தவர். அவர் தமது குணங்களுக்கேற்ப, அவ்வூர்ச் சிவன் கோவில் தரும விசாரணைத் தொழிலை மேற்கொண்டிருந்தார்.

மதுரை முதலிய தென்னாடுகளை ஆண்டிருந்த திருமலை நாயகர்க்குப் பௌத்திரரான விஜயரங்க சொக்கநாத நாயகர் என்பார் அக்காலத்தில் சோழ

பாண்டிய நாடுகளை அரசாண்டு வந்தனர். அவர் கேடிலியப் பிள்ளையின் கல்வி கேள்விகளையும், குணாதிசயங்களையும் கேள்வியுற்று அவரைத்தமது அரண்மனைக்கு வரவழைத்துத் தம்மிடத்து ஓர் உயர்ந்த உத்தியோகங்கொடுத்து வைத்துக்கொண்டார். கேடிலியப் பிள்ளை அவ்வுத்தியோகத்தில் அமர்ந்து இராஜாங்க காரியங்களைச் செவ்வையாக நடத்திவந்தார்.

இது நிற்க, கேடிலியப் பிள்ளைக்குத் தமையனொருவர் இருந்தனர். அவருக்கு மிக்க வயதாகியும் சந்ததியில்லாமையால் மிகவும் மனம் வருந்தினர். அதுகண்ட கேடிலியப் பிள்ளை தமது ஏகபுத்திரராகிய சிவசிதம்பரப் பிள்ளை என்பாரை தம் தமையனார்க்குச் சுவீகாரம் செய்துகொடுத்து விட்டனர். பின்னர், தமக்குப் பிற்காலம் தம் சந்ததி விளங்க தமக்கென்று ஒரு புத்திரனில்லையே என்று கருதி, திரிசிராமலையில் எழுந்தருளியிரா நின்ற தாயுமானேசுரரைத் தினந்தோறும் தன் மனைவியோடு வழிபட்டு வந்தனர். சில நாட்களுக்குள்ளேயே சிவபெருமான் திருவருளினால் அவர்களுக்கு ஓர் ஆண்மகவு உதித்தது. அது தாயுமானேசுரர் திருவருளாற் றோன்றியதாதலால், அதற்குத் தாயுமானவர் என்ற திருப்பெயரே கொடுத்து, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

**கல்வி.**—குழந்தை திருவருள் வலத்தால் தோன்றியதாதலால், சிறு வயதிலேயே அற்புத அறிவும், ஆழ்ந்த சிந்தனையும் காட்டிவந்தது. தந்தையார் தக்க பருவத்தில் அதற்கு வித்தியாரம்பம் செய்வித்தார். தாயுமானவர் சிறிது காலத்துக்குள் தமது தாய்ப் பாஷையாகிய தமிழ் மொழியிலுள்ள இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்ததுமன்றி வட மொழியையும் கற்று, வேதாகமஸ்மிருதி, புராண, இதிகாச முதலியவைகளில் மிகவும் தேர்ச்சி பெற்றனர்; தேவார திருவாசக முதலிய திருமுறைகளையும், அருணகிரி நாதரருளிய திருப்புகழையும், மெய்கண்ட சாத்திரமெனப் பெயர் பெற்ற பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களையும் பாராயணஞ் செய்து வந்தனர். சுவாமிகள் தமிழ் மொழியிலும், வட மொழியிலும் பயிற்சியுடையர் என்பது, "கல்லாத பேர்களே நல்லவர்கள்" எனவரும் செய்யுளில் அறியலாகும்.

**அரசவைபுகுதல்.**— இவ்வாறு இளமையிலேயே தாயுமானவர் கல்வியிலும் அறிவிலும் சிறந்திருப்பதை அரசர் அறிந்து மிகவும் மன மகிழ்ச்சி யுற்றிருந்தார். தாயுமானவர்க்குப் பதினாறு வயது நிரம்பியது. அதற்குள் அவர் அருமைத் தந்தை சிவகதி யடைந்தனர். தமது தந்தை வகித்துவந்த ராஜ உத்தியோகத்தைத் தாயுமானவர் ஏற்பது நியாயமேயாயினும், அவ்வளவு

இளம்பிராயத்தில் அவ்வளவு பொறுப்பான உத்தியோ கத்தை ஏற்றுக்கொள்ள அவர்க்கு மனமில்லை. ஆயி னும் அரசர் வற்புறுத்தியதன்மேல் அதனை ஏற்று, காரியங்களைச் செவ்வையாக நடத்திவந்தார். இங்ங னம் அவர் லௌகிகத் தொழிலை மேற்கொண்டிருந்த போதிலும் அவரது மனம் உயிர்க்குறுதி நிலையாகிய ஞானமார்க்கத்தில் அழுந்தி பிறவித்துயரை அறுத்து முத்திப்பேறு பெறுவதிலேயே அழுந்தியிருந்தது. ஆதலால் அவர் ராஜசமுகத்துக்கு வரும் பண்டி தர்களைக் கண்டு, உண்மைப்பொருள் அறியவேண்டு மென்னும் அவாவோடு, அவர்களைப் பலபல கேள்வி கள் கேட்பார். அக்கேள்விகளுக்கு விடைகூற அறி யாது அப்பண்டிதர்கள் மௌனமுற்றிருப்பர். அப் பொழுது தாயுமானவர் அவர்களை நோக்கி, "ஐயா, பிறவியாற் பெறும் பயன் உண்மை நிலைகண்டு உயர் கதி உறுவதே. ஆதலால், நீங்கள் அவ்வுண்மை நிலை யினை ஆராய்ந்தறிமின்," எனக்கூறுவர். தாமும் 'அவ் வுண்மை நிலையினை ஐயமற அறிவுறுத்தும் ஞானாசாரி யர் ஒருவரை எப்போது காண்போம்' என்று ஆவ லாய் எதிர் பார்த்திருந்தனர். இது நிற்க:

குருதரிசனம்.—அரும் பெரும் சித்தாந்த உண்மை களை உணர்த்தும் திருமந்திரம் என்னும் ஒப்புயர்வற்ற நூலை உலகிற்குபகரித்த திருமூல நாயனார் மரபில் வந்

தவரும், திருக்கயிலாய பரம்பரையைச் சார்ந்த மெய்க்கண்டர் மரபில் வந்தாரொருவரிடத்து ஞானோபதேசம் பெற்றவருமான மௌனகுரு சுவாமிகள் என்பார் ஒருவர் இருந்தனர். அவர் திரிசிரபுரத்தில் எழுந்தருளியுள்ள தாயுமானேசுரரைத் தரிசிக்க அங்குச் சென்றனர். அவரைத் தாயுமானவர் தற்செயலாய்க் கண்டார்; உடனே தம்மனமுருகி அவர் அருள் நோக்க வசப்பட்டு, அடியற்றமரம்போல் அவர் திருவடிகளில் வீழ்ந்து பணிந்து, தழுதழுத்த சொற்களால் “ஐய, தங்கள் திருக்கரத்து விளங்கும் புத்தகம் யாது?” என்று வினவினர். மௌனசுவாமிகள் யாதும் உரையாது மௌனமாய்ச் சென்றனர். தாயுமானவர் அவரை விடாது பின் தொடர்ந்தனர். மௌன சுவாமிகளோ, தமக்கு இஷ்டமான இடங்களுக்கெல்லாம் செல்ல, தாயுமானவர் அவரை விடாது பின் பற்றிச் சென்றுகொண்டிருந்தார். இரவு நடுச்சாமமாயிற்று. மௌன சுவாமியார் தாயுமானேசுரர் கோயிலுக்குட் சென்று ஓரிடத்தில் பத்மாசனமிட்டு உட்கார்ந்தனர். தாயுமானவர் அவர் எதிரே சென்று கைகட்டி வாய்புதைத்து நின்றனர். அவரது பக்தியைக் கண்ட மௌனசுவாமிகள் அவரை அருள் கனிந்து நோக்கி, “எனது கையில் உள்ளது சிவஞான சித்தி” என்றனர். தாயுமானவர் சற்றுத் தயங்கி

நின்று சுவாமிகளை நோக்கி, "சுவாமிகாள், தபோநிதி!" அடியேனுக்குச் சில ஐயங்கள் உள. தயைகூர்ந்து அவைகளைத் தெளிவிக்க வேண்டுகிறேன். முதலாவது, சிவம் என்பது எது? இரண்டாவது, ஞானம் என்பது யாது? மூன்றாவது, சித்தியாவது யாது?" என்றனர்.

அப்பொழுது குருமூர்த்தி, அவரை நோக்கி, "ஏ மாணவ! சிவம் என்பது பதி; ஞானம் என்பது (அப் பதியை உள்ளவாறறியும்) அறிவு; சித்தி என்பது அவ்வறிவை வருவிப்பது" என்றனர்.

**குருவின் பிரிவு.**—இங்ஙனமே தாயுமானவர் தமக்குள்ள ஐயங்களை யெல்லாம் மௌனகுரு சுவாமிகளிடம் தெரிவித்தனர். குரு இவருடைய பக்குவத்திற் கேற்றவாறு தீக்ஷை செய்து "மாணவ! நின் உள்ளத்துத் தோன்றிய ஐயங்களை அகற்றி மயக்கங்களை மாற்றி உண்மை அறிவாகிய அத்துவித ஞானத்தைக் கொடுப்பது இந்தச் சிவஞான சித்தியார் என்னும் நூலேயாம். இது சந்தானகுரவருள் சகலாகமபண்டிதர் என்னும் அருணந்தி சிவாசாரிய சுவாமிகளால் அருளப்பட்டது. சிவஞான போதத்துக்கு வழிநூலாயுள்ளது. வேதாகம சாரமாகிய சித்தாந்த இயல்பினை எடுத்து ஸ்தாபித்தலால் சுபக்கம் என்றும், அதற்கு ஒவ்வாதனவாயுள்ள சமயக் கொள்கைகளை எடுத்துக்

கண்டனஞ் செய்வதாற் பரபக்கம் என்று சொல்லப் பட்ட இருபகுதிகளை உடையது. இந்நூல் போதிக் கும் மார்க்கம் சுத்தாத்துவித சைவசித்தாந்தம் எனப் படும். இதனாற் பெறப்படும் உண்மைப்பொருளாவது, சிவபெருமானே உலக முதற்காரணமாகிய பரமபதி, அவரோடு இரண்டறக் கலத்தலே முத்தி என்ப தாம்," என்றனர். அதுகேட்ட தாயுமானவர், சுவாமி களை மீண்டும் வணங்கி "குருநாத! தேவரீர் திரு வருள் கனிந்து அவ்வத்துவித சித்தாந்த நிலையினை அடியேனுக்குப் போதித்து, அடியேனை உய்விக்க வேண்டும்" என்றனர். மௌனகுரு சுவாமிகள் "மாணவ! நீ இன்னும் சிறிது காலமிருந்து இல்லற நெறியை யனுசரித்துப் புத்திரப்பேறடைவாய். பிறகு யாம் வந்து உனக்கு நிஷ்டைகூடும் உபாயத்தை அறிவிப்போம்," என்றுரைத்துத் தாயுமானவரைப் பிரிந்து சென்றனர். குரு பிரிந்து செல்வதைக்கண்ட தாயுமானவர் மிகவும் மனம் வருந்தி நின்றனர். அதை யுணர்ந்த மௌனகுரு தாயுமானவரைத் திரும்பி நோக்கி "சும்மா இரு" என்று கூறிச் சென்றார்.

பிரிவாற்றாமை:—இங்ஙனம் தாயுமானவர் மௌன குருவைச் சந்தித்து அவரோடு உரையாடியது முதல், அவர் திருவுருவமும், சிவஞானசித்தியாரைப் பற்றி அவர் கூறியதும், தம்மை விட்டுப் பிரிந்து செல்லுங்

கால் உரைத்த 'சும்மாவிரு' வென்ற வாக்கும் அவர் மனத்தை விட்டகலவேயில்லை. இதற்கு அத்தாட்சி அவர் பாடியுள்ள பாடல்களில் பலவிடங்களிற் காணப் படும். 'சும்மாவிரு' என்ற இவ்வொரு மொழியை வேதவாக்காகப் பற்றினர். மௌனகுரு வணக்கத்தில் 'ஐய, நீ சொன்ன ஒரு வார்த்தையினை மலையிலக்கென நம்பினேன்' எனவும், உடல் பொய்யுறவில், 'ஏதுக் குச் சும்மா இருமனமே யென்றுனக்குப் போதித்த உண்மையெங்கே போகவிட்டாய்' எனவும், 'என்னை அடிமைக் கிருத்தினன் சொன்ன ஒரு—சொல்லை மற வாமற்றோய்ந்தால் நெஞ்சேயுன்னல்—இல்லை—பிறப்ப தெனக்கே' எனவும், 'ஏதுக்குஞ் சும்மா இரு நீ யெனவுரைத்த—சூதுக்கோ' எனவும், இன்னும் பல விடங்களில் இவ்வண்ணமே தமது குருமொழியைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் அமைத்திருப் பது காண்க. இது நிற்க:

**சுவாமிகள் பெருமையை அரசன் உணர்தல்.**—குரு வைப் பிரிந்த பிறகு அவர் உபதேசித்த 'சும்மா விரு' என்ற உபதேசத்தையே சதா சிந்தித்தும், அவர் கூறிய சிவஞான சித்தியார் என்னும் நூலைக் கருத் தூன்றிப் பயின்று அதன் வழியே நின்றும் வரலாயி னர். இவற்றின் பயனாக நாளடைவில் அவர் மனம் நிலையற்ற இவ்வுலக விவகாரத்தில் நிலையாதாயிற்று.

மெய்நிலையில் மனம் பற்றியது. ஆதலால் அவர் தமது லௌகிகத்தொழிலை முற்றும் மறந்தனர்; மெய்ஞ்ஞானத்திற் சிறந்தனர். அரசனோ அவரைத் தன்னிடத்து உத்தியோகத்தி லமர்த்திக்கொண்டபோதே அவர் குணங்களை நன்கறிவன். இப்பொழுது அவர் மனம் நாளுக்கு நாள் ஞானமார்க்கத்தில் அழுந்திவருவதை யும் அவன் நேரிற் கண்டும், பிறர் சொல்லக் கேட்டும் உணர்ந்தான். ஆதலால், அவனுக்கு அவர்பால் மிக்க பயபக்தி உண்டாயிற்று. தான் அவரை உத்தியோ கத்தில் வைத்திருப்பதும் அபசாரம் என்று கருதி, அவரை நெருங்கி "சுவாமி! தேவரீரது பெருமையை அறியாது அடியேன் தங்களை நிலையற்ற இந்த லௌகி கத்தொழிலில் அமர்த்தினேன். இவ்வபசாரத்துக்குப் பரிகாரமாக அடியேனை தங்களுக்குச் சகல பணி விடைகளும் புரியுமாறு கட்டளையிட்டருளவேண்டும்" என்று பிரார்த்தித்து, அன்றுமுதல் அவர் மனம் களிக்கும்படி நடந்துவந்தான். இங்ஙனம் சில நாட் கள் செல்லவும் அரசன் இவ்வுலகவாழ்வை நீத்துப் பரமபத மடைந்தான்.

**மீனாட்சியம்மையின் காதல்.**—அரசன் இறந்த பிறகு அவன் பட்டத்தரசியாகிய மீனாக்ஷியம்மை யென் பாள் அரசுவகித்தாள். இவள், கற்பையே தமக்கு அணி யாகக்கொண்ட உயர்குலத் தமிழ்நாட்டு மாதர்களுள்

ஒருத்தியாய் மறுவற்றகுலத்தில் வந்தவளாயினும், உலகிற்குத் தான் ஓர் உதாரணமாயிருந்து கற்பின் வழி நின்று கண்ணியமுறவேண்டிய அரசபதவி வாய்க்கப் பெற்றவளாயினும், ஊழ்வினைவலியாலோ, அல்லது வேறெதனாலோ, தாமரையிலைத் தண்ணீர்போல் உலகவாழ்க்கையிற் பற்றியும் பற்றில்லாதிருந்த தாயுமானவர் மீது மனம் பற்றினாள். தன் கணவன் உள்ளபொழுதே அவரைப் பன் முறையும் பார்த்துள்ளாள். அவர் உருவழகைப் பற்றிப் பிறர் உரைப்பப் பன்முறையும் கேட்டுள்ளாள். அக்காலத்தெல்லாம் தன் கணவனுக்கஞ்சி அமைந்திருந்தாள் போலும். இப்பொழுதோ, தானே தனியரசு வகித்தமையால், அச்சம் அறவொழித்து, தீண்டாநெருப்பனைய தாயுமானவரை நெருங்கித் தன் தீவாய்திறந்து "ஐய! என் உடல், பொருள், ஆவி மூன்றையும் தங்களுக்கே தத்தம் செய்து விட்டேன். என் இராஜ்யத்திற்குத் தாங்களே தலைமை வகிக்க வேண்டும்" என்றனள். இச்சொற்கள் தாயுமானவர் காதில் காய்ச்சிய நாராசம்போல் விழுந்தன. அவள் தீய எண்ணத்தை அவர் அறிந்து கொண்டார். ஞானகுரு சந்நிதானத்தில் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ் செய்யச் சித்தமாய் 'மெய்யிற் சிவம்பிறக்க மேவு மின்பம் போன்மர்தர்—பொய்யிலின் பின்றென்று பொருந்து நாளெந்

நாளோ' என்று ஏங்கிக் காத்திருக்கும் தாயுமான வரோ அரசியின் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஏற்பவர்! அவர், அவள் தீய எண்ணத்திற்குத் துக்கித்து, அவளுக்கு ஏற்ற புத்திமதிகளைக் கூறிவிட்டு, இனி அங்கிருப்பது தகாதென்று நீங்கி தேவை நக ரிற் சென்று வசித்துவந்தனர். இந்நகர் இராமநாத புரத்திற் கருகிலுள்ளது.

**உற்றாரைக் காணல்.**—இச்செய்தி அவர் தமையனு ராகிய சிவசிதம்பரப்பிள்ளைகாதிற்கெட்டியது. உடனே அவர் தமது சிறிய தாயார் புத்திரராகிய அருளையப் பிள்ளை என்பவரோடு தாயுமானவரைக் காணச் சென் றனர். தாயுமானவர் அவர்களைக் காணவும் தாம் அங்குவந்திருப்பதன் காரணத்தை ஒருவாறு கூறினர். அதைக்கேட்டபிறகு அவர்களிருவரும் "வாழையடி வாழையாக நமது குலம் விளங்கவேண்டுமல்லவா? ஆதலால் நமது குலத்தில் ஒரு பெண்ணைத் தெரிந் தெடுத்து விவாகம் செய்விக்கக் கருதியிருக்கிறோம், அதற்கு உடன்பட வேண்டும்" என வேண்டினர். தாயுமானவர்க்கோ சம்சாரபந்தத்திற் கட்டுண்டிரு க்க மனமில்லையாயினும் தமையனார் வேண்டுகோட் கிணங்கி விவாகஞ் செய்துகொள்ள உடன்பட்டனர். சின்னாளில் விவாகம் நிறைவேறியது.

**இல்லற வாழ்க்கை.**—தாயுமானவர் தமது மனை

யாளோடு இல்லறம் நடத்தி வருங்கால் சிவபெருமான் திருவருளால், அவருக்கு ஓர் ஆண்மகவு உதித்தது. தாயுமானவரை அவர் அதிதீவிர பக்குவத்திற் கிசையாத சம்சார பந்தத்தினின்றும் விடுவிக்க வேண்டும் என்னும் திருவருள்போலும், அவர் மனைவியார் விரைவில் இவ்வுலகவாழ்வைத் துறந்தனர்.

**துறவறம்புகுதல்.**—தாயுமானவர் தமது குமாரர்க்குக் **கனகசபாபதி** என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். அப்பொழுது முன் அவரை அகன்று சென்ற மௌனகுரு சுவாமிகள் மீண்டும் அவரிடம் வந்து தமது மாணவர் அடைந்துள்ள பக்குவத்தைக் கண்டனர். உடனே அவருக்கு யோகமுறை உபதேசித்துத் துறவு பூணுமாறு கட்டளையிட்டனர். அன்றுமுதல் தாயுமானவர், கௌபீனதாரியாய் வெளிப்புறப்பட்டு யோக ஞானங்களை குருவுபதேசப்படி அனுசரித்து சிவ ஞானப் பெருஞ்செல்வராய்ச் சிலகாலம் இந்நிலவுலகில் தங்கி, தம் அனுபவங்களை யெல்லாம் அப்போதைக் கப்போது உளமுருகும் செந்தமிழ்த் திருப்பாடல்களாகப் பாடி, பின்னர் தேவை நகரிற் சமாதியுற்றனர். இவர் பாடல்களை அவ்வப்போது எழுதிவந்தவர்கள் இவரை அகலாது பின்தொடர்ந்த அருளையப் பிள்ளை முதலிய இவர் மாணவர்களே.

**சுவாமிகள் குணமாட்சிமை.**— சுவாமிகளது

ஸ்தூல சரீர வாழ்க்கை முற்றுப்பெற்றதாயினும், அவர் இந்நிலவுலகில் நிலவியகாலத்துப் பேரானந்தப் பெரும்போகத்தில் அழுந்தி அவ்வப்போது அருள் கனிந்து பாடிய செந்தமிழ்த் திருப்பாடல்கள், அவரது பெருங்கருணையையும், அருங்குணத்தையும், பரசிவபக்தியையும், பரஞான சித்தியையும் உள்ளவாறறிய ஏற்ற சாதனங்களாய் இஞ்ஞான்றும் நின்று நிலவுகின்றன. தம் குற்றம்பாராது பிறர் குற்றம் காணும் கீழ்மைக்குணம் சுவாமிகளிடத்துச் சிறிதும் இருந்ததில்லை. சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய மனிதர் உண்மை உணராது தீயசெயல்களில் தலையிட்டவிடத்து அவர்கள் அறியாமையைப்பற்றி துக்கித்து, அவர்கள் புன்செயல்களுக்கு இரங்கி அவர்களுக்கு இன்சொற்களால் புத்தி புகட்டி அவர்களைத் திருத்த முயல்வாரேயொழிய அவர்களை நிந்தித்தொதுக்கும் கருணையின்மை சுவாமிகளிடத்தில் சற்றும் இல்லை. நல்லாரையும், நல்லாரல்லாரையும் ஒருங்கணைத்து, எல்லாரையும் இன்பநிலையில் இருத்த வேண்டுமென்ற பெருமனதுடையவர்.

காடுங்க ரையு மனக்குரங்கு கால்விட்டோட வதன்பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிரா
யூடுங் கருணைப் பரஞ்சோதி யருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவ மிதுகண்டீர் சேர வாருஞ் ஜெகத்தீரே

எனவரும் இன்னோரன்ன செய்யுட்கள் 'தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பெருமனதுடையராவர் சுவாமிகள் என்னும் உண்மையினை வலியுறுத்தும்.

அவாவறுத்தல்.—மண், பொன், பெண் என்னும் மூன்றினும் ஆசையை ஒழித்தல் வேண்டும் என்னும் உறுதி சுவாமிகளுக்குப் பூரணமாயுண்டு. ஆயினும், ஒரோருகாலத்து அவ்வாசைகளை அடக்குதல் அவர்க்குச் சிரமமாகத் தோன்றியதுபோலும். இக்குறைபாட்டைச் சுவாமிகள் சிறிதும் ஒளியாது தமது திருப்பாடல்களில் குறிப்பித்துள்ளார். தாம் எத்துணை முயன்றும் சம்சாரபந்தத்தினின்றுந் தப்ப முடியாதுபோனமை குறித்து அவர் மனம் வருந்தினர்.

இவ்வாறு சிற்சில சமயங்களில் தம் விருப்பத்தின்வழியே உள்ளத்தை நிறுத்த வலாதுபோயினும், அதனால் மனந்தளர்ந்தாரில்லர். 'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர்—திண்ணியராகப்பெறின்' என்றவண்ணம், சுவாமிகள், பொய்யான சிற்றின்ப வாழ்க்கையைத் துறந்து, மெய்யான பேரின்பவாழ்வு பெறல்வேண்டும் என்று தம் உள்ளத்தேகொண்ட ஓர் உறுதியால், நாளடைவில் தம்மைப் பற்றியிருந்த உலக ஆசைகளையெல்லாம் அறவே ஒழித்து மனோ வெற்றிப் பெற்று உண்மைத் துறவுகொண்டனர்.

**தமிழபிமானம்.**—அவர் பாடல்கள், அவரது சிறந்த தமிழறிவைப் புலப்படுத்துவதுடன், தெளிவும் இனிமையும் ஒருங்கமைந்தன வாயுள்ளன. சுவாமிகள் தமிழ்மொழியிலும், வடமொழியிலும் வல்லவராயினும், தமிழ்மொழியாலேயே இறைவனைப் பாடித் துதித்தது, தமது தாய்மொழியாகிய தமிழ்மொழியே, கற்பாரையும் கேட்பாரையும் மனமுருகச் செய்யும் தன்மை வாய்ந்தது என்னும் உண்மையினை உணர்ந்தே போலும்.

ஞான நூற் பயிற்சியின்றி உணர்தற்கரிய அரிய பெரிய தத்துவ சாஸ்திர உண்மைகளை, சுவாமிகள் யாவரும் எளிதில் அறியத்தக்க சாதாரண மொழிகளால் விளங்கக் கூறியிருத்தல் வியக்கத்தக்கது. உண்மை ஞானிகளாவார் தாமறிந்த ஞானநெறியின்கண் நிற்போரேயன்றி, வாய்ஞானம் மட்டும் பேசித் திரியும் வீணர் அல்லர் என்பது சுவாமிகளுடைய முதற் கருத்தாகும். ஆதலால், தாம் ஞானநெறியைப் பலர்க்கும் விளங்க உரைத்தது மன்றித் தாமும் அந்நெறியே நின்று அனுபவமுகத்தாலும் தாம் கூறும் உண்மைகளை நிலை நாட்டினர்.

சுவாமிகள் திருப்பாடல்கள் அனைத்தினும் ஊடுருவி நிற்கும் ஓர் உண்மையாவது, என்ன ஞானம் கற்றாலும், என்ன சித்தி பெற்றாலும் மனத்தை ஒருவழிப்

படுத்தும் வல்லமையின்றேற் பயனில்லை என்பதாகும். இந்தக் கருத்து, பராபரக்கண்ணியில்:

> சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
> மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே

எனச் சுவாமிகள் கூறியுள்ள இந்த இரண்டடிகளால் தெளிவாய் விளங்குகின்றது.

**கடவுளின் தன்மை.**—'அருமறைகள் ஆற்றியுங் காணுதே' ஒரு பெருங் கடவுளின் தன்மையைப்பற்றிச் சுவாமிகளது அபிப்பிராயம் யாதென்று காண்போம். சுவாமிகள் திருப்பாடல்களை ஒருமுறை பெரும் போக்காகப் பார்த்தவர்களும், தனிப்பெருந் தலைவரான பெருங்கருணைக்கடவுளைச் சுவாமிகள் அடிக்கடி 'அகண்ட சச்சிதாநந்த சிவம்' என்று குறிப்பிப்பதைக் காணலாம். எங்கும் நிறைந்ததாய், ஞானசொரூபமாய், ஆனந்தமயமாய், காரணகாரியங்களுக்கு அப்பாற்பட்டதாய், காலதேச வர்த்தமானங்களுக்கு உட்படாததாய், மதங்களுக்கு அதீதமானதாய், மனத்தால் மதித்தற்கும் நாவால் உறைத்தற்கும் அரியதாய், இங்ஙனம் யாவற்றிற்கும் எட்டாததாயினும் அனைத்தினுக்கும் கிட்டியதாய், உயிர்க்கு உயிராய் நிற்பதெதுவோ அதுவே பராபரவஸ்து என்பது சுவாமிகளது முடிவான அபிப்பிராயம்.

அறிவுக்கெட்டா அமலசொரூபாகிய அந்தக் கடவுளது அருட்குணமே சர்வாண்டபிண்ட சராசரங் களையும் இயக்குகின்றது. இந்த அருட்குணமே, பரா சக்தி எனவும், ஆதிசக்தி எனவும், அருட்சக்தி என வும் பலவாறு கூறப்படுகிறது. இது இறைவனிடம் இயல்பாகவே அமைந்துள்ளது. ஆனதுபற்றியே சுவாமிகள் இறைவனைப் 'பரையெனுங் கிரணஞ் சூழ் ந்த பானு' என்கின்றார். சூரியகிரணங்களாற் சூரியனை அறிவ தெங்ஙனமோ, அங்ஙனமே, அருட்சக்தியா லேயே இறைவனும் அறியப்படுகின்றான். இறைவ ளைடு பிரிவறக் கலந்திருக்கும் அருட்சக்தி, பெண்மைக் குணமாதலால், அதைப் பெண்ணாக உருவகப்படுத்தி உமாதேவி எனவும், உலகன்னையெனவும் அழைக்கின் றார்கள். இங்ஙனம் உமாதேவியாக அழைக்கப்படும் அருட்குணம் வேறு, இறைவன் வேறு என்று மயங்கா மற் பொருட்டே உமாதேவியும் சிவபெருமானும் ஒன் றாகி நிற்கும் அர்த்தநாரீச்வர மூர்த்தம் எழுந்தது போலும். சிற்றறிவினராகிய மனிதர், காண்டற்கும், கருதற்கும் எட்டாக் கருணைக்கடவுளைத் தாம் வழி படவேண்டும் என்று இயற்கையிலேயே எழுந்த ஒரு விருப்பத்தால் 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லா' அக்கடவுளுக்கு 'ஆயிரத் திருநாமமும் ஆயிரத் திருவுருவமும்' கற்பித்து வணங்கி வருகின்

றனர். அந்தப் பல்வேறுவகைப்பட்ட கற்பனுருபங்களைத்தினும் இந்த அர்த்தநாரீச்வரரூபத்தினும், சிறந்ததும், உயர்ந்ததும், உண்மையுடையதுமான வேருேர் உருவம் இங்நாட்டிலேனும், வேறெந்நாட்டிலேனும் கருத்தளவில் கூட இருந்ததுமில்லை, இருக்கப்போவது மில்லையென்பது திண்ணம்.

உலக இயக்கத்தின் உண்மைக்காரணம்.—பிறவிப் பெருங்கடலை நீந்துதற்குத் திருவருள் சக்தியின் உதவி இன்றியமையாதது. நல்லொழுக்கத்தாலும் நற்செய்கைகளாலும், உண்மை ஞானம் உதிக்கப்பெற்று உலக விவகாரங்களிற் பற்றற்று உயர்கதி யடைதலில் உள்ளம் ஊன்றி அருந்தவம் புரிந்து குருவுபதேசம் பெறுதற்கேற்ற பக்குவம் வாய்ந்த பெரியோர்கள் அனைவரும், உலகன்னையாகிய பராசக்தியின் வசத்திலேயே தம்மை ஒப்பித்து அவள் எவ்வழி இயக்குகின்ருளோ அவ்வழியேசென்று முடிவில் முத்திப்பேறு பெற்றுள்ளார். எனெனில், அண்டசராசரங்கள் தோன்றும் முறையே தோன்றுவதும் ஒடுங்கும் முறையே ஒடுங்குவதும் அப் பராசக்தியால்தான். திருவருட் சக்தியின்றி ஒன்றுமே இயங்காது. இறைவனை வழிபடுதற்கும் இன்றியமையாத் துணையாவது இத்திருவருளே. இது பற்றியே ஸ்ரீமான் மாணிக்கவாசகரும் "அவன் அருளாலே அவன்ருள் வணங்கி" என்ருர். ஸ்ரீமத்

தாயுமான சுவாமிகள் 'கண்ணாடிபோல வெல்லாம் காட்டும் திருவருள்' என்றதும் இக்கருத்தைப்பற்றியே.

திருவருளோடுகூடிய இக்கடவுளே அண்டபிண்ட சராசரங்கள் அனைத்துமாவார். இங்ஙனம் எல்லாமும் சிவமேயானால் சிவத்தையன்றி ஆன்மா வேறன்றோ எனின், வேறேயாம். எல்லாமும் அல்லவுமாகி நிற்கின்ற இவ்வுண்மையைச் சுவாமிகள் ஆங்காங்குத் தெளிவாய் விளக்குகின்றனர். சுவாமிகள் பிரமத்தை அல்லது சிவத்தை அன்றி அன்னியமாகப் பிறிதொரு பொருளும் இல்லை என்ற ஏகான்மவாதக் கொள்கையுடையவர் என்பது சிலரது அபிப்பிராயம். அன்னார் அதற்காதாரமாகச் சுவாமிகள் பாடியுள்ள :

ஆதார வாதேய முழுதுநீ யாதலா லகிலமீ தென்னை யாட்டி
ஆடல் கண்டவனுநீ யாடுகின்ற வனுநீ யருளுநீ மௌன ஞான
தாதாவுநீ பெற்றதாய் தந்தைதாமுநீ தமருநீ யாவுநீகாண்

என்னும் இன்னோரன்ன செய்யுட்களைக் காட்டுவர். தத்துவ உண்மையின் ஒரு பகுதியை வலியுறுத்தச் சுவாமிகள் கூறிய திருப்பாடல்கள் முழு உண்மைக்கும் ஆதாரமாகா. இங்ஙனமே திருவள்ளுவர் முதலிய சான்றோரும் பொய்யாமை, கொல்லாமை, கள்ளாமை முதலிய அறவொழுக்கங்களைப் பற்றிக் கூறுமிடத்து

ஒவ்வொன்றையும் மற்றவற்றைவிடச் சிறப்பித்துக்கூறு தலைக் காணலாம். ஒன்றை வலியுறுத்தப் பிறவற்றைத் தாழ்த்திக் கூறுதலும் அல்லது கூருதொழிதலும் இயற்கையே. ஆயின் சுவாமிகளது கொள்கைதான் யாதோ எனின், அதனையும் சுவாமிகள் தெளிவாகப் பலவிடங்களில் எடுத்துரைத்துள்ளனர். ஓரிடத்துச் 'சித்தும் சடமும் சிவத்தைவிட இல்லை' என்கின்றார். அதாவது சிவபெருமானை அன்றி சித்துக்கும் சடத்துக்கும் இருப்பில்லை என்பதாம். மற்றோரிடத்து 'நீயன்றி நானோர்' என்கின்றார். அதாவது உன்னையன்றி எனக்கு இயக்கம் ஏது? என்பதாம். 'பார்க்கின்ற மலனோடு நீயே இருந்தி' 'சுத்தமும் அசுத்தமும,' 'தொந்தமும் நிர்த்தொந்தமும்' 'உயிர் நீ யாக்கையு நீ' என்னும் இவைபோன்ற கூற்றுக்கள், ஞானமுதிர்ச்சியால் எல்லாம் சிவமாகக்காணும் ஆன்றோர் தம் அனுபவ உரைகளாகக் கொள்ளற்பாற்று.

சுவாமிகள் தமது திருப்பாடல்களில் பலவிடங்களில், ஆன்மாவேறு கடவுள் வேறு, அதாவது பசு வேறு, பதிவேறு, ஆனால் கடவுளுக்கும், ஆன்மாவுக்கும், அகரத்துக்கும், மற்ற எழுத்துக்களுக்கும் உள்ள சம்பந்தம் எவ்வகைத்தோ அவ்வகைத்தான சம்பந்தம் ஒன்றுள்ளது என்பதைத் தெளிவாய் எடுத்துக் காட்டியுள்ளார்.

இஃதன்றியும், ஏகான்மவாதக் கொள்கையையும், அகம்பிரமஞானக் கொள்கையும் ஐயுறுதற்கிடமற்ற சொற்களால் கண்டிக்கின்றனர் :

சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
அல்லும் பகலும் அரற்றுவதென்—நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்கள் நாமில்லை யென்பரந்தோ
மோனமய மான முறை.

சுவாமிகள் ஏகான்மவாதக் கொள்கையுடைய ரல்லர் என்பதில் இன்னும் ஏதேனும் ஐயமுளதேல் அவ்வையமும், அவர் ஆன்மாவின் இலக்கணத்தைப் பற்றிக் கூறும் கூற்றால் அகலும். ஆன்மா, கடவுளின் ஒரு பகுதியல்ல, பரஞ்சோதியாகிய கடவுளிடத்திரு ந்து உதித்த ஒரு சுடர் அல்ல, சுடர்போன்றது மல்ல. மற்றென்னை யெனின் கடவுளின் திருவருளால் அறிவு விளக்கமுற்று பேரானந்தப் பேறெய்தவேண்டிய ஒரு தனிப் பொருளாகும் ஆன்மா என்பதே சுவாமிகள் கருத்து. இஃது 'ஆகார புவனம் சிதம்பர ரகசியம்—29' என்னும் பகுதியில் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

அருளுடைய பரமன்றோ அன்றுதானே
யானுளனென்றும் மெனக்கே யாணவாதி
பெருகுவினைக் கட்டென்றும் என்னூற்கட்டிப்
பேசியதன்றே யருளால்பேசிற் றன்றே

என்ற கூற்றை உற்று நோக்குக.

கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் ஒரு விஷயத்தில் ஒற்றுமையுண்டு. அதாவது, இரண்டும் மாயாகாரிய மாகிய சடம்போலாது அறிவுடைய சித்துப்பொருள் கள். ஆயினும் ஆன்மாவின் அறிவு பசியால் மூடப் பெற்ற பளிங்குபோல மாயையால் மூடப்பெற்றுள் ளது; மாயை நீக்கமுற நீக்கமுற விளக்கமுற்றுத் திக ழும். கடவுளின் அறிவு மாயையாற் பற்றக்கூடாதது; எஞ்ஞான்றும் விளக்கமுற்றுப் பொலிவது. ஆன்மா அறிவுடைத்தாயினும் கடவுளின் திருவருள் இன்றி விளக்கமுறாதாதலால், அதனை 'அறிவுப்பொருள்' என்று கூறுவதற்கும் சுவாமிகளுக்குச் சம்மதம் இல்லை.

சடப்பொருளாகிய மாயையைப்பற்றிச் சுவாமி கள் கருத்து யாதென்று காண்போம். மாயை என்பது ஒரு தனிப்பொருள். அது, செம்பிற் களிம்புபோல ஆன்மாவை அநாதி தொட்டே பற்றியுள்ளது என்னும் சித்தாந்தக் கொள்கை யுடையவராவர் சுவாமிகள்.

'மாயை என்பது சொன் மாத்திரையேயன்றி உண்மையில் உள்ள ஒரு பொருளல்ல' என்னும் கொள்கை யுடையவராவர் என்பர் சிலர். சுவாமிகள் கருத்து அதுவன்று. காரணமாகிய மாயையால் ஏற் பட்ட காரியமாகும் ஆன்மாவின் அறிவை மறைக்கும் அந்தகாரம். காரணம் உண்மையாயிருந்தபோதிலும்

அதனுல் உண்டாகும் காரியம் மாற்றப்படக் கூடிய தானுல் காரணம் இருந்தும் இல்லாததற்குச் சமான மேயாகும். எவ்வாறெனில் நட்சத்திரங்கள் உள்ளது உண்மையேயாயினும், சூரியவெளிச்சத்தில் அவை மறைபட்டு இல்லாமைக்குச் சமானமாகுமன்றே? அவ்வாறேயாம். மாயை இல்லை என்பதல்ல; திருவருளால் ஆன்ம அறிவு விளக்கமுற்றவிடத்து, அவ்வொளியில் அது தோன்றுவதில்லை.

ஆதலால் மாயை என்பது ஒன்றில்லை எனல் உபசார வழக்கேயாம். இறைவனும், ஆன்மாவும் எப்படி அநாதியோ, அப்படியே மாயையும் அநாதியே. ஆனுல் இந்த மாயை அல்லது பாசம், பதியாகிய இறைவனைப்பற்ருது; பசு எனப்படும் ஆன்மாவையே அநாதிதொட்டுப் பற்றியுள்ளது. ஆயினும் ஆன்மாவுக்கு இறைவன் இன்னருட் சம்பந்தம் உண்டாயின் அப்போது அப்பாசம் ஆன்மாவை விட்டு அகலும். இதனை:

> பதிபசுபாச மெனப்பகர்மூன்றில்
> பதியினைப்போல் பசுபாசம்அநாதி
> பதியினைச்சென் றணுகாபசுபாசம்
> பதியணுகிற் பசுபாசம்நிலாவே

என்ற திருமந்திரச் செய்யுளாலும் அறியலாகும்.

**சுவாமிகள் போதித்த முத்திநெறி.**—அல்லற் பிறப்பொழித்து ஆனந்த முத்திப்பேறு எய்துதற்குச் சுவாமிகள் காட்டும் நெறி மிகவும் சிறந்ததும் எளியதுமான தொன்றும். உண்மை உணர்தற்குக் குரு உபதேசம் இன்றியமையாதது. குரு உபதேசம் பெறுதற்கு முதலாவது சற்குரு ஒருவர் கிட்டவேண்டும். தடாகத்து நீரில் அமிழ்த்தப்பட்ட ஒருவன் அதை விட்டு வெளிவரவேண்டுமென்று எவ்வாறு ஆவலுறுவானே, அவ்வாறே பிறவித்துன்பத்தை நன்றுயறிந்து இப்பிறவியினின்றும் விடுபட்டுப் பேரானந்தப் பேறெய்த வேண்டுமென்ற கரைகடந்த ஆவல் ஒருவனுக்கு இருக்குமானல், அவனுக்குச் சற்குரு தாமே வந்தடைவார் என்பது ஆன்றோர் துணிபு. அவ்விதமான பேராவல் பிறப்பதற்கும் திருவருளின் துணை வேண்டும். திருவருள் கிட்டுவதற்கு, உலக முதற்காரணனை ஒரு கடவுள் உண்டென்று நம்பிக்கையும், அவரிடத்து மிகுந்த பக்தியும் வேண்டும். இவை யிரண்டும் விருத்தியாவதற்கு ஆன்றோர்களால் ஆலயங்களில் பிரதிஷ்டைசெய்து வைத்துள்ள திவ்ய திருமூர்த்தங்களைப் பயபக்தியுடன் வணங்கி வழிபடலும், ஸ்தல யாத்திரை செய்தலும், புண்ணிய நதிகளில் நீராடலும் ஆகிய இவைகள் சிறந்த சாதனங்களாய் நின்று பேருதவிபுரியும். எல்லோரும் கைக்கொண்டொழுகத்

தக்கதும், ஆன்மாவைப் படிப்படியாய் மேலேற்றுவது மான சிறந்த நெறி இதுவே. ஆனதுபற்றியே சுவாமி கள் :

மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தைசொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

என்றனர். இது நிற்க.

சகளோபாசனை. — ஞானநெறிநின்ற பெரியோ ரெல்லோரும், கடவுளைக் கண்ணுக்குங் கருத்திற்கு மெட்டா அருவப் பெரும்பொருள் என்கின்றனர். ஸ்ரீமான் மாணிக்கவாசகர் 'கண்முதற் புலனுல் காட் சியுமில்லோன்' என்கின்றனர். பட்டினத்தடிகள் 'எட் டுத்திசையும் எங்குமொன்ருய் முட்டித்ததும்பிமுளைத் தோங்குஞ் சோதி' என்கின்ருர். ஸ்ரீமத் சுவாமிகள் 'பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரி பூரணனந்தம்' என்கின்ருர். அவ்வாருக அவ்வகண்ட சச்சிதானந்தப் பரம்பொருள் பல்வேறு உருவுகொண் டுள்ளதெனக் கொண்டு அவ்வுருவங்களை விக்கிரகங் களாய் அமைத்து வணங்குதல் இழுக்கன்ருே? இழுக் காயின் சுவாமிகள் 'மூர்த்தி தலம் தீர்த்தம் முறை யாய்த் தொடங்கவேண்டு' மென்று போதிப்பதென்னை யென ஆராய்வாம். வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட அறுவகைச் சமயத்தோரும் ஆலயங்கள் தோறும் பிரதிஷ்டை செய்துவைத்து வணங்கும்

உருவங்களனைத்தும், பெரும்பாலும் இறைவன் அவ்வப்போது ஒவ்வோர் அன்பர்பொருட்டுக்கொண்ட அருட்கோலங்களேயாம். அகண்ட சொரூபனாகிய இறைவன் அன்பர்கள்பொருட்டுக் கண்ட உருவினனாய்க் கட்புலனுக்குத் தோற்றுவான் என்பது பொருந்துமோவெனிற் பொருந்தும். விறகில் வியாபித்து மறைந்துகிடைக்கும் தீ அவ்விறகினை ஒன்றோடொன்று தேய்த்தால் வெளிப்படுவதுபோலவும், பாலில் பரவி மறைந்துநின்ற நெய், அதனைக் காய்ச்சிக் கடைந்தால் வெளிப்படுவதுபோலவும், எங்கும் நிறைந்துள்ள இறைவன், அன்பென்னுங் கயிற்றால் கடைதலுற்றால் அப்போது ஓர் அருளுருக்கொண்டு வெளிப்பட்டுத் தோன்றுவன் என்பதே பக்தியிற்சிறந்த பெரியோரெல்லாம் அனுபவத்திற் கண்ட உண்மை. ஆனது பற்றியே:

> விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
> மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
> உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினான்
> முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே

என்ற திருவாக்கும் எழுந்தது. இங்ஙனம் வெளிப்பட்ட திருவுருவங்களையே, பின்னர் கல்லினாலும், செம்பினாலும் அமைத்து அவற்றை மிகவும் நுட்பமான கருத்துக்களுடன் கட்டப்பெற்ற ஆலயங்களில்

எழுந்தருளச்செய்து வணங்கி வருகின்றனர். அப்படி வணங்குவது அந்தக் கல்லையும் செம்பையுமல்ல; அவற்றாற் பெறப்படும் இறைவனையே என்று ஈண்டு உய்த்துணர்தல்வேண்டும். இத்துணையும் கூறியவாற்றால் சுவாமிகள் 'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கவேண்டு' மென்று போதித்தல் ஆன்றோர் காட்டிய உண்மைநெறி பற்றியும் ஆழ்ந்த கருத்துடனுமேயாம் என்பது தெளிவாகும்.

இனி, 'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு' உண்மை உணர்த்த ஒரு சற்குரு கிட்டுவார். அவரால் ஆன்ம விசாரம் செய்யப் புகுந்த போது தன் அறிவை மறைத்து இதுகாறும் தன்னை ஆணவாந்தகாரத்தில் அழுத்திவைத்தது 'நான்' என்ற அகங்காரமே என்பது புலப்படும். அந்த 'நான்' என்பதிலிருந்து வளர்ந்த மாயையே ஆன்மாவை மறைத்துவிடுகிறது.

"நானென்னு மோரகந்தை யெவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நாலுவாகித்
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பச்
சாகரத்தின் பெருமையெவர் சாற்ற வல்லார்
ஊனென்றும் உடலென்றும் கரண மென்றும்
உள்ளென்றும் புறமென்று மொழியா நின்ற
வானென்றுங் காலென்றுந் தீயீ டென்று
மண்ணென்றும் மலையென்றும் வனம தென்றும்"

"மலைமலையாங் காட்சிகண் காணுமை யாதி
மறப்பென்று நினைப்பென்று மாயா வாரி
யலையலையா யடிக்குமின்ப துன்ப மென்று
மதைவிளைக்கும் வினைகளென்று மதனைத் தீர்க்கத்
தலைபலவாஞ் சமயமென்றுந் தெய்வ மென்றுஞ்
சாதகரென்று மதற்குச் சாக்ஷி யாகக்
கலைபலவா நெறியென்றுந் தர்க்க மென்றுங்
கடலுறுநுண் மணலெண்ணிக் காணும் போதும்"
"காணரிய அல்லலெல்லாந் தானே கட்டுக்
கட்டாக விளையும்."

ஆதலால் மாயையினின்றும் நீங்குவதற்கு 'நான்' என்ற அகங்காரம் அற்று, இறைவனிடத்தில் மனம் பற்றவேண்டும். அதற்கு மனம் ஒரு முகப்பட்டு நிற்றல்வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தல் எளிதன்று. ஆனதுபற்றியே சுவாமிகள் 'பொல்லாத மர்க்கடமனம்' என்கின்றார். ஸ்ரீமத் சுவாமிகளே தம் மனத்தோடு ஊடாடியது கொஞ்சமல்ல.

கொள்ளிததேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனம் துள்ளுவதென் கண்டே

என்கின்றார். ஆதலால் மன ஒருமைப்பாடு எய்துவதற்கு விடாமுயற்சியும் திருவருட்டுணையும் இன்றியமையாதனவாம்.

மனத்தைத் தன்வசப்படுத்தி 'நான்' என்னும்

அகங்காரத்தை அறுத்து நின்றபோது ஞான உணர்ச்சி உண்டாகும்; அஞ்ஞானவிருள் அகலும். ஞானம் சித்தியானல் முத்தியின்பமும் சித்தியாகும். பக்தி, யோகம் முதலியன ஞானத்தை வருவிப்பதற்குச் சிறந்த சாதனங்களாய் இன்றியமையாதெனவே யாயினும் முடிவில் முத்தியை நேரே தருவது ஞானமேயாம். இதனைத் தெளிவாய் அறிவுறுத்தல் வேண்டிச் சுவாமிகள 'ஞானமலது கதிகூடுமோ' என்கின்றார்.

துன்பசாகரமாகிய பிறவியினின்றும் விடுபெறல் வேண்டிச், சரியை கிரியை யோகங்களால் ஞானம் கைவரப்பெற்று, அந்த ஞானத்தால் அடையும் முத்தி யின்பம் எத்தகைத்தோ எனின், அது மனவுணர்விற்கும் சொல்லளவிற்கும் எட்டாததொன்றும். சுவாமிகள் அது 'சொல்லாலே சொலப்படுமோ, சொல்லுந் தன்மை துரும்புபற்றிக் கடல் கடக்கும் துணிபேயன்றோ?' என்கின்றார். மற்றும் அதனை உணரும் வகைதான் எவ்வகையெனின், அந்த அனுபவநிலை வாய்க்கப்பெற்றார்க்கே அது விளங்கும். 'அதுவானல் அதுவாவார் அதுவே சொல்லும்.' ஆயினும் சுவாமிகள் தாம் குறித்துச்சென்ற அந்த முத்திநிலையின் உரையளவால் எத்துணை விளக்கமாக எடுத்துக் கூறக் கூடுமோ அத்துணை விளக்கமாகத் தம் செய்யுளில் எடுத்துரைத்துள்ளார்.

ஆன்மாக்கள் அவாவி அடைய வேண்டுவதாகச் சுவாமிகள் போதிக்கும் நிலை இந்நிலையே.

**சமயப்பற்று.**—சுவாமிகள், உண்மை ஞானத்திற் சிறந்தவரென்பது அவர் சமயக்கோட்பாட்டினாலேயே செவ்வனே விளங்குகின்றது. ஸ்ரீமான் மாணிக்க வாசகப் பெருமான் 'சமயவாதிகள் தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றி மலைந்தனர்' எனத் திருவாய்மலர்ந்தருளி யாங்குப் பலதிறப்பட்ட சமயத்தாரும் தம் தெய்வமே தெய்வம் என்று வாது வழக்கிட்டு நிற்பதை இஞ்ஞான்றும் காண்கிறோம். சுவாமிகளும் இதனைக்குறித்தே, 'தந்தெய்வம் எந்தெய்வம் என்றெதிர் வழக்கிடவும் நின்றதெது' என்றனர். இங்ஙனம் வழக்கிடுவது இயல்பாயுள்ளதாயினும் அது அவலம். ஆறுகள் பலவாயினும் அவை கூடுமிடம் கடல் ஒன்றேயாதல்போல சமயநெறிகள் பலவாயினும் அவையனைத்தும் முடிவில் ஏகபரிபூரணனான ஓர் இறைவனையே நாடிச் செல்கின்றன என்னும் சிறந்த கொள்கையுடையவராவர் சுவாமிகள்.

வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியி னதித்திரள்போல் வயங்கிற் றம்மா

என்ற இச்செய்யுளொன்றே சுவாமிகளது சமரசக்

கொள்கையை நிலைநாட்டப் போதிய சான்றும். இங்ஙனம் சமரசக்கொள்கை யுடையவரேயாயினும், சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகக்கொண்ட சைவ சமயத்தை மற்றைய வற்றினும் உயர்த்திக் கூறுவர். அதற்கு ஒருவகைக் காரணமும் அவ்வவ்விடங்களில் காட்டுவர். உதாரணமாகப் பின்வரும் செய்யுளைக் காண்க:

சைவசமயமே சமயஞ்சமயாதீதப்பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிக்காட்டு மிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே.

இங்ஙனம் சிவபக்தியிற் சிறந்தவராய்ச் சமரச சன்மார்க்க நிலை நின்றொழுகிய ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் தமது ஊனுடல் ஒழித்துச்சென்று நெடுங் காலமாயினும், அவரது நற்சரிதம், பிறவிப் பெருங் கடலில் விழுந்து கரைகாணாது தத்தளிக்கும் ஆன்ம கோடிகளுக்கு ஒரு கலங்கரை விளக்கம்போல் எக் காலத்தும் நின்று துலங்கி நற்றுணைபுரியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வாழி சோபனம் வாழிநல் லன்பர்கள்
சூழ வந்தருள் தோற்றமுஞ் சோபனம்
ஆழிபோலரு ளையன் மௌனத்தால்
ஏழை யேன்பெற்ற இன்பமுஞ் சோபனம்

சிவமயம்.

# சைவ சமய விளக்க வினாவிடை

## முதற் பிரிவு.

வினா. சைவமென்பதற்குப் பொருளென்ன?

விடை. சிவசம்பந்தமானது சைவம்.

வினா. சிவம் எத்தன்மையுடையது?

விடை. ஆதியந்தமில்லாததும், உருவருவில்லாததும், குணங்குறியில்லாததும், எங்கும் நிறைந்துள்ள பரிபூரணமானதும், தனக்குமேலொரு கடவுளில்லாததும், மனோவாக்குக் கெட்டாததும், விருப்பு வெறுப்பில்லாததும், உயிர்க்குயிராயிருப்பதும் இவை முதலான அளவிறந்த தன்மையையுடைய நிஷ்களப் பொருளாயிருக்கின்றது.

வினா. கடவுளொருவரிருக்கிறாரென்பதற்குச் சாக்ஷியென்ன?

விடை. அவரால் உண்டாக்கப்பட்ட உலகமே சாக்ஷியாயிருக்கின்றது. எப்படியெனில் இவ்வுலகம் தானே உண்டானதா, ஒருவராலுண்டாக்கப்பட்டதா

வென்று விசாரித்தால், உலகஞ்சடமாகையினாலே தானே உண்டாகமாட்டாது. ஆதலால் ஒருவரால் உண்டாக்கப்பட்டதென்று நிச்சயப்படும். இவ்வளவு பெரிய காரியஞ் செய்தவர் சர்வவல்லமையு முள்ளவ ராதலால் அவரே கடவுளென்று தெரியலாகும்.

வினா. இப்படி நிஷ்களப் பொருளாயிருப்பது உலகத்தை எப்படி உண்டாக்கும்? அன்றியும் அதை நாம் எப்படி பாவனை செய்து தொழுது துதிக்கலாம்?

விடை. நாம் பாவனைசெய்து, தொழுது துதித் துய்யும் பொருட்டு அந்தச் சிவம் சகளீகரித்துத் தனது திருவருளை பராசக்தி சொரூபமாக இடப் பாகத்தில் வைத்தருளி ஸ்ரீ கயிலாசபதியாய் வீற் றிருக்கின்றது. மேலும் சிருட்டி, திதி, சங்காரமென் னும் முத்தொழில் நடத்தும் பொருட்டும், பிர்மா, விஷ்ணு, ருத்திரனென்னுந் திருமூர்த்திகளாயு மிருக் கின்றது.

வினா. நிஷ்களப்பொருள் இத்தன்மையானதென் றுஞ், சகளப்பொருள் இத்தன்மையானதென்றும், நாம் தொழவேண்டிய கிரமமின்னதென்றும், எதனால் தெரிந் துக் கொள்ளலாம்?

விடை. வேத, ஆகம, புராண சாஸ்திரங்களால் தெரிந்துக் கொள்ளலாம்.

வினா. வேதங்களென்பன எவை?

விடை. இருக்கு, தைத்திரியம் (அல்லது யசுரு), சாமம், அதர்வணம் என்னும் நான்குமாம்.

வினா. இதுவுமன்றி இன்னும் வேதங்கள் உண்டா?

விடை. ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர் வேதம், காந்தருவவேதம் என உபவேதங்கள் நான்கும், மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என ஆறு வேதாங்கங்களும் உண்டு.

வினா. ஆகமங்களென்பனவெவை?

விடை. காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதகம், விஜயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானசர்வோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம் என்னும் இருபத்தெட்டுமாம்.

வினா. புராணங்களென்பன வெவை?

விடை. சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌஷியம், மச்சியம், மார்க்கண்

டேயம், பிரமாண்டம், நாரதீயம், பாகவதம், காருடம், வைணவம், பிரமம், பதுமம், பிரமகைவர்த்தம், ஆக்கி னேயம் என்னும் பதினெட்டுமாம்.

வி௵. இந்தப் புராணங்களிற் பிரிவுண்டோ?

விடை. சிவபுராணம், விஷ்ணுபுராணம், பிர்ம புராணம், சூரியபுராணம், அக்கினிபுராணம் என ஐந்து பிரிவுண்டு.

வி௵. சிவபுராண மென்பன வெவை?

விடை. சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌஷியம், மச்சியம், மார்க் கண்டேயம், பிரமாண்டம் என்னும் பத்துமாம்.

வி௵. விஷ்ணுபுராணமென்பன வெவை?

விடை. நாரதீயம், பாகவதம், காருடம், வைண வம் என்னும் நான்குமாம்.

வி௵. பிர்ம புராணமென்பன வெவை?

விடை. பிர்மம், பதுமம் என்னும் இவ்விரண்டு மாம்.

வி௵. சூரியபுராண மென்பது யாது?

விடை. பிர்ம கைவர்த்தம் என்பதாம்.

வி௵. அக்நி புராணமென்பது யாது?

விடை. ஆக்கிநேயம் என்பதாம்.

விஞ. இன்னும் இவைபோன்ற புராணங்க ளுண்டோ?

விடை. உபபுராணங்களென்றுண்டு.

விஞ. அவைகள் எவை?

விடை. உசனம், கபிலம், காளி, சனற்குமா ரம், சாம்பவம், சிவதன்மம், சௌரவம், தூர்வாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பராசரம், பார்க்கவம், ஆங்கிரம், மாரீசம், மானவம், வாசிட்டலிங்கம், வாருணம் என்னும் இப்பதினெட்டுமாம்.

விஞ. சாஸ்திரங்க ளென்பன வெவை?

விடை. வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாமிசை, உத்தரமீமாமிசை என் னும் இவ்வாறுமாம்.

விஞ. இவைகளிற் சைவ சமயத்துக்கே உரி யவை எவை?

விடை. மேற்கூறியவையெல்லாம் உரியவைகளே ஆயினும் ஆகமங்கள் சிறந்தவைகளாம்.

விஞ. இந்த ஆகமங்களில் சைவசமயத்தைக் குறித்து முக்கியமாகச் சொல்லுகிற விஷயம் யாது?

விடை, பதி, பசு, பாசங்களினிலக்கணத்தை யுஞ், சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு

பாதங்களின் முறைமையையுஞ், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சிய மென்னும் நான்கு பதத்தையும் இன்னும் அதற்குரிய அநேக விஷயங்களையுஞ் சொல்லு கின்றது.

விஞ. பதியாவது எது ?

விடை. மேற்கூறிய நிஷ்களப்பொருளே பதியாம்.

விஞ. பசு எத்தன்மையுள்ளதா யிருக்கின்றது ?

விடை. அளவிடற் கரியதும் நித்தியத்துவ முள்ளதும் மலவிருளி லழுந்தியிருப்பதும் பரமசிவனுடைய திருவருளா லிருவினைக்கீடான சரீரமெடுத்துப் பலவாகிய புவனபோகங்களை அநுபவித்து த ஞற் புண்ணிய பாவங்களைச் செய்து பிறப்பிறப்புள்ளதும் சிவபுண்ணியமேலீட்டால் இருவினை யொப்பு மலபரிபாக முண்டாகுங்காலத்தில் குருவருளாற் சிவத்தைச் சேர்வதுமா யிருக்கின்றது.

விஞ. பாசம் எத்தன்மை யுள்ளதாயிருக்கின் றது ?

விடை. ஏகத்துவமும், நித்தியத்துவமும் அளவிறந்த வல்லமையுள்ளதும், செம்பிற் களிம்புபோலச் சீவனைப்பபற்றி அறிவுமுழுவதையு மறைப்பதும், சிவ

புண்ணிய மேலீட்டால் பக்குவப்படுவதும், இரவி னிருளிலும் அதிக விருளாவதுமா யிருக்கின்றது. இரவினிருள் தன்னைக் காட்டிக்கொண்டு உலகத்தை மறைக்கும் ஆணவ இருளானது தன்னையுங் காட்டாமல் பதி, பசு, பாசங்களையுங் காட்டாமலிருப்பது.

வினா. சரியையாவதென்ன?

விடை. சிவாலயங்களிற் பயபக்தியுடனே திரு அலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், நந்தவனம் வைத்தல், பூமாலை தொடுத்துச் சாத்துதல், பூசனைபுரிதல், சிவதரிசனஞ்செய்தல், சிவனடியார்களுக்கு வந்தனை வழிபாடு செய்தலாம். (அலகு—துடைப்பம், மெழுக்கு—சாணம்.)

வினா. சரியையனுஷ்டித்தவர்கள் எப்பதத்தை யடைவார்கள்?

விடை. சாலோகபத மடைவார்கள்.

வினா. சாலோகபத மாவதென்ன?

விடை. சிவலோகத்திற் போயிருப்பது.

வினா. கிரியையாவதென்ன?

விடை. வேதாகம விதிப்படி பரமசிவனுக்குத் திருமஞ்சனஞ் செய்து நல்ல பத்திர புட்பங்களால் அருச்சித்துத் தூபதீப நிவேதனங்கள் செய்து அன்

புடன் தொழுது துதித்தலாம். இவ்வாறு கிரியை அநுஷ்டித்தால் சாமீபபதம் அடைவார்கள். சாமீப பத மென்னவெனில் பரமசிவனுக்குச் சமீபத்திலிருப்பது.

வினா. சிவபூசை செய்யத்தக்க மூர்த்தங்களெவை?

விடை. மானதம், மண்டலம், பலகையிலும், படத்திலும், சுவரிலும் எழுதிய சித்திரங்கள், விக்கிரக சொரூபங்கள், படிகலிங்கம், பாணலிங்கம், க்ஷணிக லிங்கம் இவை முதலியவும் பூசிக்கத்தக்க மூர்த்தங்களாம்.

வினா. மானத பூசையாவதென்ன?

விடை. மனதினாலே அபிஷேக முதலாகிய பூசையைப் பாவனையாகச் செய்தலாம்.

வினா. மண்டல பூசையாவதென்ன?

விடை. மண்டலேசுரரைப் பூசித்தலாம்.

வினா. க்ஷணிகலிங்க பூசையாவதென்ன?

விடை. பார்த்திபலிங்க பூசையாம்.

வினா. இந்தப் பூசைகளிற் சிறந்தது எது?

விடை. படிகலிங்க பூசையும், பாணலிங்க பூசையுமே சிறந்தது.

வி௵. பாணலிங்க மென்பவை யாவை?

விடை. பாணனென்னுமொரு அன்பனுலே பூசிக்கப்பட்டவைகளாம்.

வி௵. இவ்விலிங்க மெவ்விடத்தி லிருக்கின்றன?

விடை. கண்டகி யென்னும் நதியில் எடுக்க வெடுக்க மாருமலிருக்கின்றன.

வி௵. இந்தப் பூசைகளால் அடையும் பலனென்ன?

விடை. கங்கை முதலிய புண்ணிய நதிகளில் ஸ்தானஞ்செய்த பலனும், ஸ்தலங்கள் தோறுஞ் சென்று தரிசிக்கும் பலனும், சோடசதான பலனும், இருபத்தொரு யாகபலனுங் கிடைக்கும். மகாபாதகங்களெல்லாந் தீரும்.

வி௵. கங்கை முதலிய புண்ணிய நதிகளென்பன வெவை?

விடை. கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி என்னும் சப்த நதிகளும் சிந்து, தாமிரபருணி, கிருஷ்ணை, துங்கபத்திரி முதலிய நதிகளுமாம்.

வி௵. புண்ணிய ஸ்தலங்களென்பன வெவை?

விடை. திருஞானசம்பந்த சுவாமிகள், அப்பர்

சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் சமயாசாரிகள் திருப்பதிகம் பெற்று விளங்கும் ஸ்ரீகயிலாச முதலாகிய ஆயிரத்தெட்டு ஸ்தலங்களுமாம்.

வினா. மேற்கூறிய ஆயிரத்தெட்டு ஸ்தலங்களுக்கும் இப்போது பதிகங்களிருக்கின்றனவா?

விடை. 274 ஸ்தலங்களிருக்கின்றன. இந்த ஸ்தலங்கள் சோழநாட்டில், 190; பாண்டிநாட்டில், 14; மலைநாட்டில், 1; ஈழநாட்டில், 2; கொங்குநாட்டில், 7; நடுநாட்டில், 22; தொண்டைநாட்டில், 32; துளுவதேசத்தில், 1; வடக்கில், 5. இப்போது எத்தனை பதிகங்க ளிருக்கின்றனவெனில், 800 பதிகங்களாம். (இதன் விவரமெல்லாம் பின்னாலே காட்டப்படும்.)

வினா. சோடச தானமென்பன வெவை?

விடை. அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், பூதானம், இரணியதானம், கோதானம், உபயமுகிதானம், மகிஷிதானம், அஸ்வதானம், சுவேதாஸ்வதானம், காலதானம், காளமுகிதானம், மகமேருதானம், கற்பகவிருக்ஷதானம், வித்தியாதானம், மகாதான மென்னும் பதினாறுமாம்.

வினா. யாகம் இருபத்தொன்றாவது எது?

விடை. அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உக்தியம், சோடசி, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிரார்த்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆசுவயுசி என்னும் இருபத்தொன்றுமாம்.

வினா. மாகா பாதகங்களென்பன வெவை ?

விடை. கொலை, களவு, பொய், கள்ளருந்தல், குருநிந்தை என்னு மைந்துமாம். இந்தப் பாதகங்களால் நரகவேதனை உண்டாகும். பிறர் மாதரை இச்சித்தல், பிறர் செல்வத்தைக்கண்டு பொறாமை கொள்ளுதல், அப்பொருளை யபகரிக்க எண்ணுதல்; கோபம், கொடுஞ்சொல், மூர்க்கம், வஞ்சகம், ஒருவர் தனக்குச்செய்த உபகாரத்தை மறத்தல், சிநேகத்தைப் பிரித்தல், இரக்கமில்லாமை இவைகளாலும் நரக வேதனையுண்டாகும்.

வினா. யோகமாவதென்ன ?

விடை. பஞ்சேந்திரியங்களின் வழியிலே மனதைச் செல்லவொட்டாமல் ஒருவழிப்படுத்தி நிஷ்டைகூடியிருப்பதாம்.

வினா. அந்த யோகம் எத்தனை வகை?

விடை. இயமம், நியமம், ஆசனம், பிராணா யாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டாம்.

வினா. யோகத்தினாலடையும் பதமெது?

விடை. சாரூபபதம்.

வினா. சாரூபபதமாவதென்ன?

விடை. பரமசிவனைப்போல் சடைமுடி, காள கண்டஞ், சதுர்ப்புசம், திரிநேத்திரம் பெற்றிருப்ப தாம்.

வினா. ஞானமாவதென்ன?

விடை. ஞானாசாரியருடைய அனுக்கிரகத்தி னாலே அஞ்ஞானம் நீங்கிப் பதி பசு பாசத்தினுண் மையை யறிவதாம்.

வினா. அஞ்ஞான மெவ்வாறு நீங்கும்?

விடை. ஞானாசாரியார் தீக்ஷாக்கிரமத்தினால் தத் துவநேதி செய்யுமிடத்தில் நீங்கும்.

வினா. தத்துவங்களெத்தனை?

விடை. ஆத்தும தத்துவம், 24; வித்தியா தத் துவம், 7; சிவதத்துவம், 5; ஆக தத்துவம் 36.

வினா. ஆத்தும தத்துவங்களென்பன வெவை?

விடை. பூதங்கள் ஐந்து, புலன் ஐந்து, பொறி

ஐந்து, கருமேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நாலு என்னும் 24-மாம்.

வினு. வித்தியா தத்துவ மெத்தனை?

விடை. காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை என்னும் ஏழுமாம்.

வினு. சிவதத்துவ மெத்தனை?

விடை. சுத்த வித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என ஐந்துமாம்.

வினு. ஞானத்தினு லடையும் பதமெது?

விடை. சாயுச்சிய பதமாம்.

வினு. சாயுச்சிய பதமாவது எது?

விடை. பரமசிவனேடு கலத்தலாம்.

வினு. சரியை முதலாகிய நான்கிலும் மேலானது எது?

விடை. ஞானந்தான் மேலானது.

வினு. ஞானம் மேலானதாயிருக்க அதையனுஷ்டியாமல் மற்ற மூன்றையு மனுஷ்டிப்ப தென்ன?

விடை. அம்மூன்றையும் விதிப்படி அனுஷ்டித்தாலே ஞானம் விளங்கும்.

வினு. அதற்குப் பிரமாண முண்டா?

விடை. அம்மூன்றையும் அனுஷ்டித்து ஞானம் பெற்ற பெரியோர்கள் சொல்லியிருப்பதே அதற்குப் பிரமாணமாம்.

வினா. அவர்கள் சொல்லியிருப்பதென்ன?

விடை. மூர்த்திதலந்தீர்த்தம் முறையாத் தொடங்கினர்க்கோர், வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே; விரும்பு சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும், அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே; எனத் தாயுமானசுவாமி முதலானவர்கள் சொல்லியிருப்பதாம்.

முதற் பிரிவு முற்றிற்று.

## இரண்டாம் பிரிவு.

வினா. ஆலயங்களிலிருக்குஞ் சொரூபங்களினிடமாய்ப் பரமசிவன் ஏதாவது மகத்துவங் காட்டியிருக்கிறாரா?

விடை. புண்ணிய ஸ்தலங்களில் இருக்கும் ஆலயங்களிலே யெல்லாங் காண்பித்திருக்கிறார். ஆனால் சில புண்ணிய ஸ்தலங்களில் நடந்திருக்கிற மகத்துவமாத்திரம் பிரசித்தமாய் வழங்கப்பட்டிருக்கின்றது.

விஞ. எந்த ஸ்தலங்களில்?

விடை. திருக்கடவூரிலே மார்க்கண்டேயருக் காகச் சிவலிங்கத்தினிடமாய்த்தோன்றி நமனையுதை த்து அவருக்கு என்றும் பதினாறு வயதாக அருளிச் செய்தார். காளாஸ்திரியில் கண்ணப்பசுவாமிகளுக் குச் சிவலிங்கத்தி னிடமாகத் தரிசனங் கொடுத்து மோக்ஷமருளினார். திருவானைக்காவில் ஒரு சிலந்திப் பூச்சிக்கு சிவலிங்கத்தினின்றுந் தரிசனமாகி ஒரு ராஜனாகப் பிறக்கும்படி கடாக்ஷிக்க, அப்படியே சோழ வம்சத்திற் பிறந்த கோச்செங்கட் சோழநாயனாரென் பவர் அநேகத் திருப்பணிகள் செய்து அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரானார். காஞ்சீபுரத்தில் தம்மைக் கல்லாலெறிந்த சாக்கிய நாயனாருக்குச் சிவ லிங்கத்தினிடமாய்த் தரிசனமாகி மோக்ஷங்கொடுத் தருளினார். திருவிடைமருதூரில் வரகுணபாண்டிய ருக்குச் சிவலிங்கத்தினிடமாகத் தரிசனமாகி அனுக் கிரகஞ் செய்தருளினார். திருவிரிஞ்சைபுரத்தில் ஒரு சிறிய பிராமணப்பிள்ளை தம்மைப் பூசிக்கும்படி திரு முடி சாய்த்தருளினார். திருவாலவாயென்னும் மதுரை யில் அநேகருக்குத் தரிசனையாகி அனுக்கிரகஞ் செய் திருக்கிறார். இப்படி பூமியிலுள்ள புண்ணிய ஸ்தலங் களில் அன்பர்களை ரக்ஷிக்கும்படி அவர் காண்பித்

திருக்கிற மகிமையையெல்லாஞ் சொல்லவேண்டுமா னால் அளவுபடாது.

வினா. இவைகளெல்லாம் விபரமாக எதினாலறியலாம்?

விடை. சிவபுராணங்களா லறியலாம்.

வினா. பரமசிவன் அடியார்களுடைய பாவங் களை நீக்கி ரக்ஷிக்கும்பொருட்டு மனித வுருவமாகி ஏதாவது மகத்துவம் விளங்கச்செய்தாரா?

விடை. அநேகஞ் செய்திருக்கிறார். அவற்றிற் சில மாத்திரஞ் சுருக்கிச் சொல்லுகிறோம்.

வினா. அதென்ன?

விடை. மதுரையில், அவர் மனிதவுருவமான எல்லாம்வல்ல சித்தரென்னும் பெயரையுடையவராய் வந்தருளிக் கிழவர்களை குமரர்களாகச் செய்தும், மலடிகளை பிள்ளை பெறச் செய்தும், கூன் குருடு செவிடு ஊமை நீக்கியும் நொண்டிகளுக்குக் கால் கூடச்செய் தும் கல்லானை கரும்பு தின்னச் செய்தும் இன்னும் அநேக மகத்துவங்கள் விளங்கச் செய்தருளினார்.

வினா. இன்னும் என்ன மகத்துவம் விளங்கச் செய்தார்?

விடை. திருவண்ணாமலையில் சந்ததியில்லாமல்

நெடுநாளாக மன வருத்தப்பட்டுத் தமக்கு அன்போடு பணி செய்திருந்த வல்லாள ராயனுக்குக் குழந்தையாகிப் பிள்ளை கலித் தீர்த்தருளினார்.

திருவிரிஞ்சை புரத்தில் அம்மார்க்கமாகப்போன வைசியருக்கு வழித்துணையாய்ச் சென்று காப்பாற்றி மார்க்கசகாயரென்னுந் திருநாமம் பெற்றருளினார். திருநீலகண்ட நாயனாரிடத்துக்கு மனிதவுருவமாக எழுந்தருளி அவரும் அவருடைய பத்தினியாரும் கிழத்தன்மை நீங்கி இளமை யடையும்படி கிருபை செய்தருளினார். சிறுத்தொண்ட நாயனாரிடத்தில் வயிரவ சங்கம சொரூபமா எழுந்தருளி அவருடைய பிள்ளையைக் கறிசமைத்திடச் சொல்லி மறுபடியும் அந்தப் பிள்ளையைப் பிழைக்கும்படி செய்து அவர்களுக்கு மோக்ஷமருளினார்.

வினா. இப்படிக்கொத்த பெருங் கருணையுள்ள ஒன்றாகிய கடவுளை வேதாகம விதிப்படி அன்புடன் தொழுது துதித்துப் பேறுபெற்ற அடியார்களுண்டா?

விடை. அநேகரிருக்கிறார்கள்.

வினா. அவர்கள் யார்?

விடை. அறுபத்து மூன்று நாயன்மார்களும் மாணிக்கவாசக சுவாமி முதலானவர்களுமாம்,

வினா. அறுபத்துமூன்று நாயன்மா ரென்பவர்கள் யார்?

விடை. தில்லைவாழந்தணர், திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார், இளையான் குடிமாற நாயனார், மெய்ப்பொருள் நாயனார், விறல்மிண்ட நாயனார், அமர்நீதி நாயனார், எறிபத்த நாயனார், ஏனாதி நாயனார், கண்ணப்ப நாயனார், குங்கிலியக்கலய நாயனார், மானக்கஞ்சாற நாயனார், அரிவாட்டாய நாயனார், ஆனாய நாயனார், மூர்த்தி நாயனார், முருக நாயனார், உருத்திர பசுபதி நாயனார், திருநாளைப்போவார் நாயனார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், தண்டீச நாயனார், திருநாவுக்கரசு சுவாமிகள், குலச்சிறை நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார், காரைக்காலம்மையார், அப்பூதி நாயனார், நீலநக்க நாயனார், நமிநந்தி நாயனார், திருஞானசம்பந்த சுவாமிகள், ஏயர்கோன் கலிக்காம நாயனார், திருமூல நாயனார், தண்டியடிகள் நாயனார், மூர்க்க நாயனார், சோமாசிமாற நாயனார், சாக்கிய நாயனார், சிறப்புலி நாயனார், சிறுத்தொண்ட நாயனார், கழறிற்றறிவார் நாயனார், கணநாத நாயனார், கூற்றுவ நாயனார், புகழ்சோழ நாயனார், நரசிங்க முனையரைய நாயனார், அதிபத்த நாயனார், கலிக்கம்ப நாயனார், கலிய நாயனார், சத்தி நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், கணம்புல்ல நாயனார், காரி

நாயனார், நின்றசீர் நெடுமாற நாயனார், வாயிலா நாயனார், முனையடுவார் நாயனார், கழற்சிங்க நாயனார், இடங்கழி நாயனார், செருத்துணை நாயனார், புகழ்த்துணை நாயனார், கோட்புலி நாயனார், பூசல் நாயனார், மானியாரம்மை, கோச்செங்கட்சோழ நாயனார், நீலகண்ட யாழ்ப்பாண நாயனார், சடைய நாயனார், இசைஞானியார் நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலிய இவர்களே அறுபத்துமூன்று நாயன்மார்களாம். பொய்யடிமை யில்லாதார் பத்தராய்ப் பணிவார்கள் பரமனையே பாடுவார் சித்தந்தைச் சிவன்போலே வைத்தார் திருவாரூர்ப்பிறந்தார் முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் முழுநீறுபூசிய முனிவர் அப்பாலு மடிச்சார்ந்தார் என்னு மிவர்களுமாம். இங்குக் கூறப்பட்ட இவர்களில் அநேகர் மேற்கூறிய அறுபத்து மூவர்கள் தனித்தனி ஒவ்வொருவர் தில்லைவாழந்தணரென்னும் இம்மூவாயிரவரில் சுவாமியுமொருவர்.

வினா. அவர்களுக்குள் யாராவது மகத்துவங்கள் விளங்கச் செய்திருக்கிறார்களா?

விடை. திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய இம்மூவர்களும் அநேக மகத்துவங்கள் விளங்கச் செய்திருக்கிறார்கள்.

விஞ. மேற்சொல்லிய மூவர்களால் விளக்கப் பட்ட மகத்துவங்கள் என்ன?

விடை. திருஞானசம்பந்த சுவாமிகள் திருப் பாச்சிலாச்சிராம மென்னும் ஸ்தலத்துக் கெழுந்தரு ளினபோது, ஒரு ராஜ குமாரத்திக்குக் கண்டிருந்த குமரகண்ட வலியாகிய வியாதியைத் தேவாரமோதித் தீர்த்தருளினர். திருமருகலென்னுந் தலத்தில் பாம்பு கடித்து இறந்துபோன ஒரு செட்டிப் பிள்ளை பிழைக் கும்படி தேவாரம் ஓத அவன் விஷம் நீங்கிப் பிழைத் தான்.

கொங்குதேசத்திலிருக்குந் திருக்கொடிமாடச் செங்குன்றூரென்னுந் தலத்துக்கெழுந்தருளி அர்த்த நாரீசுவரரைத் தரிசித்து அவ்விடத்தில் சிலநாள் வசித்திருக்கையில், அந்தத் தேசத்தில் வருஷந்தோ றுங் காணுகிற நளிர்சுரம் திருக்கூட்டத்தாரையுந் தொடரவே சுவாமியைத் தொழுது பதிகமோதித் தீர்த்தருளினர். இதுவுமன்றி அத்தேசத்திலிருப்பவர் களையும் அவ்வியாதி எப்போதுந் தொடாமலிருக் கும்படியருளிச்செய்தார். அந்தத்தலத்துக் கிப்போது திருச்செங்கோடென்று பெயர் வழங்குகின்றது. மது ரைக் கெழுந்தருளினபோது பாண்டிய ராஜாவுக்குக் கண்டிருந்த சுரநோய் விபூதியினலே தீரும்படி திரு நீற்றுப்பதிகம் பாடியருளினர். அந்த ராஜாவுக்கிருந்த

கூன் நிமிரவும் பதிகம் அருளிச்செய்தார். திருக்கொள்ளம்பூதூரென்னுந் தலத்துக்கு அருகிலிருக்கிற ஆற்றிலே படகு தானே செல்லும்படி பதிகமோதி அருளினார். திருவோத்தூரென்னுந் ஸ்தலத்தில் ஆண்பனை பெண்பனையாய்க் காய்க்கும்படி பதிகமருளிச் செய்தார். திருமயிலையென்னுந் ஸ்தலத்தில் எலும்பு பெண்ணாகப் பதிகமருளிச்செய்தார்.

வினா. திருநாவுக்கரசு சுவாமிகள் என்ன மகத்துவம் விளங்கச் செய்தருளினார்?

விடை. திருநாவுக்கரசு சுவாமிகள் சமணசமயத்தார் சுண்ணாம்பு காள்வாயிலிட, சுவாமியைத் தியானித்துத் தேவாரமோதிப் பிழைத்திருந்தார். பாலில் விஷத்தைக் கலந்து கொடுத்தார்கள். அதை யுண்டு பரமசிவனுடைய திருவருளினாற் பழுதுபடாதிருந்தார். மிதிக்கும்படி யானையைச் செலுத்தினார்கள். அது சமணர்களையே கொன்றது; கற்றூணிற் கட்டிக் கடலிற் போட்டார்கள். பஞ்சாக்ஷரப் பதிகமோதிச் சாம்பவமூர்த்தி கிருபையினால் அத்தூணே தெப்பமாக மிதந்துவரத் திருப்பாதிரிப்புலியூருக்குச் சமீபத்தில் இருக்கிற கெடிலநதி முகத்துவாரத்தில் கரையேறினார். இந்தகாரணத்தினால் அந்தத்தலத்தில் சுவாமிக்குக் கரையேறவிட்டவரென்று பெயர். பாம்பு

கடித்திறந்துபோன திங்களூர் அப்பூதி நாயனாருடைய மூத்த பிள்ளை பிழைக்கும்படி தேவாரம் பாடியருளினார்.

வினா. சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்ன மகத்துவம் விளங்கச் செய்தார்?

விடை. திருப்புகலூரில் பதிகமோதிச் செங்கல் பொன்னாகப் பெற்றுக்கொண்டார். விருத்தாசலத்தில் சுவாமி தமக்குக் கொடுத்த பொருளையெல்லாம் மணிமுத்தாநதியிற் போட்டுத் திருவாரூர் கமலாலய தீர்த்தத்தில் எடுத்தருளினார். திருவையாறென்னும் ஸ்தலத்திற்குச் சேரமான் பெருமானுடன் போனபோது காவேரி வெள்ளம் புரண்டு வரக்கண்டு பதிகம் பாடியருளிக் குறுக்கே யணைபோட்டது போல வெள்ளம் நிற்கச்செய்தார். புக்கொளியூரவிநாசியில் தாமெழுந்தருளுவதற்குச் சில வருஷத்துக்குமுன் முதலையுண்ட பிராமணப் பிள்ளையைச் சென்ற வருஷத்துக்குத் தக்க வளர்ச்சியுடன் முதலையுமிழும்படி பதிகமோதினார்.

வினா. மாணிக்கவாசக சுவாமிகள் என்ன மகத்துவம் விளங்கச் செய்தருளினார்?

விடை. அரிமர்த்தன பாண்டிய ராஜனிடத்தில் மந்திரித் தலைவராயிருந்து அந்த ராஜனுடைய உத்திரவினாலே குதிரை கொள்ளப் போகும்போது கயிலாய

பதி திருப்பெருந்துறையில் குருந்தமரத்தினடியில் குருமூகூர்த்தமாய் எழுந்தருளியிருந்து ஞானோபதேசஞ் செய்தருளப்பெற்றுத் தம்பொருட்டு மதுரையில் சொக்கநாத சுவாமி, நரியைக் குதிரையாக்கிப் பாண்டிய ராஜனிடத்திற்குக்கொண்டுவரவும், பின்பு வைகை நதி வெள்ளம் பரவிவரச் செய்யவும், அந்த நதிக் கரையை யடைக்கும்படி மண்சுமக்கவுமான மகத்துவங் காண்பித்தருளினார். மேலும் சிதம்பரத்தில் வாது செய்த புத்தர்களைவென்று அந்தச் சமையத்துக் குட்பட்டிருந்த ராஜனுடைய குமாரத்தியாகிய ஊமைப் பெண்ணை பேசும்படி மகத்துவங் காண்பித்தருளினார்.

இப்படிக்கொத்த மகத்துவம் விளங்கச்செய்த திருஞானசம்பந்த சுவாமிகள், அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய இந்நால்வருக்கும் சமயாசாரிகளென்றும் திருநெறித் தலைவர்களென்றும் பெயர். இவர்கள் பாடியருளிய தேவாரங்களுக்கும் திருவாசகத்துக்குந் திருநெறித் தமிழ்வேதமென்றும், திருமுறையென்றும் பெயர். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்தது திருவாசகம்; மற்ற மூவர்கள் அருளிச் செய்தது தேவாரம்; சிதம்பரத்தில் நடேசமூர்த்தி யொரு பிராமணன்போலத் திருமேனி கொண்டுவந்து மாணிக்கவாசக சுவாமிகள் முன்னோதிய திருவாசகத்தையும்

நூதனமாகத் திருக்கோவையாருஞ் சொல்லும்படி கட்டளையிட்டுத் தமது திருக்கரத்தினு லெழுதினர்.

இரண்டாம் பிரிவு முற்றிற்று,

## மூன்றாம் பிரிவு.

### பராசக்தி சரித்திரம்.

வினு. பராசக்தியாகிய பார்வதியாரைத் தொழுது தோத்திரஞ்செய்து பேறுபெற்ற அடியார்கள் யார்?

விடை. மதுரை மீனாக்ஷியம்மை சந்நிதியில் ஒரு வித்தியாதர ஸ்திரீயானவள் அன்புடன் யாழ்வாசித்துத் தோத்திரஞ்செய்து மீனாக்ஷியம்மையையே தடாதகை யென்னும் பெயரோடு தனக்குப் புத்திரியாய் வரும்படி பேறுபெற்றாள்.

வினு. மீனாட்க்ஷியம்மை எப்படி புத்திரியாய் அவதரித்தாள்?

விடை. அந்த வித்தியாதர ஸ்திரீயானவள் ராஜ ஸ்திரீயாகப் பிறந்து காஞ்சனமாலை யென்னும் பெயர் கொண்டு மலயத்துவச பாண்டியன் மனைவியாய் வாழ்ந்துகொண்டிருக்கையில், புத்திரன் இல்லையென்

பதைக்குறித்து அந்தப் பாண்டிய ராஜன் யாகஞ் செய்ய, அதனிடத்திலிருந்து மூன்று வயது பெண் குழந்தையாக மீனாட்க்ஷியம்மை திருவவதாரஞ் செய்தருளினார்.

வினா. இன்னம் யாராவது இப்படி தொழுது பேறுபெற்றார்களா ?

விடை. கவுரியென்னும் ஒரு பிராமணப்பெண் தன் தகப்பன் தனக்குபதேசஞ்செய்த கவுரிமந்திரத்தையிடைவிடாம லன்புடன் சொல்லிப் பார்வதியைத் தொழுது துதித்துப் பரமசிவன் பார்வதியாருடன் ரிஷபவாகனரூடரா யெழுந்தருளிக் காக்ஷிகொடுத்தருளத் தரிசித்துக் கயிலாயத்திற்கு அவர்களுடன் போகும்படியான பேறுபெற்றாள்.

கவிராஜ பண்டிதரென்பவர் அன்புடன் தொழுது தோத்திரஞ்செய்து சவுந்தரியலகரிபாடிப் பேறுபெற்றார். அவ்வலகரியை இப்போது பத்தி சிரத்தையுடனோதுகின்றவர்களும் இஷ்டகாமியார்த்தங்களையடைகிறார்கள். அபிராமிபட்டரென்பவர் அன்புடன் தொண்டு செய்து அபிராமியந்தாதி பாடிப் பார்வதியாருடைய கிருபையினாலே அமாவாசை இராத்திரியில் சந்திரோதயமாகும்படி செய்து பேறுபெற்றார். இப்

படியாக அநேகம்பேர் தொழுது தோத்திரஞ் செய்து பேறுபெற்ருர்கள்.

வினு. இம்மாதிரியாக அடியார்களுக்குக் கிருபை செய்யும் பரமசிவனுக்கும் பார்வதியாருக்கும் புத்திரர்கள் இருக்கிருர்களா ?

விடை. விநாயகமூர்த்தியென்றும், சுப்பிரமணிய சுவாமியென்றும் இரண்டு புத்திரர்களிருக்கிருர்கள். இவர்களுமல்லால் வீரபத்திர சுவாமியும் புத்திரராம். புத்திரர்களென்று சொல்லப்பட்டாலும் சிவசொரூபமேயன்றி அன்னியமன்று.

வினு. விநாயகமூர்த்தியாகவந்த காரணமென்ன?

விடை. கயமுகாசுரனென்னும் அசுரனைச் சங்கரிக்கும் பொருட்டுத் திருவவதாரமானுர்.

வினு. விநாயகர் யானைமுகத்துடன் திருவவதாரஞ்செய்த காரணமென்ன ?

விடை. கயமுகாசுரன் தேவர்களாலும், பூதங்களாலும், மனிதர்களாலும், மிருகங்களாலும் இறவாவரம் பெற்றிருந்ததால் பல உருவமுங்கலந்த திருமேனிகொண்டவதரித் தருளிஞர்.

வினு. கயமுகாசுரன் வரலாறென்ன ?

விடை. மாகதனென்னும் ஒரு முனிவனுக்கு

விபுதையென்னும் ராக்ஷதஸ்திரி வயிற்றில் யானைமுகத்துடன் புத்திரனாகப்பிறந்து பரமசிவனை நோக்கித் தவஞ்செய்து தேவர்கள் எல்லோரும் தன்னேவல் கேட்கவும் தான் தேவர் முதலானவர்களாலும் எவ்வித ஆயுதங்களினாலும் இறவாமலிருக்கவும் வரம் பெற்றுக் கொண்டு இருந்தான்.

வினா. விநாயகர் எவ்வாறு திருவவதாரமானார்?

விடை. தேவர்கள் கயமுகாசுரனால் வருத்தப் பட்டுப் பரமேஸ்வரர் இடத்திற்குப்போய் முறையிட்டார்கள். அவர்களை இரட்சிக்கவேண்டுமென்கிற இரக்கத்தினால் பரமேஸ்வரர் பார்வதியாருடன் கயிலாசகிரிச்சாரலில் ஒருசோலையின் மத்தியில் இருக்கும் சித்திர மண்டபத்திற்கு எழுந்தருளினார்.

வினா. அதன் பின்பு நடந்ததென்ன?

விடை. அதில் எழுதியிருந்த சித்திரங்களில் ஒரு சித்திரமாயிருந்த சிவசத்தி பிரணவங்கள் பரமேஸ்வரருடைய அநுக்கிரகத்தினால் ஆண்யானை, பெண்யானை வடிவுமாய்ச்சேர அதனிடமாக யானை முகத்துடன் திருவவதாரமானார்.

வினா. கயமுகாசுரனை எவ்வாறு வதைத்தார்?

விடை. விநாயகமூர்த்தியானவர் பிரணவ சொரூபமாய்த் திருவவதாரஞ் செய்து கணங்களுக்குத்

தலைவராய்க் கணபதியென்னும் பெயருடன் கயிலாயத்தில் வீற்றிருக்கையில் கயமுகாசுரனால் வருந்திய தேவர்கள் யாவரும் போய்ப் பணிந்து முறையிட்டார்கள்.

வினா. அதன் பின்பு நடந்ததென்ன?

விடை. விநாயகமூர்த்தி திருவுளமிரங்கிக் கணங்கள் சூழ்ந்துவரும்படி சென்று கயமுகாசுரனுடன் போர்செய்து அவன் எவ்வகைப்பட்ட ஆயுதங்களாலும் இறவாமலிருக்கும்படி பெற்றுக்கொண்ட வரத்தையுணர்ந்து தமது திருமுகத்தில் வலப்புறத்திலிருக்கும் ஒரு கொம்பை யொடித்து எறிந்து வதைத்தார்.

வினா. அவன் அதன் பின்பு எப்படியானான்?

விடை. அவன் இறவாவரம் பெற்றவனாதலால் அந்தச் சரீரமாறிப் பெருச்சாளி வடிவங்கொண்டு போர்செய்ய வந்தான் அதைக்கண்ட விநாயகர் அதன் மேல் ஆரோகணித்துக்கொண்டார். இந்தக் காரணத்தினால் அவருக்கு மூஷிகவாகனனென்றும் ஒரு கொம்பொடித்தபடியால் ஒற்றைக்கொம்பனென்றும் பெயராகியது.

வினா. அவருக்கு ஆயுதங்களென்ன?

விடை. அங்குச பாசங்களாம். இவ்விரண்டு

அங்குசம் வலக்கரத்திலும் பாசம் இடக்கரத்திலும் இருக்கும்.

விஞ. மற்ருெரு வலக்கரத்தில் என்ன வைத் திருக்கிருர்?

விடை. தமது கொம்பிலொடித்த குறையை வைத்திருக்கிருர்.

விஞ. மற்ருெரு இடக்கரத்தில் என்ன வைத் திருக்கிருர்?

விடை. மோதகம் வைத்திருக்கிருர்.

விஞ. விநாயகரைத் தரிசிக்கிறவர்கள் தலையிற் குட்டிக்கொண்டு தோப்பணம் போடும்படியான காரணமென்ன?

விடை. கயமுகாசுரன் அதிகாரஞ் செலுத்திக் கொண்டிருக்கும்போது தேவர்கள் அவனிடத்திற்கு வருகையில் அப்படி செய்து கொண்டிருந்தார்கள். அவனை விநாயகர் வதைத்த பின்பு தேவர்கள் விநாயகரைப்பணிந்து குட்டிக்கொண்டு தோப்பணம் போட்டு இனி இப்படியே அடியேங்கள் வந்தனையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

விஞ. இன்னும் யாராவது இப்படி தொழுது வரம்பெற்ருர்களா?

விடை. இராவணனும் அகஸ்திய முனிவரும் அவ்வாறு தொழுதார்கள்.

வினு. இராவணன் தொழுததற்குக் காரண மென்ன?

விடை. இராவணன் ஸ்ரீ கயிலாசகிரியில் தவஞ் செய்து இலங்கைப்பட்டணம் அழியாமலிருக்கும் பொருட்டுப் பரமேஸ்வரர் ஒரு சிவலிங்கம் கொடுத் தருளப் பெற்றுக்கொண்டு வருவதைத் தேவர்களறி ந்து அதைத் தடுக்கவேண்டுமென்று விக்கிநேசுவர ரைத் துதித்தார்கள்.

வினு. அவரென்ன செய்தார்?

விடை. இராவணனுக்கு நீர் அதிகரிக்கும்படி வருணனை ஏவித் தாம் ஒரு சிறு பிராமணப்பிள்ளை போல் இராவணன் எதிரிற் சென்றார்.

வினு. அதற்குமேல் நடந்ததென்ன?

விடை. இராவணன் பிராமணப் பிள்ளையாய் வந்தவரைக் கண்டமாத்திரத்திலேயே அவருக்கு உப சாரஞ்சொல்லி நான் ஜலஸ்பரிசத்துக்குப்போய் வரு கிறவரைக்கும் இந்தச் சிவலிங்கத்தைப் பூமியில் வைக் காமல் கையிலே தானே வைத்துக்கொண்டிருமென்று சொன்னன்.

வினு. அந்தப் பிராமணப்பிள்ளை என்ன சொன்ஞர் ?

விடை. நான் சிறுபிள்ளையானபடியிஞலே இந்தச் சிவலிங்கத்தை நெடுநேரந் தாங்கிக்கொண்டிருக்கும் வல்லமை யில்லாதவஞயிருக்கிறேன். ஆதலால் மூன்றுதரம் அழைப்பேன், அதற்குள் வராவிட்டால் சிவலிங்கத்தைக் கீழேவைத்து விடுவேனென்று சொன்ஞர்.

வினு. அதற்குமேல் நடந்ததென்ன ?

விடை. இராவணன் சம்மதித்துச் சிவலிங்கத்தை அந்தப் பிராமணப்பிள்ளை கையில் கொடுத்து ஜலஸ்பரிசத்திற்குப் போயுட்கார்ந்தான்.

வினு. அதன்பின்பு விநாயக ரென்னசெய்தார் ?

விடை. போயுட்கார்ந்தவுடனே மூன்றுதரம் அழைத்து அவன் வராமையிஞலே சிவலிங்கத்தைத் தரையிலே வைத்துவிட்டார்.

வினு. இராவணன் என்ன செய்தான் ?

விடை. ஜலஸ்பரிசஞ் செய்துவந்து சிவலிங்கத்தைத் தரையில் வைக்கப்பட்டிருப்பதை நோக்கி விசனமுற்றவஞய்த் தன்னுடைய இருபது கைகளையுங்கொண்டு தூக்கிஞன். அந்தச் சிவலிங்கம் தூக்கப்படாமல் பசுவின் காதுபோலக் குழைந்துவிட்டது.

வினு. இப்போது அந்தச் சிவலிங்கத்திற்குப் பெயரென்ன?

விடை. இராவணனுல் தூக்கப்படாமல் மகா பலமுள்ளதா யிருந்தபடியினுலே அந்தச் சிவலிங்கத்திற்கு மகாபலலிங்கம் என்று பெயர். அந்தச் சிவலிங்கம் பசுவின் காதுபோலக் குழைந்தபடியினுலே அந்த ஸ்தலத்திற்குக் கோகர்னமென்று பெயர். கோ = பசு; கர்னம் = காது.

வினு. பின்பு இராவணன் வெறுமையாய் போய் விட்டானு?

விடை. அவனதிக கோபங்கொண்டு பிராமணப் பிள்ளை வடிவமாய் நிற்கிற விநாயகமூர்த்தி சிரசில் குட்டினுன்.

வினு. அவரென்ன செய்தார்?

விடை. இராவணன் குட்டவே மிகுந்த கோபத்துடன் தம்முடைய சொரூபங்கொண்டு துதிக்கையினுலே இராவணனைத் தூக்கியெறிந்து பந்தாடினுர்.

வினு. அவன் பிழைத்தானே இறந்தானே?

விடை. அவன் அதிக பராக்கிரமசாலியானதாலும், ஈஸ்வரவரம் பெற்றிருப்பவனுதலாலும் இறவாதவனுய் மிகுந்த வருத்தப்பட்டு, என்னையனே! தெரியா

மையால் அடியேன் செய்த பிழையைப் பொறுத்து இரட்சிக்கவேண்டுமென்று தோத்திரஞ்செய்தான்.

வினா. அதன் பின்பு நடந்ததென்ன ?

விடை. இராவணன் அப்படியே தோத்திரஞ் செய்ததினாலே விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து அவனைத் தரையில்விட்டு நீ நம்மைக் குட்டினபடியினாலே உன்னிருபது கைகளாலும் குட்டிக்கொள்ளென்று சொல்ல, அப்படியே குட்டிக்கொண்டு, விநாயகரைத் தோத்திரஞ் செய்து விடைபெற்றுக்கொண்டு இலங்கைக்குப் போய்ச்சேர்ந்தான்.

வினா. அகஸ்தியமுனிவர் தொழுதற்குக் காரணமென்ன ?

விடை. தேவேந்திரன் சூரனுக்குப் பயந்து சுவர்க்கலோகத்தைவிட்டுச் சீகாழியில் வந்து பரமசிவனைப் பூசிப்பதற்காக ஒரு நந்தவனம்வைத்து அது மழையில்லாமல் உலர்ந்துபோகவே மனவருத்தமுற்றான்.

வினா. பின்பு நந்தவனம் எவ்வாறாயிற்று ?

விடை. தேவேந்திரன் மனவருத்தமுற்றிருக்கையில் நதிப்புனல் வந்து பாயுமானால் நந்தவனந் தழைத்து பூசைக்குவேண்டிய மலர்களைத் தருமென்று சிவகிருபையினாலே அசரீரி வாக்குண்டாகியது.

வினா. நதிப்புனல் எவ்வண்ணம் வந்து பாய்ந்தது?

விடை. தேவேந்திரன் ஜீவகாருண்ணியத்தினால் உண்டான அசரீரி வாக்கைக்கேட்டுச் சந்தோஷமுற்றிருக்கையில் நாரதமுனிவர் வந்து நதிவருவதற்குபாயஞ் சொன்னார்.

வினா. என்ன உபாயஞ் சொன்னார்?

விடை. தேவேந்திர மகாராஜனே, கயிலையங்கிரியில் அகஸ்தியமுனிவர் வந்திருக்கிறார். அவர் கமண்டலத்தில் காவிரிநதி இருக்கின்றது. நீ விநாயகமூர்த்தியைப் பிரார்த்தித்தால் அந்த நதி வந்து பாயுமென்று சொன்னார்.

வினா. அதன் பின்பு நடந்ததென்ன?

விடை. நாரதமுனிவர் சொன்னபடி தேவேந்திரன் விநாயகமூர்த்தியைப் பிரார்த்தித்தான்.

வினா. விநாயகர் எவ்வாறு அருளிச்செய்தார்?

விடை. விநாயகர் காக்கை வடிவங்கொண்டு அகஸ்தியர் கமண்டலத்தின்மேல் உட்கார்ந்து கவிழ்த்துவிட்டார். அந்த நதிப்புனல் தேவேந்திரன் நந்தவனத்தில் வந்து பாய்ந்தது.

வினு. அதற்குமேல் அகஸ்தியர் என்னசெய்தார்?

விடை. காக்கை வடிவங்கொண்டு கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்ட விநாயகர் ஒரு பிராமணப் பிள்ளை வடிவங்கொண்டு தமக்கு எதிரில் வருகையில் தம்முடைய கையினுல் அந்தப் பிராமணப் பிள்ளையின் தலையிற் குட்டப்போனுர்.

வினு. பின்பு நடந்ததென்ன ?

விடை. அம்முனிவர்க் கெட்டாமல் வளைய வளையவோடி, இளைக்கச்செய்து பின்பு தம்முடைய சொரூபத்துடனே நின்ருர். அதைக்கண்ட அகஸ்திய முனிவர் பயந்து சாஷ்டாங்கமாகச் சேவித்து விநாயகரைத் தோத்திரஞ்செய்து அவர் கட்டளையின்படி குட்டிக்கொண்டு வேண்டிய வரங்களையும் பெற்று பொதிகைமலைக்குப் போய்விட்டார். நந்தவனம் தழைத்துப் பூசைக்கு வேண்டிய மலர்களைத்தர, தேவேந்திரன் பரமசிவனைப் பூசித்துத் தன்னுடைய செல்வத்தைப் பெற்றுக்கொண்டான்.

வினு. பரமசிவனுக்குப் பார்வதியென்கிற சக்தியிருப்பதுபோல விநாயகருக்குச் சக்தியுண்டா ?

விடை. சித்தி புத்தியென்கிற சக்திகளோடுகூடி சித்திபுத்தி விநாயகரென்றும், வல்லபையென்கிற சக்தி

யோடுகூடி வல்லபை கணபதியென்று மிருக்கிறார். இந்த விபரம் புராணங்களால் விளங்கும்.

வினா. விநாயகருக்குறிய விரதங்களுண்டா?

விடை. உண்டு.

வினா. எந்ததினத்தில் விரதமிருக்கவேண்டியது?

விடை. சதுர்த்தி திதியில் விரதமிருக்க வேண்டியது.

வினா. இந்ததினத்தில் விசேஷமா யனுஷ்டிப்பது முண்டா?

விடை. ஆவணி மாதத்தில் வரும் பூர்வபட்ச சதுர்த்தியில் விசேஷமா யனுஷ்டிப்பதுண்டு. இதுவுமன்றி அங்காரக சதுர்த்தி, சங்கட சதுர்த்தி என விசேஷமாக அனுஷ்டிக்கிற காலங்களுமுண்டு.

வினா. விநாயகமூர்த்தியைத் தொழுது பேறுபெற்ற அடியார்கள் யார்?

விடை. புருசுண்டமகாரிஷி முதலான ரிஷிகள் விநாயகரைத் தொழுது பேறு பெற்றிருக்கிறார்கள். இவர்களுமல்லாமல் திருநாரையூர் நம்பியாண்டார், திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட சிவசாரியார் நம்பி, ஔவையார் மற்றும் அநேகம்பேர் தொழுது பேறு பெற்றிருக்கிறார்கள்.

வினு. எந்தக்காரியஞ் செய்யத்தொடங்கினுலும் விநாயகபூசை முதலில் செய்வதெதனுலே ?

விடை. அவர்கள் செய்யுங் காரியங்களுக்கு விக்கினம் வராமல் காப்பாற்றுகிற கடவுளாகையால் விநாயகரை முதலில் பூசிக்கிறது. இந்தக் காரணத்தினுல் அவருக்கு விக்கினேசுவரரென்கிற பெயருண்டாயிருக்கின்றது.

வினு. அவரை எந்தவிடத்திலும் ஸ்தாபித்துப் பூசிக்கலாமா ?

விடை. பூசிக்கலாம். ஆனுல் வன்னி விருக்ஷத்தினடியிலும், மந்தார விருக்ஷத்தினடியிலும் ஸ்தாபித்துப் பூசிப்பது விசேஷமாம். சமியென்கிறவள் ஒரு ரிஷியினுடைய புத்திரி, மந்தாரனென்பவன் ஒரு ரிஷியினுடைய புத்திரன். இவர்களிருவரும் தம்பதிசமேதராய் ஒரு வனத்தில் செல்லுகையில் விநாயகர் சாரூபம்பெற்ற புருகண்டமகாரிஷியைக்கண்டு நிந்தித்து அவருடைய சாபத்தினுல் சமிவிருக்ஷமும் மந்தார விருக்ஷமுமானுர்கள்.

வினு. பின்பு அவர்களுக்கு அந்தச் சாபம் நீங்கவில்லையா ?

விடை. அந்த மரவுருவம் நீங்கினதில்லை. ஆனுல் விநாயகரை அந்த மரங்களினிழலில் ஸ்தாபித்து

விசேஷமாகப் பூசிக்கவும், அந்த பத்திர புஷ்பங்கள் அவருடைய அற்சனைக்கு யோக்கியமாகவும் வறம் பெற்றார்கள்.

(சமியென்றாலும் வன்னியென்றாலும் ஒரே பொருள்தான்.)

வினா. விநாயகரை வீடுகள்தோறும் வைத்து பூசிப்பதற்குக் காரணமென்ன?

விடை. அவருடைய பன்னிரண்டு திருவவதாரத்தில் ஒரு திருவவதாரம் காசிபட்டணத்தில் எல்லோருடைய வீட்டிலும் ஏககாலத்தில் விருந்தமுது கொண்டருளினார். அன்று முதல் யாவரும் அவரவர்கள் வீடுகள்தோறும் வைத்துப் பூசிக்கும்படி அனுக்கிரகஞ் செய்தருளினார்.

விநாயகர் சரித்திரம் முற்றிற்று.

## சுப்பிரமணியர் சரித்திரம்.

வினா. சுப்பிரமணியர் திருவவதாரமானதற்குக் காரணமென்ன?

விடை. சூரபத்மன் முதலாகிய அசுரரை வதைத்துத் தேவர்களை இரட்சிக்கும் பொருட்டு அவதாரஞ் செய்தார்.

வினு. எவ்வாறு அவதாரஞ் செய்தார்?

விடை. இந்திரன் முதலிய தேவர்களெல்லோரும் சூரபத்மனுல் வருந்திக் கயிலாயத்திலே போய்ச் சுவாமி சன்னதியில் முறையிட, கயிலாயபதி கிருபை கூர்ந்து சுப்பிரமணியர் திருவவதாரமாக வேண்டுமென்று திருவுளமாகி ஆறுமுகங்கொண்டிருக்க ஆறு நெற்றிக் கண்களினுமிருந்து ஆறு தீப்பொறி உண்டாகியது. அந்தப்பொறிகளைச் சரவணப்பொய்கையில் கொண்டுபோய் விடும்படி அக்கினி தேவனுக்கும் வாயு தேவனுக்கும் கட்டளையிட, அவர்கள் தாங்கிக்கொண்டு போய்ச் சரவணப்பொய்கையில் விட்டார்கள்.

வினு. பின்பு நடந்ததென்ன?

விடை. கயிலாய பதியினுடைய கிருபையினுலே ஆறுபொறிகளும் ஆறு குழந்தைகளாகிக் கார்த்திகை நக்ஷத்திரங்களாகிய ஆறுமாதர்களின் முலைப்பாலுண்டு, பார்வதியார்வந்து எடுக்கையில் ஆறு திருமுகமும் பன்னிரு புயமுமுள்ள ஒரு திருமேனிகொண்டு முருகன், கார்த்திகேயன், காங்கேயன் என்னுந் திருநாமம்பெற்று வளர்ந்தன.

வினு. அந்தப் பெயர் வந்ததற்குக் காரணமென்ன?

விடை. இளமை மாரு திருப்பதினுல் முருக

னென்றும், கார்த்திகை நக்ஷத்திரத்தின் பாலுண்டு புத்திரனானதினால் கார்த்திகேய னென்றும், கங்கையில் வளர்ந்து புத்திரனானதினால் காங்கேயனென்றும் பெயர் வந்தது.

வினா. இந்தத்திருநாமங்கள் பெற்ற சுப்பிரமணியக்கடவுள் அதன்பின்பு என்ன செய்தார்?

விடை. தம்முடைய சகோதரர்களாகிய லக்ஷத்தொன்பது வீரர்களோடு கூடிக்கொண்டு பற்பல அற்புதமான திருவிளையாடல் செய்தார்.

வினா. அந்த வீரர்களுண்டான தெப்படி?

விடை. கயிலாயபதியினுடைய நெற்றிக் கண்களிலிருந்து தீப்பொறிகள் சிந்தினபோது பார்வதியார் பயந்து ஓடினார். அப்படி யோடுகையில் பார்வதியின் திருவடிகளில் அணிந்திருக்குஞ் சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்க, அவ்விரண்டிலிருந்தும் நவரத்தினங்கள் சிந்தின.

வினா. அதன் பின்பு நடந்ததென்ன?

விடை. அந்த நவரத்தினங்களில் பார்வதியாருடைய திருவுருவந்தோற்றி, அவ்வுருவம் ஒன்பது ஸ்திரீகளாகி, சுவாமியினுடைய திருவருளால் கர்ப்பமடைந்தார்கள்.

வி௲. அதன் பின்பு நடந்ததென்ன ?

விடை. அதனைப் பார்வதியார் கண்டு, கோபங் கொண்டு, கர்பம் உற்பத்தியாகாமல் இருக்கும்படி சபிக்கையில் அவ்வொன்பது ஸ்திரீகளும் பயந்த போது சரீரத்தில் உண்டான வேர்வையில் லக்ஷம் வீரர்கள் உற்பத்தியானார்கள்.

வி௲. அவர்கள் வயற்றிலிருந்து கர்பம் உற்பத்தியாகவில்லையா ?

விடை. சிலகாலஞ் சென்றபின்பு பார்வதியின் அனுக்கிரகத்தினால் வீரவாகு முதலான நவவீரர்கள் உற்பத்தியானார்கள்.

வி௲. அவர்கள் பெயரென்ன ?

விடை. வீரவாகு, வீரகேசரி, வீரமயேந்திரன், வீரமகேசுவரன், வீரமாபுரந்தரன், வீரராக்கதன், வீர மார்த்தாண்டன், வீரராந்தகன், வீரதீரன் என்பவர் களாம்.

வி௲. சுப்பிரமணியர் பின்பு என்னசெய்தார் ?

விடை. கயிலாயபதியினுடைய கட்டளையின் படி மேற்சொல்லிய வீரர்களும் இரண்டாயிர வெள் ளம் பூதகணங்களும் கூடவரும்படி ரதாரூடராகப் பூலோகத்தில்வந்து கிரவுஞ்சகிரியையும், சூரனுடைய தம்பியான தாருகனையும் வதைத்தார்.

வினா. அதன் பின்பு என்னசெய்தார்?

விடை. திருச்செந்தூரிலெழுந்தருளி, பின்பு சூரனுக்குப் புத்திசொல்லும்படி வீரவாகு தேவரைத் தூதாக அனுப்பி, அவன் அகங்காரத்தை அறிந்து கொண்டு, அங்கிருந்து புறப்பட்டுச் சேனைகளுடன் வீரமயேந்திரபுரிக்குப்போய் யுத்தஞ்செய்து வீரவாகு தேவரால் சூரனுடைய மகனாகிய பானுகோபனைக் கொல்வித்துச் சூரன் தம்பியாகிய சிங்கமுகனையும் சூரனையும் தமது வேலாயுதத்தால் வதைத்தருளினார்.

வினா. பின்பு என்ன செய்தார்?

விடை. திருச்செந்தூரினின்றும் எழுந்தருளி வீரவாகு முதலாகிய துணைவர்களும் மற்றவர்களுஞ் சூழ்ந்துவரும்படிச் சென்று, திருப்பரங்குன்றென்னும் ஸ்தலத்திற்போய்ச் சேர்ந்தார்.

வினா. அங்கே நடந்ததென்ன?

விடை. தேவேந்திரன் தன் புத்திரியாகிய தெய்வானையை விவாகஞ் செய்துகொள்ளும்படி விண்ணப்பஞ்செய்ய, கிருபைகூர்ந்து திருக்கலியாண மகோற்சவங் கொண்டருளினார்.

வினா. அதன் பின்பு அந்த ஸ்தலத்தில்தான் யிருந்தாரோ?

விடை. அங்கிருந்தெழுந்தருளி ஸ்கந்தகிரியிற் போய்ச் சேர்ந்து, தெய்வானை சமேதராய் வீற்றிருந்தார்.

வினா. அவ்விடம் விட்டு எங்கும் எழுந்தருளவில்லையோ?

விடை. அங்கிருந்து வள்ளிமலைக் கெழுந்தருளி, குறவர் வீட்டில் வளர்ந்துகொண்டிருந்த வள்ளிநாச்சியாரை விவாகஞ் செய்துகொண்டருளித் திருத்தணிகையில் வந்து வீற்றிருந்து மறுபடியும் ஸ்கந்தகிரில் எழுந்தருளி வீற்றிருந்தார்.

வினா. சுப்பிரமணிய சுவாமிக் குறிய விரதங்களெவை?

விடை. கார்த்திகை நக்ஷத்திரமும், சஷ்டி திதியுமாம்.

வினா. அவரைத்தொழுது பேறு பெற்றவர்கள் யார்?

விடை. நாரதர் முதலாகிய முனிவர்களும், முசுகுந்த சக்கரவர்த்தி முதலாகிய அரசர்களுமாம்.

வினா. இந்த யுகத்திலே தொழுது பேறுபெற்றவர்கள் யார்?

விடை. நக்கீரதேவர், அருணகிரிநாதர் முதலாகிய சிலர் பேறுபெற்றார்கள்.

வினா. அவர் அடியார்களுக்கு அருள் செய்யும் பொருட்டுத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களெவை ?

விடை. திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, திருச்செந்தூர், திருவேரகம், சோலைமலை, குன்றுதோறாடல் ஆகிய ஸ்தலங்களும் மற்றும் அநேக ஸ்தலங்களுமாம்.

வினா. வீரபத்திரசுவாமி திருவவதாரமானதற்குக் காரணமென்ன ?

விடை. கயிலாயபதியாகிய பரமேசுவரனை மதியாமல் தக்கனென்பவன் ஒரு யாகஞ்செய்தான். அந்த யாகத்தை அழிக்கும் பொருட்டு பரமேஸ்வரன் திருவுளங்கொள்ள அவருடைய நெற்றிக் கண்ணினிடமாகத் திருவவதாரமானார்.

வினா. வீரபத்திரர் அந்த யாகத்தை எப்படி அழித்தார் ?

விடை. பூதப்படைகளோடுபோய் அங்கிருந்த தேவர்களையெல்லாம் அதப்படுத்தித், தக்கன் தலையையறுத்து யாகத்தை அழித்தார்.

வினா. பின்பு அந்தத் தக்கன் பிழைக்கவில்லையோ ?

விடை. பரமேஸ்வரன் கிருபையினாலே பிழைத்தான். ஆனால் ஆட்டுத்தலை பெற்றுப் பிழைத்தான். இச்சரித்திரங்கள் புராணங்களால் விவரமாக விளங்கும்.

## சிவதரிசன விதி.

வினா. சிவதரிசனஞ் செய்யவேண்டிய முறைமை யெப்படி ?

விடை. முதல் விநாயகமூர்த்தி, 2. மூலலிங்கம், 3. சபாபதிமூர்த்தம், 4. சோமாஸ்கந்தமூர்த்தம், 5. பரிவாரதேவர்கள், 6. மூலஸ்தான அம்மை, 7. சண்டேசுரவரர், 8. பயிரவர். இந்த விதிப்படி தரிசிக்கவேண்டும். ஆனால் முதல் விநாயக மூர்த்தியைத் தரிசித்தவுடன் நந்திதேவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மூலலிங்க முதலாகத்தரிசிக்கவேண்டும்.

வினா. சோமாஸ்கந்த மூர்த்த மென்பதற்குப் பொருளென்ன ?

விடை. உமையவளோடும் ஸ்கந்தரோடும் கூடியிருக்கிற மூர்த்தமென்பதாம். அந்த மூர்த்தம் நாயகரென்றுஞ் சொல்லப்படுகின்றது.

வினா. பரிவாரதேவர்கள் யார் ?

விடை. இருபத்தைந்து மூர்த்தங்களில் சபாபதியும், சோமாஸ்கந்த மூர்த்தமும் தவிர, சந்திரசேகரர் முதலிய இருபத்துமூன்று மூர்த்தமாம். இதுவுமன்றி லிங்கோற்பவம், தக்ஷிணமூர்த்தம், பிரமதேவன், விஷ்ணு, துர்க்கி, சாஸ்த்தா, சுப்பிரமணியர், வீரபத்திரர், நவக்கிரகங்கள், வாமாதி அஷ்டசக்திகள், பரமேசுரர்களுமாம்.

வினா. எப்புறத்திலிருந்து தரிசிக்கவேண்டும்?

விடை. கிழக்கு நோக்கிய சந்நிதியானால் சிவபெருமானுடைய வலப்பாகமாகத் தென்புறத்தில் நின்று தரிசிக்கவேண்டும்.

வினா. தெற்கு நோக்கிய சந்நிதியானாலோ?

விடை. தெற்கு நோக்கிய சந்நிதியானால் சிவபெருமானுக்கு வலப்பாகமாக மேற்புறத்தில் நின்று தரிசிக்கவேண்டும்.

வினா. மேற்கு நோக்கிய சந்நிதியானாலோ?

விடை. சிவபெருமானுக்கு இடப்பாகமாகவே தென்புறத்தில் நின்று தரிசிக்கவேண்டும்.

வினா. வடக்கு நோக்கிய சந்நிதியானாலோ?

விடை. சிவபெருமானுக்கு இடப்பாகமாகவே மேற்புறத்தில் நின்று தரிசிக்கவேண்டும்.

வினா. துஜஸ்தம்பத்தினிடத்தில் பணியவேண்டிய கிரமம் எப்படி?

விடை. கிழக்கு நோக்கிய சந்நிதியானால் பலிபீடத்தின் அக்கினிமூலைக்கு எதிராக சமீபத்தில் சிரசு வைத்து மார்பு பூமிலே படும்படி, இரண்டுகைகளையும் வடக்காக நேரேநீட்டிப் பின்பு தோல்களிலே மண் படும்படி, இரண்டு கைகளையும் தெற்கே நீட்டி, இரண்டு காதுகளையும் பூமிலே பொருந்தச்செய்து அஷ்டாங்க வந்தனஞ் செய்யவேண்டும். கைகளை தெற்கே நீட்டும்போது முன்னதாக வலக்கை நீட்டி, பின்பு இடக்கை நீட்டவேண்டும். காது மண்ணில் பொருந்தச் செய்யும்போதும் முந்தி வலக்காலும் பிறகு இடக்காலும் பொருந்தவேண்டும்.

வினா. தெற்கு நோக்கிய சந்நிதியில் பணியவேண்டிய முறைமை எப்படி?

விடை. தெற்கு நோக்கிய சந்நிதியானால் பலிபீடத்தினிருதிமூலையில் முன்சொன்ன முறைமைப்படி சிரசுவைத்து நமஸ்காரஞ் செய்யவேண்டும்.

வினா. மேற்கு நோக்கிய சந்நிதியானாலோ?

விடை. அந்தச் சந்நிதியிலும் பலிபீடத்தினிருதிமூலையில் முன் சொன்னபடி சிரசுவைத்துப் பணியவேண்டும்.

வினா. வடக்கு நோக்கிய சந்நிதியானாலோ ?

விடை. வடக்கு நோக்கிய சந்நிதியானால் பலி பீடத்தின் வாயுமூலையில் சிரசுவைத்துக் காலை மேற்காக நீட்டி முன்சொன்னபடி பணியவேண்டும். ஆனால் பகல் பதினைந்து நாழிகைக்கு மேற்பட்ட காலத்தில் தரிசிக்கப்போனால் மேற்கே காலை நீட்டக்கூடாமையினாலே அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன் பணியாமல், நின்றபடி இரண்டு கைகளையுங் குவித்து உச்சியின் மேலே வைத்துக்கொண்டு தரிசிக்கவேண்டும்.

வினா. பகல் பதினைந்து நாழிகைக்குமேல் தரிசிக்கப் போவதற்குக் காரணமென்ன ?

விடை. சூரிய கிரகணம், மகரசங்கராந்தி முதலாகிய புண்ணியகாலங்கள் பகல் பதினைந்து நாழிகைக்கு மேல் வருமானால் தரிசிக்கப்போகவேண்டும்.

வினா. சூரிய அஸ்தமானத்தின்பின் தரிசிக்கப் போனால் அப்படியே பணியவேண்டுமோ ?

விடை. பகல் பதினைந்து நாழிகைக்குமேல் சூரிய அஸ்தமான மாவதற்குமுன் அஷ்டாங்கத்துடன் பணியலாகாதேயன்றி, மற்றக்காலங்களிலெல்லாம் அஷ்டாங்கத்துடனேதான் பணியவேண்டும்.

வினு. அஷ்டாங்க பஞ்சாங்கமென்பதை யல்லாமல் வேறுமுண்டோ?

விடை. ஏகாங்கம், துவிதாங்கம், திரிவிதாங்கம், பஞ்சாங்கம், அஷ்டாங்கம் என ஐந்து விதமாம்.

வினு. ஏகாங்கமாவது என்ன?

விடை. சிரசினைமாத்திரம் வணங்குவது ஏகாங்கமாம்.

வினு. துவிதாங்கமாவது என்ன?

விடை. சிரசின்மேல் வலக்கரத்தைக் குவித்து வைக்குதலாம்.

வினு. திரிவிதாங்கமாவது யாது?

விடை. இரண்டுகைகளையும் சிரசின்மேற் குவித்து வைக்குதலாம்.

வினு. பஞ்சாங்கமாவது யாது?

விடை. சிரமும், இரண்டு கைகளும், முழந்தாளுகளும் பூமியின்மேல் படும்படி வணங்குவதாம்.

வினு. அஷ்டாங்கமாவது என்ன?

விடை. சிரம், இரண்டு கைகள், இரண்டு முழந்தாள்கள், இரண்டு காதுகள், நெற்றி இவைகள் பூமியிற்படிய வணங்குவதாம்.

வினா. பிரதக்ஷணஞ் செய்யவேண்டிய முறைமை எப்படி?

விடை. காமியத்தை விரும்பினவர்கள் வலமாகவும், மோக்ஷத்தை விரும்பினவர்கள் இடமாகவும், காமியத்தையும் மோக்ஷத்தையும் விரும்பினவர்கள் வலமிடமாகவும், பூரண கர்ப்பவதி எண்ணெய் நிறைந்த குடத்தைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு காலில் விலங்கு பூட்டப்பட்டவளாய் நடப்பதுபோல, அதிக மெதுவாய் பிரதக்ஷணஞ்செய்யவேண்டும். அப்போது பரமசிவனது பாதங்களைச் சிந்தித்துக்கொண்டும், செபவடங் கையிலே வைத்துக்கொண்டும், பஞ்சாக்ஷர செபம் செய்துக்கொண்டும், இரண்டு கைகளையும் மார்புக்குச் சரியாக வைத்துக்கொண்டும் வரவேண்டும்.

வினா. சிவசந்நிதியில் எத்தனை பிரதக்ஷணஞ் செய்யவேண்டும்?

விடை. மூன்று, ஐந்து அல்லது ஏழு பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். இந்தத்தொகைக்கு மேற்படவும் செய்யலாம்.

வினா. எந்தக்காலங்களில் ஆலயத்திற்குப்போகவேண்டும்?

விடை. காலை, உச்சி, அந்தியென்னும் திரிசந்தி காலங்களிலும் போகலாம்.

வினா. இந்த மூன்று காலமல்லாத காலத்தில் தரிசனஞ்செய்ய ஆலயத்திற்குப் போகலாகாதோ ?

விடை. கிரகண புண்ணியகாலம், சங்கராந்தி புண்ணியகாலம் நேரிடுமானால் தரிசனஞ் செய்யப் போகலாம்.

வினா. எந்த ஆவரணத்தில் பிரதக்ஷணஞ்செய்ய வேண்டும் ?

விடை. முதலாவரணந்தவிர மற்ற ஆவரணங் களில் பிரதக்ஷணஞ்செய்யலாம்.

வினா. முதலாவரணம் நீங்கலாகச் சொன்ன தென்ன ?

விடை. முதலாவரணத்தில் ஆதிசைவப் பிராம ணர்கள் பிரதக்ஷணஞ் செய்யலாமே தவிர மற்றவர்கள் யாவரும் போகக்கூடாதென்று ஆகமங்கள் சொல்லு கின்றன.

வினா. ஆவரணங்களின் முறைமை எப்படி ?

விடை. சிவலிங்கப்பெருமானைக் கெற்பகிருகத் தில் சூழ்ந்துவரத் தக்கதாக இருப்பதே முதலாவர ணம். அதற்கப்புறம் இரண்டாமாவரணம். அதன் பின் மூன்றுமாவரணம். அதற்கப்புறமப்புறம் இருப் பது நாலாம் ஐந்தாமாவரணம். அதற்கப்பால் ஊரின்புறமே ஆறுமாவரணம்.

வினா. முதலாவரணத்திற் பிரதக்ஷணஞ் செய்யத் தக்க ஆதிசைவப் பிராமணர்கள் மற்ற ஆவரணங் களிற் பிரதக்ஷணஞ் செய்யலாகாதோ ?

விடை. முதலாவரணத்திற் பிரதக்ஷணஞ் செய் வதினால் வரும் பலனுக்குமேல் அதிக பலன் வரு மென்று ஒன்றுக்கொன்று உயர்த்திச் சொல்லியிருப் பதனால் ஆதிசைவரும் மற்றஆவரணத்திற் பிரதக்ஷ ணஞ்செய்தால் விசேஷமான பலன் பெறுவார்கள். இப் படி வரும் ஆவரணங்களில் ஸ்தூபி நிழலாவது, துசஸ் தம்ப நிழலாவது நேரிடுவதாயிருந்தால் அந்த ஆவர ணத்தை விட்டு அப்புறத்திலிருக்கும் ஆவரணத்தில் பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். சுவாமி உற்சவங் கொண்டருளுகின்றகாலத்தில் சுவாமியின்பின் வரும் போது மேற்சொன்ன நிழலிருக்குமானாலும் குற்ற மில்லை.

வினா. பிரதக்ஷணம் இத்தனை நாழிகை செய்ய வேண்டுமென்கிற நியதியுண்டோ ?

விடை. ஒரு ஜாமப்பொழுதளவு செய்யவேண்டு மென்றும், அவ்வாறு செய்தால் ஜெனனமரணம் நீங் கிச் சிவலோகம் அடைவார்களென்றும் ஆகமத்தில் சொல்லுகின்றது.

வினா. இன்னமும் பிரிவுண்டோ ?

விடை. வேறுவகையுண்டு. அதாவது: பிரதக்ஷணஞ்செய்யத் தொடங்கும்போது நந்திதேவரைத் தரிசித்துக்கொண்டு அங்கிருந்தபடியே இடமாகச்சென்று, சண்டேச நாயனாரைத் தரிசித்துச் சென்றவழியே திரும்பிவந்து, மறுபடியும் நந்திதேவரைத் தரிசித்து, அங்கிருந்து வலமாகச்சென்று, வடதிசை சேர்ந்து கோமுகத்தைத்தாண்டாமல் சென்றவழியே திரும்பி வந்து நந்திதேவரைத் தரிசித்து, அங்கிருந்து இடமாகச்சென்று சண்டேச நாயனாரைத் தரிசித்து, அங்கிருந்து திரும்பி நந்திதேவரைத் தரிசியாமல் நேரே வலமாகச்சென்று சத்தி திசையாகிய வடதிசையைச் சேர்ந்து மறுபடியும் சென்றவழியே திரும்பி வந்து நந்திதேவரைத் தரிசிக்காமல் நேரே வலமாகச் சென்று சண்டேச நாயனாரைத் தரிசித்துத் திரும்பி வந்து நந்திதேவரைத் தரிசித்துப் பின்பு சிவலிங்கதரிசனஞ்செய்து பணியவேண்டும். இதற்குச் சோமசூத்திரப் பிரதக்ஷணமென்று பெயர். இவ்வாறு ஒரு பிரதக்ஷணஞ் செய்தால் அனேக பலனுண்டு. பிரிந்துவரும்போது நின்றபடியே பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். இந்தப்பிரதக்ஷணம் பிரதோஷ காலத்திற் செய்தால் விசேஷமான பலனுண்டு.

வினா. பிரதோஷ காலமாவது எது?

விடை. பகல் இருபத்தாறேகால் நாழிகைக்கு

மேற்பட்ட மூன்றே முக்கால் நாழிகையளவும் சூரியஸ்தமான மூன்றேமுக்கால் நாழிகைக்குள்பட்டதுமான காலம் பிரதோஷகாலம். இந்தக்காலத்திற் சிவதரிசனஞ் செய்வது முக்கியமானதால் விபூதி ருத்திராக்ஷத்திற்குட்பட்ட சிவனடியார்களாயிருக்குஞ் சைவர்கள் அவசியம் சிவதரிசனஞ் செய்யவேண்டும்.

விஞ. பிரதோஷமென்பதற்குப் பொருள் யாது?

விடை. இராத்திரியின் முன் என்பதாம். சமஸ்கிருதத்தில் ரசனிமுகமென்று சொல்லப்படுகின்றது. இவ்வாறு சொல்லப்படுகின்ற பிரதோஷ காலம் திரயோதசி திதியில் சிறந்தது. பிரதோஷ விரதமும் இந்தத் திதியில் அநுஷ்டிக்கவேண்டும்.

விஞ. திரயோதசி திதியில் சிறந்ததற்குக் காரணமென்ன?

விடை. கங்காதர மூர்த்தியாகிய பரமசிவன் ஆலகால விஷமுண்டருளியபோது ஒரு க்ஷண நேரம் சும்மாவிருந்தார். அன்று ஏகாதசி திதி. அப்போது தேவர்கள் பரமசிவனை அருச்சித்துக்கொண்டிருந்து மறுநாள் துவாதசி திதியில் பாரணஞ்செய்து பூர்த்தியடைந்தார்கள். மறுநாள் திரயோதசி திதியில் பிரதோஷ காலத்தில் பரமசிவன் பராசக்தி எதிரில் சூலஞ் சுழற்றிக்கொண்டு கயிலயங்கிரியில் ஒருசாமம் நடனஞ்

செய்தருளினார். இந்தக்காரணத்தினால் திரயோதசி திதி பிரதோஷகாலஞ் சிறந்தது. இந்தப்பிரதோஷ காலத்தில் சிவதரிசனஞ் செய்கின்றவர்கள் நந்திதேவர் பீசத்தைப் பரிசித்து நந்திதேவராகிய ரிஷபதேவருடைய இரண்டுகொம்பு மத்தியில் பிரணவ சகிதமாக அரகரவென்று சொல்லிக்கொண்டு சிவலிங்கதரிசனஞ் செய்யவேண்டும். இவ்வாறு தரிசிக்கும் சிவனடியார்கள் சிவசொரூபம் பெறுவார்கள். சனிப்பிரதோஷம் மிகுந்த சிறப்புள்ளதாக ஆகமத்திற் சொல்லுகின்றது. சிவலிங்க தரிசனஞ் செய்கின்றவர்கள் வில்வத்தினால் சிவார்ச்சனை செய்விக்கவேண்டும். அதற்குத்தக்க தக்ஷிணைக் கொடுத்தால்தான் அர்ச்சனை செய்ததாகப் பலன் சித்திக்கும். பிரதோஷ விரதம் அனுஷ்டிப்பவர்கள் சிவதரிசனஞ் செய்து, பின்பு போஜனஞ் செய்யவேண்டும். சிவனடியார்களுக்கு அமுதுபடைத்துப் பின்பு புசிப்பது உத்தமம்.

வினா. பிரதோஷவிரதம் அனுஷ்டித்துப் பேறு பெற்றவர்கள் யார்?

விடை. உஜ்ஜெனிமாகாள மென்னும் நகரத்திற் கரசனாகிய சந்திரசேன மகாராஜன் சனிப்பிரதோஷ விரதம் அனுஷ்டித்து இம்மையில் அரசர்களெல்லாம் தன்னை வணங்கும்படி செங்கோல் செலுத்திச் சிவபதம்

பெற்ருன். இந்த ராஜன் பூஜைசெய்ததைப் பார்த்த ஒரு இடைப்பிள்ளைக்குப் பக்தியுண்டாகி, வீதியில் மணலி ஞல் ஆலய முதலானதுகளும் அமைத்துக்கொண்டு ஒருசிலையைநாட்டி, சிவலிங்கமாகப் பாவித்து, பூசை செய்து பேறுபெற்ருன். இவ்விரண்டு சரித்திரமும் பிரமோத்தர காண்டத்திற் கண்டுகொள்க. உசெனிமா காள மென்பது பாடல்பெற்ற ஸ்தலம். பதிகத்தில் உஞ் சேனைமாகாளம் என்றிருக்கின்றது. உஞ்சேனைமாகா ளம் உளறலோத்தூர்; இது க்ஷேத்திரக்கோவையிலிருக் கின்றது. அந்த ஸ்தலத்திற்குப் பதிகமில்லை; கிலமாய் விட்டது. உஞ்சேனை யென்பது ஸ்தலம்; மாகாளமென் பது திருக்கோயில். இவ்வாறு சிவஸ்தலங்களில் ஆல யத்தின்பேர் வேறேயிருக்கின்றது. மதுரை ஸ்தலம், திருவாலவாய் ஆலயம், இவ்வாறு மற்றதும் விசா ரித்து அறிந்துகொள்க. உஞ்சேனைமாகாளமென்பது வடதேசத்திலிருக்கின்றது. விக்கிரமாதித்தரசன் அரசுசெலுத்திய பட்டணமிதுதான். அம்பர்மாகாளம், இரும்பைமாகாளம் என்றிரண்டு இந்த தேசத்தி லிருக்கின்றது.

பிரதோஷ விரதமிருப்பவர்கள் தேக அசத்தியினுல் நிறுத்தி விடுகிறதாயிருந்தாலும், மேலும் இடைவிடா மல் அனுஷ்டிப்பதாயிருந்தாலும் உடனுக்குடன் உத் தியாபனஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யாம

விருந்து தேகம் நழுவிவிடுமானால் விரதபலன் சித்தியாகவில்லையாம். ஆதலினால் ஆகமவிசாரணையுள்ளவர்களால் தெரிந்துகொண்டு நடக்கவேண்டும். எந்த விரதத்திற்கும் இந்தக்கிரமமுண்டு.

வினா. சிவதரிசனஞ் செய்யும்போது நந்திதேவருக்கும், சிவலிங்கப்பெருமானுக்கு மத்தியிற் போகலாமா?

விடை. அப்படிபோவது முப்பத்திரண்டு குற்றங்களிலொன்றாம், ஆதலாற் போகலாகாது.

வினா. மேற்சொல்லிய குற்றம் யாது?

விடை. நந்திதேவருக்கும் சிவலிங்கப்பெருமானுக்கு மத்தியிற் போகுதல், தரிசனம் செய்தபின் புறங்காட்டிவருதல், ஒருகை குவித்துத் தரிசித்தல், ஒரு பிரதக்ஷணஞ்செய்தல், மேலேயுத்தரியம்போட்டுக்கொண்டு தரிசித்தல், கோபுரச்சாயை கடத்தல், கோயிலில் உண்ணுதல், நித்திரைசெய்தல், நிர்மாலியத்தைத் தாண்டுதல், அதனைத்தீண்டுதல், கையினால் விக்கிரகங்களைத் தீண்டுதல், ருத்திரகணிகையரக்கையினால் தீண்டுதல், அவர்களோடு பேசுதல், பார்க்குதல், வீணான வார்த்தைகள்பேசுதல், கோயில் காரியமல்லாத சொல்லைச் சொல்லுதல், தான் சொல்லாவிட்டாலும் ஒருவர் சொல்வதைக் கேட்குதல், உத்தமர்களை யவமதித்தல், •அற்

பர்களை மதித்துப்பேசுதல், அவ்விடத்திலிருக்கும் சிவ சொத்தாகிய பொருளை அபேக்ஷித்துப் பார்க்குதல், வேதங்களால் சொல்லப்படாத சிறுதெய்வங்களைப் பணிதல், வேதமுதலான கலைகள் பாடமோதுதல், உன்னத ஸ்தானத்திலிருத்தல், ஆசனத்திருத்தல், ஒருவரைப்பார்த்து நகைத்தல், பிணங்குதல் முதலான துர்க்குணங்களைப் பாராட்டுதல், சிரேஷ்டமான பாடலையன்றி மற்றப்பாடலை மதித்துக்கேட்குதல், திரிசந்தியல்லாதகாலங்களில் ஆலயத்திற்செல்லுதல், இரண்டொரு பிரதக்ஷணஞ்செய்தல், சிரேஷ்டமல்லாத கீர்த்தனங்கள் பாடுதல் என்னும் இவைகளாம். இதுகளுமன்றி உமிநீர் துப்பவேண்டியதாயிருந்தாலும், மூக்கு சிந்தவேண்டியதாயிருந்தாலும், அபானவாயு பறிவதாயிருந்தாலும் துரிதமாக ஆலயத்திற்கு வெளியில் வந்து விடவேண்டும். இதுபோலவே சிவதீர்த்தத்திலும் நந்தவனத்திலும் செய்யப்படாத காரியஞ் சிலவுண்டு.

வினா. இந்த விடத்தில் செய்யத்தகாத காரியமென்ன ?

விடை. சிவதீர்த்தத்தில் உமிநீர் துப்பலாகாது, மூக்குசிந்தலாகாது, மற்றுமுள்ள அசூசியான காரியஞ் செய்யலாகாது. நந்தவனத்திலு மிப்படியே.

வினா. சிவதீர்த்தமாவது யாது ?

விடை. சிவாலயத்திற்கருகே இருக்கும் தீர்த்தமாம். இது சுத்தம் அசுத்தமாயிருந்தாலும் சிவகங்கையாகச் சிந்தித்து ஸ்நானஞ் செய்யவேண்டும். இது மூர்த்தி ஸ்தலம் என்பதனோடு சேர்ந்தது.

வினா. நந்தவனஞ் சிரேஷ்டமானதற்குக் காரணமென்ன ?

விடை. சிவார்ச்சனைக்கு யோக்கியமான பூஞ்செடிகளை யுடையதாகையால் சிரேஷ்டமானது. இதுவுமன்றிப் பரமசிவம் சிலமலர்களிலும், பராசக்தி சில மலர்களிலும் வாசமாயிருப்பதினாலும் சிரேஷ்டமானது. இதன் விவரம் புட்பவிதிகூறும் புஸ்தகத்தில் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றது.

வினா. சிவலிங்கப்பெருமானிலும் பேதமிருக்குமோ ?

விடை. மனிதர்களாலும், முனிவர்களாலும், தேவர்களாலும், சிவகணங்களாலும் ஸ்தாபனஞ் செய்த லிங்கங்களுமன்றி சுயம்பு மூர்த்தியாகப் பூமியிலிருந்துண்டான லிங்கமென்றும் ஐந்து வகையுண்டு. இவ்வைந்துவகை சிவலிங்கங்களையும் தரிசிக்கலாம்.

வினா. அனுல் தரிசனத்தாலுண்டாகும் பலன் சமமாயிருக்குமா ?

விடை. ஒன்றுக்கொன்று விசேஷமாயிருக்கும். எவ்வாறெனில் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்க தரிசனத்தினுலுண்டாகும் பலனிலும் முனிவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கதரிசன பலன் அதிகம். இவ்வாறே மற்ற மூன்றிற்கும் கண்டுகொள்க. மனிதர்களால் ஸ்தாபிக்கப்படும் சிவலிங்கத்தையு மற்றச் சிவலிங்கங்களுடன் சேர்த்துச்சொல்லி யிருப்பதினுல் அவர்களைச் சாமானியர்களாக நினைக்கப்படாது. சேர, சோழ, பாண்டிய ராஜாக்கள் முதலாகிய க்ஷத்திரியர்களேயாம். இவ்வரசர்களிடத்தில் சிவநேசமும், ராஜநீதி முதலான தருமமும் விசேஷமாயிருந்ததினுல் இவர்களுக்குப் பரமசிவனுடைய திருவருள் பூரணமாகக் கிடைத்திருந்தது. இவர்களுக்கும் சாபானுக்கிரகமுண்டு.

வினு. மற்ற மனிதர்களால் ஸ்தாபிக்கப்படாதோ ?

விடை. சிவதரிசனத்திற்குச் சமீபத்தில் ஆலயமில்லாத கிராமங்களாயிருந்தால் சிவப்பிரதிஷ்டை செய்யவேண்டுவதுதான். கிலமான ஆலயங்களிருக்குமானுல் அதை நீக்கிப் புதியதாகப் பிரதிஷ்டை செய்விக்கலாகாது. அப்படி ஸ்தாபிக்குமிடத்தில் தான் கர்த்தாவாயிருந்து ஸ்தாபிக்காமல் ஆதிசைவப் பிரா

மணரைக் கர்த்தாவாக நியமிக்கவேண்டுமென்று ஆக மங்களிற் சொல்லப்படுகின்றது.

வினா. நூதனமாக ஆலயம் ஏற்படுத்திச் சிவ லிங்கம் ஸ்தாபிப்பவர்கள் பக்கத்தில் ஒரு லிங்கம் பூசையில்லாமலிருந்தால் அதைக்கொண்டுவந்து ஸ்தா பிக்கலாமா?

விடை. கிரியாலிங்கமா யிருந்தால் ஸ்தாபிக்க லாகாது. சுயம்புலிங்க மானதாயிருந்தால் கொண்டு வந்து ஸ்தாபிக்கலாம். இந்தக்காரியம் ஆகமத்தை நன் ருக விசாரித்துச் செய்யவேண்டும்.

வினா. சுயம்புலிங்கம் பூமியில் தானே யுண்டான தாயிருந்தால் அதை எப்படி கொண்டுவரலாம்?

விடை. இவ்விடத்தில் சுயம்புலிங்க மென்றது கிரியாலிங்கம்போற் செய்யப்படாமல் உண்டாயிருக் கும். அது காசிலிங்கமென்றும், பாணலிங்கமென்றுஞ் சொல்லப்படும்.

வினா. பாடல்பெற்ற ஸ்தலங்களிலிருக்கும் ஆல யங்களுக்கு அபாயமானகாலம் நேரிடுவதாயிருந்தா லோ?

விடை. அப்படிக்கொத்த காலங்களில் அங்கி ருக்கும் சுயம்புமூர்த்தி சலனப்படுத்தத் தக்கதாயிருந் தால் வேறு ஆலயம் ஏற்படுத்தி, அந்தச் சிவலிங்கத்

தைக் கொண்டுவந்து ஸ்தாபிக்கலாம். சலனப்படுத்தக் கூடாததாயிருந்தால் வேறுலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டாலும் சுயம்புமூர்த்தியேயாம்.

விஞ. பரமசிவம் எந்தச் சிவலிங்கத்தினிடத்தில் விசேஷமாக மூர்த்திகரித்திருக்கிறுர்?

விடை. சுயம்புலிங்கத்தில் சதாகாலமும் மூர்த்திகரித்திருக்கிறுர்.

விஞ. பரமசிவம் எங்கும் பரிபூரணமாயிருக்க, சிவாலயத்தில் சிவலிங்கத்தினிடமாக மூர்த்திகரித்திருக்கிறு ரென்பதற்குத் திருஷ்டாந்தமென்ன?

விடை. பசுவின் சரீரமெங்கும் பாலானது வியாபித்திருந்தாலும், அதன் முலேயினிடத்தில் காணப்படுவதுபோல, பரமசிவமும் சிவலிங்கத்தினிடத்தில் மூர்த்திகரித்திருக்கிறுர்.

விஞ. பரமசிவம் அநேக ஸ்தலங்களில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கிறதற்குக் காரணம் என்ன?

விடை. தேசங்கள் பலவாயிருப்பதினுல், அவ்வாறு திருக்கோயில் கொண்டிருக்காவிட்டால், மனிதர்களுக்குச் சிவதரிசனஞ் சித்திப்பதருமை. பார்வதி தேவியார் பரமசிவத்தை நோக்கிப் பலவிடங்களில்

திருக்கோயில் கொண்டு வீற்றிருப்ப தென்னவென்று வினவினதாகவும், தேசங்கள்தோறும் பரவியிருக்கும் ஜனங்கள் அங்கங்கு தரிசிக்கும் பொருட்டாக வீற்றிருப்பதாகவும் பரமசிவம் கட்டளையிட்டருளினு ரென்று காஞ்சீபுராணத்தில் சொல்லியிருக்கின்றது.

வினு. திரிசந்தி காலங்களில் சிவதரிசனஞ் செய்வதில் கால தரிசனத்தினுல் இன்னின்னபலன் சித்தியாகு மென்கிறதுண்டா?

விடை. காலசந்தியில் தரிசித்தால் அன்று நேரிடும் பாவம் நிவர்த்தி யென்றும், உச்சிக்கால தரிசனத்தால் அந்த ஜென்மத்தில் நேரிடும் பாவம் நிவர்த்தி யென்றும், சாயங்கால தரிசனத்தால் ஜெனனங்கள் தோறும் நேரிட்ட பாவங்கள் நிவர்த்தியாகுமென்றும் அறிந்துகொள்க.

வினு. பலநதிகளுக்குள் கங்காநதி சிரேஷ்டமானதற்குக் காரணமென்ன?

விடை. அந்த நதி பார்வதி தேவியாருடைய திருவிரல்களிடமாக உண்டானதாகையால் சிரேஷ்டமாகியது.

வினு. என்ன காரணத்தினுல் பார்வதி தேவியாருடைய திருவிரல்களி லுண்டாகியது?

விடை. ஒருகாலத்தில் பார்வதி தேவியார் பின்னுகவந்து பரமசிவனுடைய இரண்டு திருக்கண்களை

யும் மூடினபோது பத்துவிரல்களிலிருந்தும் உண்டாகியது.

வினு. அப்படி ஏற்பட்ட கங்கையைப் பரமசிவன் திருமுடியில் அணிந்து கொண்டதற்குக் காரணமென்ன ?

விடை. அந்தக் கங்கையானது ஏழுகடலும் ஒன்முய்க் கலந்ததுபோல பெருவெள்ளமாகி ஆயிரமுகத்துடன் உலகமெங்கும் பாந்ததைப் பிர்மதேவன் முதலாகிய தேவர்கள் கண்டு பயந்து, கயிலாயகிரிக்குச் சென்று, சுவாமியைத்தொழுது முறையிட்டுக்கொள்ளக் கிருபைகூர்ந்து அந்த வெள்ளமெல்லாஞ் சுருங்கி வரும்படி திருவுளங் கொண்டு, வந்தவெள்ளத்தைத் தமது சடையில் ஒரு துளியாகத் தரித்துக்கொண்டார். இந்தக்காரணத்திஞல் சுவாமிக்குக் கங்காதரனென்று பெயர். சந்திரனைத் திருமுடியில் தரித்துக் கொண்டிருப்பதிஞல் சந்திரசேகரனென்று பெயர்.

விஞ. அந்த நதி பூலோகத்தில் வந்ததற்குக் காரணமென்ன ?

விடை. பகீரதனென்னும் ஒரு அரசஞல் வந்தது.

விஞ. சந்திரனைச் சடைமுடியில் ஏன் தரித்துக் கொண்டிருக்கிருர்? அதுவுமொரு கலையுள்ளதாயிருக்கின்றதே அல்லது சோடச கலையுள்ளதாய் இருக்கவில்லையே ?

விடை. தக்கன் தன்னுடைய இருபத்தேழு பெண்களேயுஞ் சந்திரனுக்கு விவாகஞ்செய்து கொடுத்த போது இவர்களெல்லோரிடத்திலும் ஒரேதன்மையான இஷ்டமுள்ளவனா இரு என்று சொல்லியனுப்பினுன். அவ்வண்ணமாக இருந்த சந்திரன் தன் ஸ்திரீகளுள் மிகுந்த சவுந்தரியமுள்ள கார்த்திகை, உரோகணி என்னும் இரண்டு ஸ்திரீகளிடத்தில் மாத்திரம் மிகுந்த இஷ்டமுள்ளவனுயும் மற்ற இருபத்தைந்து ஸ்திரீகளிடத்தில் இஷ்டமில்லாமலுமிருந்தான். அவர்கள் மனம் வருந்தித் தக்கனிடத்திற் சொல்லிக்கொண்டார்கள். அவன் கோபங்கொண்டவனுய்ச் சந்திரனுடைய சோடசகலேகளும் அழியும்படி சபித்தான். அந்தச்சாபத்தின்படி தினமொவ்வொரு கலேயாகப் பதினேந்து கலே குறையக்கண்ட சந்திரன் துயரங்கொண்டு தேவேந்திரனிடத்தில் சொல்ல, இந்தச்சாபம் என்னுல் நீக்கத்தக்கதல்லவென பிர்மதேவனிடத்திற் போய்ச் சொல்லிக் கொண்டான். நான் சொன்னுலும் தக்கனிந்தச் சாபத்தை நிவர்த்தி செய்யமாட்டான். நீ கயிலயங்கிரிக்குப்போய், பரமசிவனிடத்தில் விண்ணப்பம் செய்துக்கொண்டால் இந்தச்சாபம் நிவர்த்தியாகுமென்று பிர்மதேவன்சொல்ல, அதைக் கேட்டுக்கொண்டு சந்திரன் கயிலயங்கிரிக்குப்போய் பரமசிவனேப் பணிந்து, தோத்திரஞ்செய்தான். பரமசிவன் கிருபைகூர்ந்து

சந்திரனிடத்திலிருந்த ஒரு கலையினையும் தமது சடைமுடியில் தரித்துக்கொண்டு, இது உன்னிடத்திலிருந்தால் தக்கன் சாபம் இதையும் அழித்துவிடும். இனி நம்முடைய திருமுடியிலிருக்கிற கலையைத் தொடாது. இந்தக் கலை அழியாமலிருப்பதினால் உனக்கு முன்னிருந்ததுபோல், நாளுக்கு நாள் ஒவ்வொரு கலையாக வளர்ந்து சோடசகலைகளும் நிறைவுபடும். அப்படி நிறைந்தாலும் வளர்ந்ததுபோல் மறுபடி குறைவுபடுகிறதும், வளர்வதுமாக இருக்குமென்று அநுக்கிரகஞ் செய்தார். சந்திரன் சந்தோஷத்துடன் சுவாமியைத் தோத்திரஞ்செய்து விடைபெற்றுக் கொண்டு தன் பதவியிற்போய்ச் சேர்ந்தான்.

வினா. பரமசிவன் ஒரு திருக்கரத்தில் மான் தரித்துக்கொண்டிருப்பதற்குக் காரணமென்ன?

விடை. அந்த மான் தாருகாவனத்து ரிஷிகளால் அனுப்பப்பட்டது. அவர்கள் ஏன் அனுப்பினார்களெனில், பரமசிவன் பிக்ஷாடன மூர்த்தமாகத் தாருகாவனத்திற்கு எழுந்தருளினபோது ரிஷி பத்தினிகள் கண்டு, மோகித்துத் தங்கள் கற்பு குலைந்தார்கள். அதைக்கண்டு தாருகாவனத்து ரிஷிகள் கோபமுடையவர்களாய் ஒரு வேள்விசெய்து அதிலுண்டான புலியைநோக்கிச் சிவனைக் கொல்லும்படி ஏவ, அதனைக்கொன்று தோலை ஆடையாக அணிந்துகொண்

டார். பின்னும் அந்த வேள்வியில் மான் உண்டாகிவர, அதனை இடக்கையில் வைத்துக் கொண்டருளினார். பின்பு மழு உண்டாய்வந்தது, அதனை ஆயுதமாக வைத்துக்கொண்டார். பின்பு சர்ப்பங்களுண்டாய்வர, அவைகளை ஆபரணங்களாகத் தரித்துக்கொண்டார். முயலகனென்னும் அசுரனுண்டாகிவர, அவனைக் கீழே தள்ளிக்கொண்டு முதுகிலேறி நின்றார். மந்திரங்களை ஏவினார்கள். அவைகள் தமருக ரூபங்கொண்டுவர திருக்கரத்தில் வைத்தருளினார்.

வினா. பன்றிக்கொம்பு, ஆமையோடு, மீன்கண், எலும்புமாலை, கையில் கபாலம் இவைகளை ஏன் தரித்துக்கொண்டிருக்கிறார்?

விடை. 1. விஷ்ணு கடலில் மச்சவதாரங் கொண்டு வேதங்களை அபகரித்துக் கொண்டுபோன ஒரு அசுரனை வதைத்து இரத்தவெள்ளங் குடித்து, மயக்க முற்று, உலகம் வருந்தும்படி கடலைக்கலக்கிய போது தேவர்கள் கயிலையிற்சென்று தாங்கள்வந்த காரியத்தை விண்ணப்பஞ் செய்துகொள்ள, சுவாமி கிருபைகூர்ந்து, ஒரு வயிரவரை அனுப்ப, அவர் போய் வலைவீசி அந்த மீன்கண்களைப் பிடித்துக் கொண்வர, அவைகளைத் தேவர்கள் வேண்டுதலினால் மார்பில் தரித்துக்கொண்டருளினார்.

2. ஆமையோடு தரித்துக்கொண்டதற்குக் கார

ணமாவது: அமிர்த முண்டாகும்படி தேவர்கள் பாற் கடலில் மந்திரகிரியை மத்தாகநாட்டி வாசுகியாகிய பாம்பினைக் கயிராகச்சுற்றி வலிக்கும்போது அந்த மந்திரகிரி கடலிலாழ, அதைக்கண்டு தேவர்கள் விஷ் ணுவைத் தோத்திரஞ்செய்ய, அவர் வந்து ஆமையாகி மந்திரகிரி தன்முதுகில் நிற்கும்படி தாங்கினகாலத் தில், மமதைகொண்டு கடலைக்கலக்க, அதைக்கண்ட தேவர்கள் கயிலாயபதிக்கு விண்ணப்பம் செய்துக் கொண்டார்கள். சுவாமி கிருபைகூர்ந்து விநாயகரை அனுப்ப, அவர்போய்த் தம்முடைய துதிக்கையை நீட்டிக் கடல் நீரையெல்லாம் உறிஞ்சுகையில் ஆமை யும் அந்தத் துதிக்கைக்குள் போய்விட்டது. பின்பு விநாயகர் நீரைச்சிந்தினார். அந்த நீருடன் ஆமையும் வெளியே வந்து விழுந்து மதமடங்கிக்கிடக்க, அதை விநாயகர்கண்டு, அதன் ஓட்டினைத் தன்னுடைய தந் தத்தினால் பெயர்த்துக் கொண்டுவந்து, சுவாமிக்குக் காணிக்கையாகக் கொடுக்கக்கண்டு மகிழ்ந்து தேவர் கள் வேண்டுதலினால் தலைமாலையுடன் அந்த ஆமை யோட்டையும் மார்பில் தரித்துக்கொண்டருளினார்.

3. பன்றிக்கொம்பினை அணிந்துகொண்டிருப் பதற்குக் காரணம்: இரணியாக்ஷனென்னும் ஒரு அசு ரன் பிரமதேவனை நோக்கித் தவஞ்செய்து வரம் பெற் றுக்கொண்டு போகின்றவன் பூமியைக் கவர்ந்துக்

கொண்டு போய்விட்டான். அதையறிந்த விஷ்ணு, வராக அவதாரஞ்செய்து, அவனைக்கொன்று மமதை யடைய, தேவர்கள் கயிலாயபதிக்கு விண்ணப்பஞ்செய் துக் கொண்டார்கள். பரமசிவன் திருவுளமிரங்கிச் சுப்பிரமணியரை அனுப்ப அவர்போய், அந்தப்பன்றி யின் தலையை வேலினால் குத்தி அமுக்கி, அதன் கொம் பினைப் பறித்துக்கொண்டு வந்து, சுவாமியினிடத்தில் வைக்க, அதையும் முன்போல தரித்துக்கொண்டார்.

வினா. இதுகளுமன்றி எலும்புமாலை, சிரமாலை அணிந்து கொண்டிருப்பதற்குக் காரணமென்ன?

விடை. பிரம விஷ்ணுக்களை யுண்டாக்கியவர் களில் பிரமனைக்கொண்டு உலகத்தைச் சிருஷ்டித்தும், விஷ்ணுவைக்கொண்டு ரக்ஷித்தும், பின்பு சங்கரித் தும், பலவாறு இம்முத்தொழில்களைச் செய்கையில், பிரம விஷ்ணுக்கள் முடிவானகாலத்தில் சங்கரித்து அவர்கள் எலும்புகளையும், சிரங்களையும் மாலைகளாக அணிந்தருளினார். அவர்களுக்கு நன்மை யுண்டாக வேண்டுமென்று தரித்துக்கொண்டதே யன்றி பெரு மைப்பாராட்டத் தரித்துக்கொண்டதல்ல. முன்னொரு கற்பமுடிவில் இவர்களை யெல்லாம் நெற்றிக்கண் பொறியால் நீறுபடுத்தி அந்தப் பொடியைத் தமது திருமேனியில் தரித்துக் கொண்டருளினார். இது வும் அவர்களுக்கு நன்மை உண்டாகவேண்டுமென்

கிற காருண்யமேயாம். முன்னொருகாலம் பிர்மா அகந்தைகொண்டிருந்தான். அதை அடக்கும் பொருட்டு அவனுக்கிருந்த ஐந்து தலையில் நடுத்தலையைக் கிள்ளிக் கையிற் கபாலமாக வைத்தருளினார். அது முதல் பிர்மனுக்குச் சதுர்முகனென்றும், நான்முகனென்றும் பெயருண்டாகியது. பரமசிவன் சிரமாலையணிந்திருப்பதினால் சிரமாலி யென்றும், கபாலந்தரித்துக்கொண்டிருப்பதினால் கபாலியென்றும் பெயருண்டாகியது.

வினா. கண்டத்தில் விஷம் பொருந்தியிருப்பதற்குக் காரணமென்ன?

விடை. தேவர்கள் அமிர்தமுண்டாவதற்காகப் பாற்கடலை கடைந்தபோது ஆலகால விஷமுண்டாகியது. அதைக்கண்டு தேவர்கள் முறையிட, அவர்களை இரக்ஷிக்கும்பொருட்டு விஷத்தையுண்டு கண்டத்தில் வைத்தருளினார். இந்தக் காரணத்தினால் காளகண்டன், கறைமிடற்றன், நீலகண்டன் என்று பெயர்.

வினா. பரமசிவனுக்கு ரிஷபவாகன முண்டானதற்குக் காரணமென்ன?

விடை. தருமதேவதையானது பிர்ம விஷ்ணு முதலானவர்களெல்லாம் அழிந்து போவதைக்கண்டு தானவ்வாறு மாண்டுபோகாமல் என்றும் நித்தியமாயிருக்கவேண்டு மென்கிற எண்ணங்கொண்டு, ரிஷப

ரூபமாகிப் பரமசிவனிடத்திற்சென்று பணிந்து, கர்த்தனே! நானிறவாமலிருக்கும்படி அடியேனை வாகனமாகக் கொண்டருள வேண்டுமென்று தோத்திரஞ் செய்ய, சுவாமி கிருபையினால் அதனைத் தனக்கு வாகனமாகக் கொண்டருளினார். இதுவுமன்றி விஷ்ணுவும் ஒருகாலத்தில் ரிஷபமாகிக் கயிலாயபதி தன்னை வாகனமாகக் கொண்டருளும்படி பெற்றுக் கொண்டார்.

வினா. பரமசிவன் யானைத்தோல் போர்த்திருப்பதற்குக் காரணமென்ன ?

விடை. யானைரூபமாகித் தோன்றிய கயாசுரனென்பவன் பிரமதேவனை நோக்கித் தவஞ்செய்து தேவர்களையெல்லாம் வென்று ஜெயம்பெற வேண்டுமென்கிற வரங்கேட்டான். பிர்மதேவன் அப்படியே வரங்கொடுத்துப் பரமசிவன் எதிரில் போகாதே, போனால் இந்தவரம் அழிந்துபோமென்று சொல்லக் கேட்டுக்கொண்டு போனவன், தேவேந்திரன் முதலானவர்களுடன் யுத்தஞ்செய்து வென்று திரியும்போது, முனிவர்கள் கண்டு பயந்து ஓடிக் காசியிற் சேர்ந்தார்கள். அங்குமவர்களைத் தொடர்ந்து சென்றான். அவர்கள்கண்டு பயந்து மணிகர்ணிகையென்னும் ஆலயத்திற்குட் போய்ப் பரமசிவனைச் சரணாகதி யென்றடைந்தார்கள். கயாசுரனுக்குக் காலமுடிவு நேரிட்டதினால்

பிர்மதேவன் சொன்னதைமறந்து அங்குஞ்சென்று முனிவர்களைக் கொல்ல வேண்டுமென்று உறுமுகிற போது, சுவாமி கோபத்துடன் உக்கிரமூர்த்தியாய்க் கயாசுரன் மத்தகத்தை மிதித்து, உடலைக்கிழித்து, தோலையுரித்துப் போர்த்தருளினார்.

வினா. கயிலையங்கிரியில் நந்திதேவர் காவலென்கிறார்களே அவருடைய வரலாறென்ன ?

விடை. சிலாதர முனிவருடைய தவத்தினால் அவருக்குப் புத்திரராக அவதரித்து, திருவையாற்றில் தவஞ்செய்து, பரமசிவனுடைய கிருபையினால் மான், மழு, காளகண்ட முதலியவைபெற்று, வெள்ளிப் பிரம்பும், சுரிகையும் அருளிச்செய்ய, அவைகளுடன் காவலும் பெற்றுக்கொண்டு கணங்களுக்கெல்லாந் தலைமையானவரா யிருக்கின்றார்.

வினா. சைவசமயத்திற்கு விபூதி ருத்திராக்ஷங்கள் முக்கியமானவைகளென்பதற்குக் காரணமென்ன?

விடை. பரமசிவனுடைய திருமேனியினிடத்திலும், திருநேத்திரத்திலும் உண்டானமையால் முக்கியமாயின.

வினா. அவைகளுண்டான வகையெப்படி ?

விடை. பரமசிவனுடைய அக்கினி போன்ற திருமேனியில் இயல்பாகப் பூத்தது. அது அநாதியான விபூதி. பின்பு தேவர் முதல் சராசரங்களை யெல்லாம்

இறுதிக்காலத்தில் நீறாக்கித் தம்முடைய திருமேனி யில் தரித்தருளினாரே, அது ஆதி விபூதி. இப்போது நெருப்பின்மேல் நீறு பூத்திருப்பதை திருஷ்டாந்த மாகக் காணலாம். இவ்வாறு சுவாமியின் திருமேனி யிற் படிந்ததாகையால் விபூதி தரித்துக் கொண்டிருக் கிறவர்களே சிவனடியார்களாவார்கள். அதனை அணி வதினால் பலன் என்னவெனில், மகா பாதகங்களெல் லாம் நீங்குமென்றும், அப்படிக்கொத்த விபூதியைப் பசுவின் சாணத்தினால் விளைவிக்கவேண்டு மென்றும், அப்படி விளைவிப்பதில் கற்பம், அநுகற்பம், உபகற்ப மென மூன்று விதியுண்டென்றும், அவற்றுள் ஒரு விதிப்படி விளைவித்து தரித்துக்கொள்ளவேண்டுமென் றும், ஆகமங்களில் சொல்லுகின்றது.

வினா. **கற்பவிதி** யாவது யாது?

விடை. பங்குனி மாதத்தில் பிசானத்தாள் மேய் ந்துவந்த நல்ல பசுக்களைப் பரிசுத்தமுள்ள தொழுவத் திற்சேர்த்து, அவைகளிடுகிற சாணத்தைப் பூமியில் விழவொட்டாமல் தாமரையிலையி லேற்றுக்கொண்டு, மேலுள்ள வழுவை நீக்கிவிட்டு, உண்டையாக்கி, முன் விளைவித்திருக்கிற சிவாக்கினியிலிட்டுப் பக்குவமாக வெந்தபிற்பாடு எடுத்துப் புதுப்பானையிலிட்டு, வேண் டியமட்டில் விபூதியைக் கோவிலில் வைத்துக்கொண்டு பூமியில் சிந்தாமல் தரித்துக்கொண்டால், ஜெனன

மரண துக்கம் நீங்கி மோக்ஷம் அடையலாம். இவ்வாறு விளைவிப்பதுதான் கற்பவிதி. சாணத்தை வந்தும்போதும், அக்கினியிலிடும்போதும், வெந்தபின்பு எடுக்கும்போதும், புதுப்பானையில் வைக்கும்போதும் மந்திரஞ்சொல்ல வேண்டுவதுண்டு. அதைக்குருவினால் அறிந்துக்கொள்ளவேண்டும்.

வினா. அநுகற்பவிதி எப்படி விளைவிப்பது ?

விடை. காட்டிலுலர்ந்த பசுவின் சாணத்தை உதிர்த்துக் கோசலம்விட்டுப் பிசைந்து, சிவாக்கினியிலிட்டுப் பக்குவப்படுத்துவதாம்.

வினா. உபகற்பவிதி யாவது யாது ?

விடை. இயல்பாக வெந்த காட்டுச் சாம்பல், சிவாலய மடைப்பளிச் சாம்பல் இவைகளை எடுத்துக் கோசலம் விட்டுப் பிசைந்து, உண்டையாக்கிச் சிவாக்கினியிலிட்டுப் பக்குவப்படுத்தி முன்னே எடுத்து வைத்துக்கொண்டு தரித்துக்கொள்ளுவதாம்.

வினா. விபூதிக்கோயில் எதனலமைக்கவேண்டியது ?

விடை. வஸ்திரம், புலித்தோல், மான்தோல் இவைகளால் அமைக்கவேண்டும். பையேயன்றி வேறுமுண்டு.

வினா. எல்லா ஜெந்துக்களிலும் பசு சிரேஷ்டமானதென்ன ?

விடை. புண்ணிய நதி தீர்த்தங்கள், முனிவர்கள், மேலான தேவர்கள் வாசமாயிருக்கும்படி அங்கங்களுடன் உற்பவமானதினாலும், தேவலோகத்திலிருக்கிற காமதேனுவின் குலமாகையினாலும் சிரேஷ்டமானது. இந்தப் பெருமையெல்லாமெடுத்து விவரமாகச்சொன்னால் விரிவாகுமாதலால், சுருக்கமாகச் சொல்லப்பட்டது. ஆகம புராண விசாரணையுள்ள பெரியோர்களால் விபரமாக அறிந்துகொள்ளலாம்.

வினா. விபூதி எங்கெந்த உறுப்புகளில் தரிக்க வேண்டியது ?

விடை. உச்சி, நெற்றி, மார்பு, தொப்புள், முழங்கால், கைகள், பின்பக்கம் இவ்விடங்களிளெல்லாம் திரிபுண்டரமாகத் தரித்துக்கொள்ளவேண்டும். இதன் விவரமும், மந்திரங்களும் தீக்ஷை பெற்றுக்கொள்ளும்போது குருவினால் தெரியும்.

வினா. திரிபுண்டரமாகத் தரிக்கவேண்டியதின் கருத்தென்ன ?

விடை. ஆணவம், கர்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் நீக்குமென்கிற குறிப்புத்தோன்ற மூன்று வகையாகத் தரிப்பது.

வினா. தீக்ஷையில் பேதமுண்டோ ?

விடை. சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாண தீக்ஷை என மூன்றுவகையுண்டு. அவைகளில் சமய

தீக்ஷை எவ்வகைப்பட்டவர்களுக்குஞ்செய்யப்பட்டது. மற்ற இரண்டுவகைத் தீக்ஷையும் சிஷனுடைய பக்குவ மறிந்து செய்யத்தக்கது. முதல் தீக்ஷைக்குச் சமய தீக்ஷை என்கிற பெயர் எதனுலுண்டாயதெனில், இந்தத் தீக்ஷை செய்துக்கொண்டால் சைவசமயத்திற்கு உரியவனுகின்முன். அதனல் சமய தீக்ஷை என்று பெயர். இந்தச் சமய தீக்ஷையினுஞ் சிறப்புள்ளதாகையால், விசேஷ தீக்ஷையென்றும், மோக்ஷம் தரத்தக்கதாகையால் நிர்வாண தீக்ஷை என்றும், மற்ற இரண்டு தீக்ஷைக்கும் பெயருண்டாயிற்று. நிருவாணமென்பது மோக்ஷத்திற் கொருபெயர்.

வினு. இந்தத் தீக்ஷைக்கு குருவா யிருப்பவர்கள் எந்த வருணத்தாராய் இருக்கவேண்டும்?

விடை. ஆதிசைவப் பிராமண குலத்தில் பிறந்து, உபநயனவிதியும் இம்மூன்றுவகைத் தீக்ஷையும் பெற்று, ஆசாரிய அபிஷேகமுஞ் செய்துக் கொள்ளப் பட்டவராய் இருக்கவேண்டும். ஆகமத்தில் லக்ஷங் கிரந்தம், முகஸ்த முள்ளவராயிருந்தாலே உத்தம குருவென்று பெயர். (ரு௰௲) (உ௰௲) முகஸ்தமாயிருந்தால் மத்திமம், அதமம் என்கிற கிரமத்தில் வைக்கப் படுவார்கள். இது முக்கியபக்ஷம்.

வினு. விபூதி தரித்துக்கொண்டாலே போதுமே; உருத்திராக்ஷமுந் தரித்துக்கொள்ளவேண்டியதென்ன?

விடை. விபூதியும், ருத்திராக்ஷமுஞ் சிவசின்ன மாகையால் அவ்விரண்டுமே தரிக்கவேண்டும். இதுவு மன்றி விபூதியானது சிலவேளை வெயர்வை, மழை, முதலியவற்றால் குலைந்து போனாலும், ருத்திராக்ஷ மிருந்தால் தோஷமில்லை. ராக்ஷதரால் பீடிக்கப்படு கிற பாபம் அணுகாது.

வினா. ருத்திராக்ஷம் எந்த இடத்தில் எவ்வாறு உண்டாயிற்று ?

விடை. பரமசிவன் திரிபுர சங்காரஞ் செய் யும் காலத்தில், கோபாவேசத்தினால் அவருடைய நேத்திரங்களில் நீர்த்துளி விழ, அதிலுண்டாயிற்று. இந்தக் காரணத்தினால் அதற்கு ருத்திராக்ஷ மென்கிற பெயருண்டாயிற்று. ருத்திரன் = சிவன்; அக்ஷம் = நேத் திரம்; அதற்குக் கண்மணியென்றும் பெயர். சிவபூசை செய்கின்றவர்கள் கழுத்தில் ருத்திராக்ஷ மில்லாமல், பூசித்தால் அந்தப் பூசையைப் பரமசிவன் அங்கீகரித் துக் கொள்ளமாட்டார். ஆதலால் சிவபூசை செய் கின்றவர்கள் அவசியம் ருத்திராக்ஷ கண்டிகைத் தரித் துக் கொள்ளவேண்டும்.

வினா. எத்தனை ருத்திராக்ஷம் தரித்துக்கொள்ள வேண்டியது ?

விடை. உச்சியி லொருமணி, காதொன்றிற்கு ஆறுமணி வீதம் இரண்டு காதிற்கும் பன்னிரண்டு

மணி, சிரசில் நாற்பது, கழுத்தில் முப்பத்திரண்டு, மார்பில் நூற்றெட்டு, புயத்தில் முப்பத்திரண்டு, கைகளில் இருபத்துநான்கு ஆக இவ்வாறு தரிக்க வேண்டும்.

வினு. ருத்திராக்ஷங்களி னிடைகளி லேதாவது மணிகள் கோற்கலாமா ?

விடை. இடையிடை பவளம், ஸ்படிகமணி, பொன்மணி இவைகளைக்கோற்து அணியவேண்டும். இவைகளுமன்றி வில்வப்பழ வோட்டையுஞ் சேர்க்கலாம். இவ்வாறு சேர்க்காமல், ருத்திராக்ஷங்களை மாத்திரம் கோற்துத் தரித்துக்கொண்டால் எத்தனைமணி சேர்த்தாலும், ஒருமணி அணிந்ததிஞ லுண்டாகும் பலனே கிடைக்கும். இந்த ருத்திராக்ஷங்களில் ஒரு முகம், ஐந்துமுகம், பதிஞேருமுகம், பதிஞன்குமுகம் உள்ள மணிகளை வைத்துப் பூசித்தாலும் சிவார்ச்சனை செய்ததிலுண்டாகும் பலன் கிடைக்கும்.

வினு. விபூதி, ருத்திராக்ஷம் தரித்துக்கொள்ளவும், சிவதரிசனம் சிவார்ச்சனை செய்யவும், விவேகமில்லாத மிருகம் முதலான ஜெந்துக்களுக்குச் சிவபுண்ணியம் எவ்வாறு சித்திக்கும் ?

விடை. பரமேசுவரன் ஆன்மாக்களை சிருஷ்டி செய்கிற காலத்திலே தான் ஸ்தலமாகவும், தீர்த்தமாகவும், மூர்த்தியாகவும் திருமேனி கொண்டெழுந்தருளிச்

சிவஸ்தலங்களிலே புழு முதலானவை சனித்தாலும், வசித்தாலும், நசித்தாலும், சிவபுண்ணிய முண்டாக வும், தீர்த்தத்திலே மீன் முதலான ஜீவராசிகள் சனித் தாலும், வசித்தாலும், நசித்தாலும்; நாற்கால் மிருகங் கள், மனிதர்கள், பக்ஷிகள் முதலானவைகள் தீர்த்தத் தைக் குடித்தாலும், முழுகினாலும், சிவபுண்ணியமுண் டாகவும், நெற்பயிர் முதலானவைகள் தண்ணீர் பாய்ந்து விளைந்தாலும், அந்தத் தண்ணீர் பாய்ந்து விளைந்த நெல்லைப் பறவை முதலானவை புசித்தாலும், சிவபுண்ணிய முண்டாகவும், அருளினாற் சிவலிங்கப் பெருமானுக்குச் செய்யும் அபிஷேகம், அருச்சனை, நிவேதனம் முதலானவைகளுக்குறிய விருக்ஷஜாதிகளா கவும், நெல் முதலிய பயிர்களாகவும், பசு முதலாகிய மிருக ஜாதிகளாகவும், செனிப்பித்துச் சிவபுண்ணிய முண்டாக்குவர்.

வினா. பசு முதலான சில மிருகங்கள் சிவலிங் கப் பெருமானுக்குச் செய்யும் அபிஷேக முதலான வைகளுக்கு எவ்வாறு உதவுகின்றன ?

விடை. பசு தன்னிடத்தில் உண்டாகும் பஞ்ச கவ்வியம், கோரோசன மிவைகளால் உதவுகின்றது. பஞ்ச கவ்வியமாவது பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பவைகளாம். இவ்வாறு அபிஷேகத்

திற்கு உதவுதலுமன்றிப் பால், தயிர், நெய் நிவேதனத்திற்கும் உதவுகின்றது.

வினா. இன்னும் எதற்கு உதவுகின்றது ?

விடை. பசுவும், அதனினமாகிய எருதும், பேரி, மத்தளம் முதலான தோற்கருவி மூலமாகவும், யாழ் முதலான நரம்புக்கருவி மூலமாகவும் உதவுகின்றது.

வினா. மற்ற எந்த மிருகம் இவ்வாறு உதவுகின்றது ?

விடை. புழுகுப் பூனை, கஸ்தூரி மிருகம் இவைகளு முதவுகின்றது. புழுகு என்பது புனுகு என வழங்குகின்றது. மயில், விசிறி ரூபமாயும் உதவுகின்றது.

வினா. விருக்ஷ ஜாதிகள் எவ்வாறு உதவுகின்றன ?

விடை. வாழை, பலா, மா, தெங்கு முதலிய சில விருக்ஷங்கள் அபிஷேகத்திற்கும், நிவேதனத்திற்குமுரிய கனிவர்க்க மூலமாகவும், எலுமிச்சை, நார்த்தை முதலாகிய சில விருக்ஷங்கள் அபிஷேகத்திற்கும், நிவேதனத்திற்கும் கனி மூலமாகவு முதவுகின்றன. இதுவுமன்றி திருமஞ்சன திரவிய மூலமாகவும், ஓமதிரவிய மூலமாகவு முதவுகின்ற விருக்ஷங்கள், செடிகள், கொடிகள் முதலானவைகளுமுண்டு. சில விருக்ஷங்கள், செடிகள், கொடிகள் சிவார்ச்சனைச்

குறிய திருப்பள்ளித்தாம மூலமாக உதவுகின்றன. திருப்பள்ளித்தாமமாவது பத்திரபுட்பம். இந்தப்புட்பங்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதற்பூ என நான்கு வகையாக யிருக்கின்றன. கோட்டுப்பூ விருக்ஷங்களிலுண்டாவது: கொடிப்பூ, முல்லை முதலாகிய கொடிகளி லுண்டாவது; நீர்ப்பூ: தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர் முதலானவை. புதல் புதர் இவ்விரண்டும் ஒரு பொருளைக் குறித்த சொற்கள். ஸ்தல விசேஷத்தினால் சரிக்குருவி, நாரை என்னும் பக்ஷிகளும், பன்றியும் மோக்ஷ மடைந்தன. இதுவுமன்றி யானை, நாகம், சிலந்தி, வானரம், தவளை, அணில், எறும்பு முதலியவைகள் மோக்ஷமடைந்தன. திருஞானசம்பந்த சுவாமிகள் திருவொற்றியூர் என்னும் ஸ்தலத்தில் ஆண்பனையை பெண்பனை யாகும்படி பதிகமருளிச் செய்தபோது, அந்த பனைமரத்திற்கு மோக்ஷங் கிடைத்தது. சந்தானசாரியர்களில் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் சிதம்பரத்தில் ஒரு முள்ளிச்செடிக்குச் சட்சுதீக்ஷை செய்ய, அச்செடி அப்போதே தீய்ந்து மோக்ஷமடைந்தது.

வினா. விருக்ஷ ஜாதிகளுக்கு உயிரில்லையே, அப்படியிருக்க, அவைகளுக்குச் சிவபுண்ணியங் கிடைக்குமென்றும், அதனால் மோக்ஷம் அடையுமென்றும் சொல்வதெப்படி ?

விடை. எண்பத்துநான்கு லக்ஷ ஜீவபேதங்களிற் சரமென்றும், அசரமென்றும் இரண்டு பிரிவுண்டு. அவ்விரண்டில் நடப்பதும், பறப்பதும், ஊர்வதுமாகிய ஜீவன்கள் சரமென்றும்; சஞ்சரிப்பில்லாமலிருக்கும் ஜீவன்கள் அசரமென்றுஞ் சொல்லப்படும். சரம், அசரம் என்பதற்கு ஸ்தாபரம், சங்கமம் என்று பெயர். சரிக்கு முயிர் தேவர், மனிதர், மிருகங்கள். பறக்கு முயிர் பக்ஷிஜாதிகள். ஊருமுயிர் புழு முதலானதுகள். சரிக்காத உயிர் மலைகள், விருக்ஷஜாதிகள். அசரமாகிய இந்த உயிர்களுக்குப் பரிசமென்னும் ஓரறிவே யிருப்பதினால் ஓரறிவு உயிரென்றுப் பெயர். பரிசமென்பது தொடுதல்; அவைகள் தொட்டால் அறிந்து கொள்ளும்.

வினா. சிவபுண்ணியம் உண்டாவதற்கு ஏதுவாகிய சிவஸ்தலங்களின்னதென்று எவ்வாறு தெரியப்படும்?

விடை. சைவபுராணம் பத்திற்குட்பட்ட ஸ்தல புராணங்களினாலும், தேவார பதிகங்களிருப்பதினாலும் ஸ்தலமென்று தெரியப்படும்.

வினா. புராணங்களாற் சொல்லப்படும் ஸ்தலங்களுக்கெல்லாம் தேவாரமுண்டா?

விடை. பூர்வம் எல்லா ஸ்தலங்களுக்குமே இருந்தது. இப்போது இருநூற்றெழுபத்தி நான்கு ஸ்தலங்களுக் கிருக்கின்றன.

வினு. இப்படியிருக்கின்ற சிவ ஸ்தலங்களோடு எழுந்தருளித் தேவாரத் திருப்பதிகங்கள் பாடியருளிய சைவசமயாசாரியர்களுடைய போதனைகளைப் போல வகை தொகை விபரமாய் அந்தந்த சிவஸ்தலத்தின் திருத்தேவாரப்பதிகங்களை தாங்களும் வாசித்து, உலகத்தார்களுக்கும் போதனை செய்யவேண்டிய போதனுசக்தியை இப்போதிருக்கிற சில பிரபல்லியமான ஆதீனபராள் கைநழுவவிட்டு வேறோர் கடமையிலிருக்கிறார்களே அதென்ன? "கடனென்ப நல்லவையெல்லாங் கடனறிந்து, சான்றாண்மைமேற் கொள்பவர்க்கு" என்றிருக்க, இதை மறந்து அப்படி அவர்கள் செய்யவேண்டிய கடனைச் செய்யாமலிருக்கலாமா?

விடை. ஆம், அவர்கள் செய்யவேண்டிய கடனாகிய தமிழ்வேத பாராயணம், அல்லது திருத்தேவாரப் பணிவிடையைச் செய்யாமலும், தாங்கள் வாசிக்கத் தெரியாத மவுட்டியாளாகவும் "கற்றிலனாயினுங் கேட்க வஃதொருவன் கொற்கத்தினூற்றாந் துணை" என்றபடி காதினாற்கூட கேழ்க மனமில்லாமல் திருஅங்கமாலையின் திருப்பாடலிற் சொல்லியபடி தாங்கள் சைவசமயாசாரியராய் மின்னின்றவர்கள் நடக்கக் கடனென்பதை மறந்தபடியால், சைவாதீனபராளுடைய பந்தியில், அல்லது மயேஸ்வர பூஜையில்

ஸ்ரீவைஷ்ணவர்கள் பந்தியில் திருவாய்மொழிப் பிர பந்தஞ் சொல்லத் தெரியாதவர்களை பந்தியைவிட்டு விலக்குவதுபோலத் தமிழ்வேதமாகிய திருத்தேவாரப் பதிகங்கள் ஓதத்தெரியாதவர்களை மயேஸ்வர பூஜை யின் பந்தியைவிட்டு விலக்கவேண்டியதே. "தாமின் புறுவதுலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்." "பொறியின்மையார்க்கும் பழியன்றறி வறிந்தாள் வினையின்மைபழி" என்றும் சொல்லி யிருக்கின்ற படியே அவர்கள் சுத்தமாய் நடவாமல் முழுமையுங் கைவிட்டுவிட்டபடியினாலே சில பெரியோர்களான கலைக்கியான வல்லவர்களால் லோகோபகாரமாய் வெளி யிட்டு அச்சிற் பதிப்பித்துவந்த இந்த சைவசமய விளக்க வினாவிடைப் புத்தகங்களைப் பதினாயிர மிரு பதினாயிரம் வரையில் வாங்கி வைத்துக்கொண்டு தங் களிடத்தில் பாதகாணிக்கைவைத்து சரணாகதியடை ந்த சிஷர்கள் வாசித்துக் கடைத்தேறும்படி ஒவ்வொன் றைக்கொடுத்து சிவகடாக்ஷத்தினால் இதைவாசித் துணர்ந்து ஜென்ம சாபல்லியமாகக்கடவீர்களென்று ஆசீர்வதித்தால், அது வெகுகிருபை தங்கி தங்கள் கடமையை வெளிப்படுத்தி வைக்கும் குருவார்த்தை யாக நம்பி, இரவும் பகலுஞ் சிந்தித்து அபிவிர்த்தி யாவார்கள். அந்த அதிசூட்சுமத்தை யுடைய உபா யம் பொருந்திய வகையை இந்த மடாதிபதிகளறி

ந்து "எண்ணென்பவேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங், கண்ணென்ப வாழுமுயிர்க்கு." "கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர்" என்றபடி அறம் முப்பத்திரண்டிலும் சிறந்த வித்தியா தருமத்தை சைவ சமயத்தவர்கள் யாவருஞ் செய்யவேண்டிய கடமையாயிருக்க சைவ சமயக் கட்டுப்பாடு செய்கிற சிரேஷ்டத்துவம் பொருந்திய ஆதீனபராள் மாத்திரம் வித்தியா தருமங்களைச் செய்யாமல் ஏது காரணத்தால் சுத்தமாய் கைநழுவவிட்டு விட்டார்கள்? சிவக்கியானம் விளங்கும்படியான புத்தகங்களைத் தானமாகவாவது அல்லது பாதகாணிக்கை வாங்குவதற்குப் பிரதி உபகாரமாகவாவது கொடுக்காமல் நம்பின சிஷர்களாகிய சைவ சமயத்தவர்களை நட்டாற்றில் விடலாமா? "சரணம் சரணமென்றுனே காராதே விட்டால் திரணமல்லவோ நான் தானே" என்ற வாக்கியத்தை சாட்சியாக வைத்துக்கொண்டு வித்தியா தருமத்தை அல்லது "மன்னுவான் மறைகளோதி மனத்தினுள் விளக்கொன்றேத்தி" என்றபடி கலைக்கியானத்தை அபிவிர்த்தி செய்யும்படி எச்சரிக்கைச் செய்கின்றனம்.

தெய்வீகமாய் விளங்கிய அநாதி சைவசமயாசாரியர்களாகிய மூவர்கள் முத்திக்குக் காரணமாகிய எண்வகையும் விளங்க, திருவாய் மலர்ந்தருளிய தமிழ்

வேதமாகிய தேவாரப் பாடல்பெற்ற மகாதேவ ஸ்தலங் திருநாமங்களும், மாதேவன் திருநாமங்களும், ம[illegible] திருநாமங்களும், அத்தேவாலய யாத்திரை [illegible] வர்களுக்கு வழிகாட்டியாக அத்தேவாலயங்களிருக் கின்ற கடிகைவழி அளவைப் பிரமாணங்களும், [illegible] பெருமான் ஒவ்வொரு சிவஸ்தலத்தில் நடத்திய [illegible] புதங்களும், ஒவ்வொரு சிவஸ்தலத்திற்கு இத்தனை தேவாரத் திருப்பதிகங்களிருக்கிறதென்றும், புண் ணியநதிகள், தீர்த்தங்களின் திருநாமங்களும், ஒவ் வொரு அடியார்கள் அவதரித்த ஸ்தலங்கள், ஜென மித்த மாதங்கள், திருநக்ஷத்திரங்கள், அவரவர்கள் செய்த தவங்கள், வைராக்கியமாகிய திருத்தொண்டு கள், முத்தி பெற்ற சிவஸ்தலங்கள், மாதங்கள், திரு நக்ஷத்திரங்கள் முதலிய யாவும் சைவப்புராணங்களிற் காண்க.

அரகரா என்னாமூடர், திருவெண்ணீ றிடாமூடர்,
அடிகள் பூசியாமூடர், அறிவுநூல் கல்லாமூடர்,
நெறியிலே நில்லாமூடர், அறம் விசாரியாமூடர்,
நரகேழிற் புரளவீசும். (திருப்புகழ் புத்தி[illegible])

MA[illegible]